Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 48 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 01 2023





**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copies
Inside 32 Pages, B&W 20lb with colour glossy cover
C $ 310.00 + Graphic Extra...
Large Format Digital Printing
Design Only
C $ 9.99 / Sq. Ft (C$ 34.99 / ft.)
1000 Business Cards
with out design C $ 59.99 One Side - 16pt Card Stock
with out design C $ 29.99 One Side, 10pt Card Stock
We print all kind of products
Call Me: Silver Print House - 647 712 1266

விளம்பரத்துக்கு அழையுங்கள்:
437.345.4203

RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608



## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**போராட்டப் பளுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பளுவை மறுதோளிலுமாக, உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகிறேன்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# நிலையான நினைவாகிச் சென்றோன் நினைவோடு தமிழீழம் வெல்வோம்




## "தமிழீழம்"

இது தனித்த ஒன்றுதான் பிரிந்த இரண்டின் சேர்க்கையல்ல.

ஒரே இனம், ஒரே மொழி, ஒரே நிலம், ஒரே வானம், ஒரே கடல், ஒரு தமிழீழம்: தமிழீழம் தனியென்றே அல்லாமல், இருவேறு துண்டுகளின் கூட்டல்ல.

வல்லிபுரக்கோயில் மணற்காட்டில் – அலைகளாய் விழுந்து உவகையோடு எழுகின்ற இந்துமா ஆழி, "எங்கள் கடல்!" என்றால் 'குமண'க் கரையின் மணலில் உருண்டு, கண்களை எரித்துச் சுகம் விசாரிப்பதும் "எங்களோடது!" தான் 'கருவேலன் காட்டு' ஓரத்தில் மோதி பாறையோடு சுறாவும் திருக்கையும் தருவதும் "நம்மடது" தான் – தமிழீழம் ஒன்று தான்!

'வாளேந்திய சிங்கம்' தானேந்திடும் வாளால் துண்டாக்கிப் போட்ட பின்பு, கூட்டாகிச் 'சங்கம்' அமைக்க – இது சோவியத் சாம்ராஜ்ஜியமும் அல்ல துகள்களாக்கிப் பிளவுபடுத்தி சீரழித்துச் சிதைத்துவிட – இது 'பொசுனியா'வும் அல்ல.

'கரந்தனாற்றில்' கால் நனைத்துக் கொண்டு தமிழீழம் என்றால், வரண்டுபோய்க் கிடக்கின்ற 'வழுக்கியாறும்' தமிழீழம்தான். மன்னாரை ஈரமாக்கும் 'பறங்கியாறு'ம் அதுதான், 'மணலாறு'ம் எங்களதேதான்!

**இலங்கையில்–**




ஆசியாக் கண்டத்தின் தெற்கே, இந்துமா சமுத்திரத்தின் தாலாட்டில் மிதக்கும் அந்த மாங்காய் வடிவச் சிறு தீவில் –

**அதன் வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்குப் பிரதேசங்களில் – தமிழர்கள் காலாதி காலமாக வேரோடி வாழ்ந்த 25,600 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு தமிழர் மூதாதையரின் வியர்வை கலந்த 23,000 சதுர கிலோமீற்றர் கடற்பரப்பு இவற்றின் மேலாக கூரையாய் வரியும் தமிழர் சரித்திரத்தின் மூச்சுக் கலந்திருக்கும் வான் பரப்பு – இந்த மூன்றுக்கும் ஒரே பெயர், அதுதான் தமிழீழம்.**

வடக்கையும் கிழக்கையும் "இணையக்கூடாது! இணைக்கக் கூடாது!" என்று கொழும்பிலிருந்து கத்திக்கொண்டிருக்கிறார்கள். அது எமக்குப் புரியவுமில்லை புரிந்துகொள்ள நாம் விரும்பவுமில்லை விரும்பவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில், 'இணைப்பது' அல்லவே எமது பிரச்சினை. தமிழீழத்தை (வடக்கையும் கிழக்கையும்) 'பிரிக்கக்கூடாது' என்பதுவே எமது பிரச்சினை. தேசம் பிரியக்கூடாது, யாரும் பிழைக்கவே கூடாது என்பதற்காகவே நாங்கள் செத்துக் கொண்டிருக்கிறோம் விடவே மாட்டோம்!

ஓரங்களில் அரிக்கப்படாத – நடுவினில் பிரிக்கப்படாத – நிறைவு குறைக்கப்படாத, உருக்குலைவற்ற தமிழீழத்தை மீட்டெடுத்து, தமிழனின் சுதந்திர தனியரசைப் பிரகடனப்படுத்தும் வரை, விடவேமாட்டோம்!

**கொக்குவில் புயலாகும் கொக்குத்தொடுவாய் களமாடும் கொம்மாந்துறை அனலாகும் தனியரசு எமதாகும் வரை தமிழீழம் போராடும். பலாலி வீதியிலிருந்து புனானை வீதியீறாக விடுதலைப் போர் நீளும். புலி ஆடும் கொடி எங்கள் நிலம் ஆளும் நாள் வரை போர் நீளும்! போர் நீளும்! விடவே மாட்டோம்.**

**தமிழீழம் ஒன்றேதான் ஒரு நாடு, ஒரு கொடி , ஒரு தலைவன்.**

ஒரு ஆவணி மாதத்து அதிகாலை. கச்சான் காற்றின் மெல்லிய வருடல் வைகறைப் பொழுதில் சூரியக் குளியல். எழுவான் கறையின் உளமெல்லாம் உற்சாகம். சாளைவலைத் தோணிகளில் கரை திரும்பிக்கொண்டிருந்த தேசத்தின் மீனவ சமூகம். "கெதியாய் போயிடவேணும் குமார்– கச்சான் வலுத்துதெண்டால் மறுகா தண்டு வலிக்கிறது கஸ்டமா போயிடும்…" இவ்விரண்டு ஆட்கள், சிலதுண்டு வலைகளோடு பிடித்தெடுத்த மீன்கள் கரை நோக்கிய வள்ளங்கள்.

பதினைந்து வயதேயான இளம்பராயம் தேவைக்கும் அதிகமாகத் துளியும் பெருக்காத தேகம் தோள்கள் திரண்டு, நெஞ்சு அகன்று, இடுப்பு ஒடுங்கி, கால்கள் வலுத்து – உடலை வருத்தி வருத்தி உழைத்ததால் இறுக்கமாகிய அழகு மேனி சுருள் சுருளாகப் படரும் தலை முடிகள் முழு நிலவாக ஒளிரும் முகம் சதா புன்னகைக்கும் கண்களின் ஆழத்தில் உற்றுப் பார்த்தால் மட்டுமே தென்படும், அந்த சோகத்தின் மெல்லிய கீறல். நெற்றியில் சிந்தனையின் சுருக்கவரிகள், துடுப்பை வலிந்து குமார் நிமிர்ந்து நிலத்தைப் பார்த்தான். மேற்புறத் தொடுவானில் 'குப்பிமலை'யும் 'தொப்பிக்கல்'லும் பனி மூட்டங்களினூடு மெல்லிய நீல முகடுகளாய்… கண் குளிர்ந்த காட்சி.

தோணி கரை ஒதுங்கியது. கடலுக்குள் இறங்கியவன் குனிந்து வள்ளத்திலும் தண்ணீரிலும் தொட்டு இரண்டு கைகளையும் நெஞ்சில் வைத்து கண்களை மூடினான். வலைகளை இழுத்து, பட்டிருந்த மீன்களை எடுத்து, கூடையில் நிறுத்து, விலை பேசி… கச்சான் பலமாக ஊதத் தொடங்கிற்று. இரவு தொழிலுக்குப் போய்வந்தவர்கள் கண்ணாப் பற்றையோரங்களில் ஓய்வாக அரட்டையடிக்க, விற்போரும் வாங்குவோரும் நிறைய, களை கட்டிக் கலகலத்தது கடற்கரை. குமாருக்கு அவசரம் நேர நெருக்கடி, மிதிவண்டியை உருட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். "குமார் சாப்பிடாமல் போறான்… அவனைச் சாப்பிடச் சொல்லுங்கோ.." மீன்வாடிக்குப் பக்கத்திலிருந்த குடிலுக்குள்ளிருந்து ஒரு உடன்பிறவாச் சகோதரியின் பாடக்குரல். "குமார் சாப்பிட்டுட்டுப் போவன் தம்பி…"

"தங்கைச்சிக்குப் பள்ளி துவங்கிற நேரமாயிற்று தண்ணை.. ஏத்திப்போய் விடனும்… நான் பிறகு வாறனண்ணை…" குடிலுக்குள் எட்டிப்பார்த்து…"அக்கா வாரனுங்க…" சைக்கிளை உருட்டினான்.

"ம்…" குடிலுக்குள்ளிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு கச்சானோடு கலந்தது.

கல்குடா ஒரு பூர்வீக தமிழர் நிலம். கல்மடு அங்கொரு சிற்றூர். அண்ணார்ந்து பார்த்தாலும் வறுமைக்கோடு தெரியாத ஆழத்தில் வாழ்ந்த மக்கள். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் சுந்தரபுரியாக மாறிவிட்ட தங்களூரில், மண்ணின் பண்பாடுகளையும், இனத்தின் உன்னதங்களையும் கறைபடியாமல் காத்தார்கள் அவர்கள். அதிலொரு குடும்பம் அவனுடையது.

சிங்களத்தைச் சரளமாகப் பேசியவன். உல்லாசப் பிரயாணிகளை வழிகாட்டக்கூடியளவுக்கு ஆங்கிலமும் பேசினான். பகலில் அவனுக்கு அதுதான் வேலை. பக்குவமாய் பாதுகாக்கும் இரண்டொரு நல்ல உடைகள் அவனுக்குத் துணை. சின்னவன், நல்லவன், பண்பானவன், ஏழை. விடுதிச் சொந்தக்காரர் நாளாந்தம் அவனுக்கென ஊர்பார்க்கும் வெள்ளைக்காரர்களை வைத்திருப்பார். கூட்டிக்கொண்டு அவன் பகலெல்லாம் திரிவான். மானிடப் பண்புகளும், சீரிய ஒழுக்கங்களும் மலிவு விலைக்கு ஏலம்போன உல்லாச விடுதிகளில், உடலாலும் உள்ளத்தாலும் சேதப்படாமல் வாழ்ந்தவன்.

**அற்புதமான போராளி, அசாதாரணமான வீரன், கிடைத்தற்கரிய நண்பன், மாண்பான மனிதன். வாழ்க்கையை அவன் கற்றுத் தரவில்லை, வாழ்ந்தவனைப் பார்த்து நாங்கள் கற்றுக் கொண்டோம்.**

மாலையானதும் மீண்டும் ஓட்டம். மிதிவண்டியில்களைக்க களைக்க ஓடி பள்ளிக்கூட வாசலில் காவலிருப்பான். பள்ளிவிட்டதும் – அக்காவையும் தங்கையையும் திரும்ப வீட்டிற்கு ஏத்திப் போவான். வீட்டு வேலைகளில் சின்ன ஒத்தாசைகள் செய்துவிட்டு, இரவானதும் கடற்தொழிலுக்குப் போகப் புறப்பட்டு விடுவான்.

இருள் கவிந்த அந்தி நேரம். மிதிவண்டியை உருட்டிக்கொண்டு அவன் படலைக்கு வர, பின்னாலே ஓடிவந்த தங்கைச்சி கைகளில் பிடித்தாள், திரும்பினான். அக்கா அவனையே பார்த்தபடி வாசல் கதவோடு சாய்ந்திருந்தாள், தங்கை ஏக்கமாய் பார்த்தாள்.

"இண்டைக்கு மட்டும் தொழிலுக்குப் போகவேணாமண்ணா… எங்க கூடவே இருங்கண்ணா…" அவள் கேட்டது தங்களது மகிழ்வுக்காக அல்ல, அவனது ஓய்வுக்காக மட்டுமேதான். இரக்கமாய்க் கேட்டவளைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. தொண்டைக்குள் எதுவோ அடைக்க, குரலுக்குப் கண்ணீர்தான் வந்தது. தங்கையை கட்டி அணைத்துக்கொண்டான். கட்டுப்படுத்தமுடியாத கண்ணீர் அவனுக்கும் வந்தது, அவளுக்கும் வந்தது. துன்பச் சிலுவைகள் சுமந்தனர் பிஞ்சுகள். துயரமே வாழ்வான வாழ்வு. தங்கையின் தலையில் தடவிக்கொண்டே அவன் சொன்னான். "இண்டைக்கு நான் போகலேண்ணா… நாளைக்கு நாம் சாப்பிடமுடியாதம்மா!"

மிதிவண்டி அவனோடு உருளத் தொடங்கியது.

எதிர்பாராமல் ஒருநாள் கண்களை மூடிக்கொண்டு துடிக்க விட்டுச் சென்றுவிட்டார் அன்பு அப்பா! அடுத்து வந்த நாளொன்றில், தனியாகத் தவிக்கவிட்டுக் காணாமல் போனாள் அம்மா! துயரக் கடலில் தூக்கிவீசப்பட்டனர் பச்சைக் குழந்தைகள். துடுப்பற்ற படகாய் மிதந்தவர்களுக்கு துணையாகி வாழ்ந்தான் குமார் அவன்தான் எங்கள் லக்ஸ்மணன். தோழர்களின் அன்புக்குரிய பொம்மரண்ணன். சகோதரிகளை தன் நெஞ்சுக் கூட்டுக்குள் குடியிருத்தி வைத்திருந்த அன்புச் சகோதரன். சகோதரிகளின் ஒரு அசாதாரண பாசத்தைக் கொண்டிருந்தவன் அவன். தங்கச்சியில்தான் தனது உயிரையே வைத்திருந்தான். எல்லையற்ற அன்பால் பாதுகாத்து, எத்தனையோ கனவுகளோடு அவளை வளர்த்தான். அன்னையாகவும், தந்தையாகவும், அண்ணனாகவும், தம்பியாகவும் – அவர்களுக்கு எல்லாமாகவும் அவனே வாழ்ந்தான். தனக்கு கிடைக்காத கல்வி அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஆதங்கத்தோடு அவன்பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல் அனுபவித்த கஸ்டங்கள் சொற்பமல்ல. அவர்களுக்காக, சுமைகளில் அழுத்தியவனைப் பார்த்து, அவன் அறியாமல் அவர்கள் அழுவார்கள். கடுங்குளிருக்குள் அலைகளோடு மாரடித்துவிட்டு வருபவன், பகல் வெயிலுக்குள் வெளிநாட்டுக் காரர்களோடு அலைந்தான். பாவம். ஓய்வே இல்லை… ஓயவே இல்லை…!

அனையிரவுச் சமரில் உலகம் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது. எங்கும், எவரிலும் அதே பேச்சு, அதே சிந்தனை. புலிவீரர்களை ஈன்ற தாய்மார்கள் மட்டுமல்ல, திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் இருந்த தோழர்களும் தவித்துக் கொண்டிருந்தார்கள். பெரும் சமர்க்களம் ஒன்றில், இயக்கத்தின் பெரிய தொகுதி வீரர்கள் போரிட்டுக்கொண்டிருக்கும்போது, அந்தக் களத்திற்கு அப்பால் நிற்கும் ஒரு போராளியாலும் கூட அமைதியாக இருக்கமுடியாது. அந்த மனப்போராட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நீங்களும் விடுதலைப் புலிகளின் போராளியாக இருக்கவேண்டும். சந்திவெளித் திடலிலிருந்த 'கிலோ வண்' முகாமின் போராளிகளும் இதே தவிப்போடுதான் தகவல் தொடர்புச் சாதனத்தைச் சூழ குழுமுவார்கள். ஒவ்வொரு காலையிலும் வரும் களநிலைச் செய்திகள், வீழ்ந்தவர்களின் நீண்ட பட்டியலைத் தருகின்றபோது – ஆன்மா துடிக்கும். அந்த ஒரு காலை, அவர்கள் காத்திருந்த வேளை – தரையிறங்கி நடந்த படையினரை எதிர்கொண்ட நேற்றைய

**ஒரு மேற்சட்டை, ஒரு காற்சட்டை, ஒவ்வொரு உள்ளாடையோடு ஒரு சாரம் – கிழியக் கிழியத் தைத்து, எந்தச் சோலியுமில்லாம லக்ஸ்மணன் ஓராண்டைச் சமாளிப்பான், கந்தையாக கந்தையாக கசக்கி கட்டி – சிக்கனமாய் வாழ அவன் கற்றுத் தரவில்லை, அப்படியாக வாழ்ந்தவனை பார்த்து நாங்கள் கற்றுக் கொண்டோம்.**

சண்டையில் களப்பலியானோர் பெயர்கள்… வரிசையாய்… ஒன்றன்பின் ஒன்றாய்… அதிலொன்றாய்..! "லெப்ரினன்ற் சுனேத்ரா! – வேலாயுதபிள்ளை ஜெயந்தி, கல்மடு, கற…! மட்டக்…!…" அவன் அதிர்ந்ததை… முகம் இறுகியதை… நிலை குலைந்ததை… அருகிலிருந்தவர்கள் கவனிக்கவேயில்லை. "அம்மான்! … என்ர தங்கைச்சி…" என்று விம்மியபோது, பக்கத்திலிருந்த தோழனின் கைகளில் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதபோது, நண்பர்கள் விக்கித்துப் போனார்கள்.

கட்டிக்காரி கல்லூரியில் சிறந்து விளங்கியவள் விவேகமானவள் – 'ஸ்டெதஸ்கோப்' வளைந்து தொங்கும் தோள்களோடு அவள் ஒய்யாரமாக நடந்து வருவதைக் கண்நிறையப் பார்க்க காத்திருந்தவன் காலம் அவளது தோள்களில் துப்பாக்கியைத் தொங்கவிட்டுக் களத்திற்கு அனுப்பியபோதும் வருத்தப் படாதவன்.

"என்ர தங்கச்சி!… என்ன விட்டுட்டுப்போட்ட" – சொல்லிச் சொல்லி அழுதுகொண்டே இருந்தான்.

லக்ஸ்மன் –
பொம்மர் –

மற்றவர்களிடம் காணமுடியாத சில அபூர்வ தன்மைகளைக் கொண்டிருந்ததால் – மெதுவாக, ஆனால் உறுதியாக வளர்ந்து மேல்நிலைக்கு உயர்ந்த புரட்சிவீரன்.

தென் பிராந்திய யுத்த அரங்கில், தன்னிகரில்லாப் போர் நாயகர்களாக விளங்கிய குறிப்படத்தக்கவர்களுக்குள் – தானும் ஒருவனாக ஒளிர்ந்த சண்டைக்காரன்.

களமுனையில் மாறுபடும் தளநிலமைகளின் போக்குகளுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுபதிலிருந்து, பொறுப்பெடுத்த பணிகளை எவ்வளவு விரைவாகவும் எவ்வளவு சுலபமாகவும் ஆற்றி முடிக்க இயலுமென்பதையே சிந்தித்துச் செயற்படுத்துவது – எதிலெல்லாம் ஈடுபட்டானோ அதிலெல்லாம் – அவன், மதிநுட்பத்தோடு காட்டிய அசாத்திய துரிதத்திற்காகவே 'பொம்மர்' என்பது அவனது மறுபெயர் ஆனது. முற்றுமுழுதாகவே அது காரணப்பெயர்தான். 'பொம்மரண்ணா! பொம்மரண்ணா…" என்று ஒரு கூட்டம், பொழுதெல்லாம் அவனைச் சுற்றிக்கொண்டே திரியும்.

அவன் –

அதிர்ந்து அனல் கக்கும் படைக்கலங்களின் முன்னால், துணிந்து களமாடும் ஒரு போர்வீரன், சிக்கலாய் இறுகும் சண்டைகளையெல்லாம் நுட்பமாய் வென்றிடும் ஒரு தளபதி, நம்பி வேலைகளைக் கொடுத்துவிட்டுப் போனால், இம்மியும் பிழையாமல் முடித்திடும் செயல் வீரன். ஒருநாள் அவனுடன் பழகக் கிடைத்தாலும் ஒருநாளும் அழியாத நினைவாகும் நண்பன். இடையறாத போராட்ட அனுபவத்தில் இனங்காணப்பட்ட நேர்த்தியான பொறுப்பாளன், விரிவுரை நிகழ்த்துகையில் ஒரு படையியல் பேராசான், தேடிக்கேட்டுப் படிக்கையில், ஒரு அடக்கமான மாணவன், கட்டுப்பாடாய் – ஒழுக்கமாய் – தமிழினத்தின் பண்பாட்டு நெறிபிறழாத மனிதனாய் வாழ்ந்து, இயக்கத்தின் உயிரிய விழுமியங்களைக் காத்து நின்ற புலிகளின் போராளி ஆலோசகனாகி, அறிவுரைகள் சொல்லி, நின்ற அந்தப் படைவீரன் – சாதனை செய்து, சரித்திரம் படைத்து, பிரபாகரன் என்ற தலைவனுக்கு பெருமையினைத் தந்த புலிவீரன்.

ஆயித்தமலை, வரம்புயரத்திற்கு நீருயர்ந்து நெல் உயர்ந்திருக்கும் வயற்சேனை. அது – நீண்டு விரிந்து கிடக்கும் பரந்த வெளி, ஒரு கரையிலிருந்து மறுகரை பார்த்தால், நான்கைந்து கிலோ மீற்றருக்கு எறும்பே இல்லாத வெட்டைத் தரை. நெற்கதிரைத் தவிர மண் மட்டத்திற்கு மேல் மங்கலாயும் ஏதும் தெரியாத புவியமைப்பு. இந்தச் சேனை நிலத்தை சரி நடுவாகக் குறுக்கறுத்துப் போகிறது – கரடியனாற்றையும் உன்னிச்சையையும் தொடுக்கும் பெருந்தெரு. இந்த வீதியால் நாளாந்தம் நடை ரோந்து போனது, சிங்கள அதிரடிப் படையணி ஒன்று. இந்த வெட்டை நிலப்பாதையில் வைத்து இந்த அணி மீது தாக்குவது பற்றிக் கதைத்தால், தேர்ந்த ஒரு படைத்துறை நிபுணன் 'முட்டாள்' என்பான். ஏனென்றால் தாக்குதலுக்குச் சாதகமே இல்லாத தளநிலைச் சூழல் அது. ஆனாலும் தாக்குதலை நடாத்துவது என முடிவெடுத்தான் லக்ஸ்மன். புலிகள் இயக்கத்துக்குரிய தனித்துவம் அதுதான்! ஏற்கனவே தலைவர் சொல்லியிருப்பது போல, "அதீதமான தன்னம்பிக்கைதான் எமது பலமும் பலவீனமும்." பாதகமானது எனக் கருதப்பட்ட அதே காரணத்தையே அவன் சாதகமாக்கினான். எதிர்ப்பை எதிர்பாராமல் எதிரி கவனயீனமாக நகரும் வேளை – அவதானமற்ற அலட்சியமாகவும், உசார் நிலையற்ற உல்லாசமாகவும் காலாற நடைபயிலும் அந்தப் பகைப் படையணி, ஒரு வாய்ப்பான இலக்குத்தான்!

தானே நின்று பொம்மர் வேவு பார்த்தான். இடம் தேர்ந்து, நாள் குறித்தான் வீரர்களை ஒழுங்குபடுத்தித் தயாரானான். தளபதி ஒப்புதல் தந்தார், புறப்பட்டான்.

உருமறைப்பு – போரில் இது ஒரு முக்கிய அம்சம். தாக்குதல் நடவடிக்கைகளின் போது இன்றியமையாத ஒரு பாத்திரம் இதற்குண்டு. உருமறைப்பானது, எதிரிக்கு எம்மை மறைப்பதுடன் எமது தந்திரோபாயத்தையும் மறைக்கின்றது. அதனால், தாக்குதலின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் அதுவும் பெரும்பங்கு வகிக்கின்றது. களத்தைத் திறப்பது நாங்களாய் இருக்கவேண்டும் அவனாய் அல்ல.

ஒவ்வொரு வீரனாக லக்ஸ்மன் தானே உருமறைத்துவிட்டான். போரின் இந்தத் தனிக்கலை – அவனுக்கு ஒரு கைவந்த கலை.

வரம்போடு வரம்பாக, நீரோடு நீராக, நெல்லொடு நெல்லாக, புல்லோடு புல்லாக… காத்திருந்தார்கள் பாயத் தயாரான விடுதலைப்புலிகள். வந்து கொண்டிருந்தான் – சாகத் தயாரான வகையில் பகைவன் .
பார்க்கின்ற தூரத்திலிருந்து கேட்கின்ற அளவுக்கு நெருங்கினான் – எட்டித் தொடக்கூடியவாறு… இதோ பகைவன்! பக்கத்தில்!! கணக்கான இடைவெளி சரியான தருணம். வெற்றிக்குரிய மணித்துளி இதுதான்! தீப்பொறிகக்கும் 'ஜீ திறீ' யோடெழுந்து, ஆட்டத்தைக் கோலாகலமாக ஆரம்பித்துவைத்தான் லக்ஸ்மன். ஆவேசத் தாக்குதல்! உயிர் சிலிர்க்க வைக்கும் சண்டைக் கணங்கள். வெட்டை வெளித் தரையில் இந்த உச்சிப் பகற்பொழுதில் எங்கிருந்தையா வந்தனர் புலிகள்…? நடப்பதென்னவென உணரும் முன்னரே சுருண்டு விழுந்தனர் பகைவர். சிங்களக் கொமாண்டோ அணி தன்னில் 14 பேரை பிணங்களாய் இழந்தது. தப்பியோடியவர்கள் தப்பிப் போனமை ஏதோ கடவுள் கிருபையால்தான். என்ன அதிசயம் பாருங்கள், விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான ஒரு துளி இரத்தமும் சிந்திடாமல் பெற்றெடுத்த வெற்றி அது!

'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்பதற்கு, சாலப் பொருத்தமானவன் அவன். வெளித் தோற்றத்தால் என்றல்ல, உள்ளத்து அழகினால் எங்களது உள்ளங்களை ஊடுருவி வாழ்ந்த ஒரு அற்புதமான நண்பன். அவனது அகத்திலும் முகத்திலும் மிளிர்ந்த பேரழகு. எல்லோரையும் வசீகரித்ததென்றால் மிகையேயல்ல. இனம்புரியாத அந்த ஈர்ப்புச் சக்தியின் வீச்செல்லைக்குள் அகப்படாதவர்களே இல்லை. எவரையும் கவரும் அபூர்வம் அவனில் மறைந்து கிடந்ததை நாங்கள் கண்டோம். எங்கும், எப்போதும், எவ்விதமாகவும் எடுத்துக்காட்டிச் சொல்லக் கூடியவனாக வாழ்ந்த – மாண்பான மனிதன் லக்ஸ்மன்.

ஒரு மேற்சட்டை, ஒரு காற்சட்டை, ஒவ்வொரு உள்ளாடையோடு ஒரு சாரம் கிழியக் கிழியத் தைத்து, எந்தச் சோலியுமில்லாமல் லக்ஸ்மன் ஓராண்டைச் சமாளிப்பான். கந்தையாகக் கந்தையாக கசக்கிக் கட்டி – சிக்கனமாய் வாழ அவன் கற்றுத் தரவில்லை அப்படியாக வாழ்ந்தவனை பார்த்து நாங்கள் கற்றுக்கொண்டோம்.

ஈடுபட்ட பணிகளிலெல்லாம் ஈடுபாட்டோடு இயங்கி – ஆற்றல், புலமை, திறமை அனைத்தையும் அர்பணித்து வரலாற்றில் முத்திரையைப் பதித்தவர்கள் எண்ணக் கூடியவர்கள்தான். லக்ஸ்மனும் – அவர்களில் ஒருவனாகி, தலைவரின் விருப்பத்துக்குரிய ஒரு போராளியாகி, அவரது சிந்தையைக் கவர்ந்து உயர்ந்தான். அந்த உயர்ச்சி "லக்ஸ்மனைப் போல…" என அவர் முன்னுதாரணம் காட்டுகின்ற உன்னதத்தை அவனுக்குப் பெற்றுத் தந்தது.

அவன் நின்ற இடம் சிறப்பைப் பெற்றத்து. குழுவொன்று மதிப்பைப் பெற்றது. அவனிடம் நின்றதால் விளையாட்டில் திறமை, சமையலில் உரிசை,வேலையில் வேகம் சண்டையில் வீரம். "பொம்மரண்ணான்ர குறூப்"ற்கு தனிப் பெயர் இருந்தது. ஏனைய குழுக்களிலிருந்து வேறுபாடு அப்பட்டமாய்த் தெரிந்தது.

காடென்ன? மலையென்ன? கடும் குளிர்தானென்றால் என்ன? நடுப்பகல் வெயிலென்ன? நள்ளிரவுப் பொழுதென்ன…? பொம்மரண்ணா வேலைக்கென்றால் பின்னுக்கு நின்றவர்கள் கிடையாது, பின்னுக்கு நிற்பாட்ட ஆளே கிடையாது.

பெரும் தாக்குதலுக்குப் புறப்படும் போது, அவனது ஒழுங்கமைப்பைப் பார்க்கலாம். தாக்குதற்திட்டம் பெரிதாகும் போது, தயார்ப்படுத்தல் மிகப் பெரிதாய் இருக்கும் தயார்ப்படுத்தல் பெரிதாகும் போது, அவனுக்கே அது ஒரு சுமையாய் குவியும். எல்லாச் சுமைகளையும் தானே ஏற்பதால், அவனது தளபதிகளுக்கு வேலைப்பளு குறையும்.

பானை சட்டி எடுத்து, பருப்பு அரிசி பொதி செய்யும், படைவீரருக்கு வலைஎண்ணி, மருந்துப் பெட்டியில் பொருள் பார்த்து… ஒவ்வொரு 'கிளைமோரு'க்கும் இடம் காட்டி, ஒவ்வொரு வீரனுக்கும் நிலை காட்டி, ஒவ்வொரு அங்குலமாய்

வியூகம் போட்டு... சென்று, வென்று மீண்டும் வரும்வரை, ஒவ்வொரு அடியிலும் அவனது உழைப்பிருக்கும்.

லக்ஸ்மன் - நீங்காத நினைவுகளாய் ஆழ்மனதில் பதிந்து போன அடலேறு அவன். ஒன்றை நினைக்க இன்னொன்று வருகின்றது. அதை நினைக்க வேறொன்று வருகின்றது. வருவதை நினைக்க அடுத்தடுத்து வருகின்றது... ஓயாத எண்ணங்களாக, நினைவுகளின் தொடரசைவு. நினைவுகள் அழிவதில்லை, அழிவதேயில்லை.

பயிற்சியில் நாங்கள் சோம்பலாகி பம்மாத்து விட்டபோது பக்கத்தில் நின்று தெம்பாக்கி சேர்ந்து வளைந்தவன் தளத்தைச் செப்பனிட நாங்கள் கிடுகு காவி கூரை வேய, கம்பு தூக்கி மூடை அடித்துக் கூடவே முறிந்தவன். பிழைகள் இழைத்து நாங்கள் தவறுகள் செய்தபோது, பக்குவமாய் அணுகி எம்மை அன்பால் திருத்தியவன், தவறுகள் செய்துவிட்டு நியாயம் சொல்வோர் மத்தியில், தனது தவறுகளாச் சுட்டியபோது அமைதியாய் ஏற்றுக் கொண்டவன். தவறுகளுக்காக தண்டனைகள் தந்தபின்பும், மென்மையாய் விளக்கி அறிவுரை சொன்னவன். கீழ் இருக்கும் போராளி பெரியதாய்ச் செய்தபோது, மேல் இருக்கும் தளபதியிடம் இனங்காட்டி விட்டவன். கண் திறப்பான் என்று நாங்கள் காத்திருந்தபோது, கண் திறக்கவில்லை அவன் காவியமாய் ஆனான்.

**நினைவுகள் அழிவதில்லை, அவை அழிவதேயில்லை!**

வாவிகளில் மீன்பிடித்து வந்து கறியாக்கித் தந்தான் - உண்டு சுவைத்தோம். காண்டைக் காட்டுச் சண்டைக்குப் போய் ஆறு கடக்கத் திக்குமுக்காடியபோது 'வெல்லங் கம்பில்' கயிறு திரித்து ஆறு கடத்திக் கூட்டிப் போனான் - வென்று மீண்டோம். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வீரனாகினான் - சேர்ந்து மகிழ்ந்தோம். நீருக்குள் மீனாகி நீந்தினான் - பார்த்து வியந்தோம். ஆறிழுத்துப்போன தோழர்கள் போனவர்தானென விக்கித்து நின்ற வேளை , நீரிழுத்துப் போகாமல் மீட்டெடுத்துப் போட்டான் - அதிர்ந்து இன்புற்றோம். மேற்கத்தைய இசையில் 'கிற்றார்' துணையுடன் சொற்றுணை வேதியனை - மணியாய்ப் பாடினான் - கூடிக் குதூகலித்தோம். பானு அண்ணனோடு வேகநடைப் போட்டியில் நாரி வருத்தத்தால் பின்தங்கிப் போனான் - நாமும் வருந்தினோம். தளத்தில் நிகழ்ந்த ஆணழகன் போட்டியில் தசைகளை முறுக்கி எண்ணையில் ஜொலித்தான் - பார்த்து இரசித்தோம். காத்திருந்து நாங்கள் பரிதவித்துப் பார்த்திருக்க பூத்து விழி சிரியாமலே... பூ உதிர்ந்து போனான் - உயிருக்குள் அழுகின்றோம்.

**நினைவுகள் அழிவதில்லை, அவை அழிவதேயில்லை...**

சண்டை செய்யத் தெரிந்தவன். சண்டையைச் செய்விக்கவும் தெரிந்தவன், போராளிகளை நிர்வகிக்கத் தெரிந்தவன், போரை நிகழ்த்தவும் தெரிந்தான்.... களங்களிற்குத் திட்டமிட்டத் தெரிந்தவன், சமர்களை வெல்லவும் தெரிந்தவன். லக்ஸ்மன் ஒரு போரியல் வல்லுனன்தான் போரின் ஒவ்வொரு கூறிலும் அவன் தலை சிறந்து விளங்கியவன் படைத்துறையில் ஒரு நிபுணனாகவே திகழ்ந்தவன். அவன் பங்கேற்ற களங்களிலெல்லாம் ஒரு All Rounder ஆக சகலகலா வல்லவனாக மட்டுமல்ல, Man of the Battle ஆக - அந்தக் களத்தின் நாயகனாகவும் விளங்கியவன்.

'ஜீ . திறீ ஏ . திறீ' சுரிக்குழல் துப்பாக்கிதான் சிறுரக சுடுகலன்களுக்குள் அவனது விருப்பத்தேர்வு. தலைவர் அவர்களுக்கும் அது பிடித்தமானது, 'கெக்லர் அன்ட் கொச்' நிறுவனம் உருவாக்கிய பெருமையைப் பெற்றது.

சீறிப்பாயும் சன்னங்களினூடு 'ஜீ .திறீ' யோடு அவன் முன்னேறும் விரைவு சண்டைக்காரர்களையே அசத்தும். சுட்டுக்கொண்டிருக்கும் பகைவனைச் சுட்டு வீழ்த்தும் வேகம்... அந்த வேகத்தோடேயே அடுத்தவனைக் குறிவைக்கும் லாவகம்... அதே சமநேரத்திலேயே வீரர்களை நகர்த்திச் செல்லும் திறமை... பார்ப்பவர்களை அதிசயிக்கவைக்கும். தொய்ந்து கொண்டிருக்கும் சண்டைக்குள் அவன் புகுந்தால், புலிகள் பிய்த்துக்கொண்டு பாய்வார்கள். 'வோக்கி' யில் அவனது குரலைக் கேட்டாலே, அவர்களுக்குள் புதுத்தெம்பு புகுந்து விளையாடும். மூக்கென்றால் மூக்கு , கண்ணென்றால் கண், நெஞ்சென்றால் நெஞ்சு - சொல்லிச் சுடுவான் லக்ஸ்மன் - மில்லி மீற்றரும் விலகாது, நம்பி வைத்திருந்த 'ஜீ .திறீ'யும் அவனுக்குத் துரோகம் இழைத்தது கிடையாது... அவனொரு அசகாயசூரன்.

கிழக்கு தளபதியின் நேரடிக்கவனிப்பின் கீழிருந்த பிரத்தியேக தாக்குத லணியின் கொமாண்டராக லக்ஸ்மன் நியமிக்கப்பட்டிருந்தான். மட்டு - அம்மாறை மாவட்டப் படையணியில் இவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். அங்கு போரிட்டாலும் சரி, லக்ஸ்மன் இல்லாமல் அந்தப் படையணி சண்டையிட்டதேயில்லை. அவனை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கலாம் எப்பேர்ப்பட்ட தாக்குதலுக்கும் திட்டமிடலாம். "பொம்மரண்ணரின் குறூப் இறங்கியது எந்தப் பக்கம்...?" என்பதை அறிய, தாக்குதல் திட்ட வரைபடத்தைச் சுற்றி போராளிகள் ஆவலாய் நிற்பது வழமை. எதிரியின் பலமான அரண் என்று கருதும் மிகவும் இறுக்கமான ஒரு பகுதி லக்ஸ்மனின் அணிக்கு ஒதுக்கப்படும். திட்டம் செயல் வடிவம் பெறும்போது, முதலில் விழும் பகுதியும் அதுவாகத்தானிருக்கும். எங்களுக்கு 'பொம்மரால்' வான் வழியால் மட்டும்தான் பிரச்சினை. பகைவனுக்கோ, 'பொம்மரால்' கால் வைத்த இடமெல்லாம் பிரச்சினை. அவனது பேரைக் கேட்டாலே ஒரு கலக்கம் 'வோக்கியில்' குரல் கேட்டாலே நடுக்கம் எதிரிக்கு அவனென்றால் நடுக்கத்தோடு காய்ச்சல். இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்லை.

உன்னிச்சையில் இடர்பாட்டுக்குள் சிக்கிய ஒரு பலமுனைத் தாக்குதல் மேஜர் லத்தீப்போடு இன்னும் சிலரை, எதிரியின் எல்.எம்.ஜி ஒன்று வீழ்த்திற்று. அந்த முனையில் வியூகம் குலைந்தது, சண்டை குழம்பியது, வீரர் தடுமாறிய நேரம். அந்த எல். எம்.ஜியின் நிறுத்தமற்ற கதறல் முழுத் தாக்குதலையுமே பிசகிவிடச் செய்யக்கூடிய இக்கட்டான தருணம். பொருத்தமானவனாகத் தேவைப்பட்டான், இன்னொரு முனையில் நின்ற லக்ஸ்மன். எல்.எம். ஜி. அரணுக்கு நேரெதிராக ஒரு அணியை இறக்கி கவனத்தை திசை திருப்பிவிட்டு, எதிரியின் பார்வையில் படாமல் தூரத்தால் வளைந்து நகர்ந்து, அந்த அரனைப் பின்பக்கத்தால் நெருங்கி பிடரியில் தாக்கினான். அந்த எல். எம்.ஜி விடுதலைப் புலிகளின் சார்பாகத் திசைமாறிய பின்னர் - வெற்றியும் புலிகளின் கைகளுக்கே வந்தது.

முதலாவது ஈழப்போரில் பிரசித்தி பெற்றது வடமராட்சித் தாக்குதல் - அப்போது மட்டக்களப்பிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு படையணியில் அவன் சாதாரண போர்வீரனாக பங்கேற்றான் இரண்டாவது ஈழப்போரில் சரித்திரம் படைத்தது பூநகரித் தாக்குதல் - இப்போது மட்டக்களப்பிலிருந்து பங்கேற்ற ஒரு படையணியில் ஒரு பகுதிப் பொறுப்பாக லக்ஸ்மன் படை நகர்த்தினான்.

நாகதேவன்துறை இறங்கு தளத்தை கடற்புலி வீரர்கள் வளைத்துக்கொள்ள - ஞானிமடம் முகாமையும், அதற்கு அரணாய் அமைக்கப்பட்டிருந்த காவலரண் தொகுதிகளையும் உள்ளடக்கிய - கடற்படைத் தளத்தை மட்டக்களப்புப் படையணி முற்றுகையிட்டது.

தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகத்தில், கறுக்காய்த் தீவுப் பகுதி முன்னணிக் காவலரண் வரிசையைத் தகர்த்தெறிந்து பாதை திறந்து, ஞானிமடம் முகாமை அந்தப் பக்கத்தால் தாக்கவேண்டியது லக்ஸ்மனின் தாக்குதற் பிரிவுக்குரிய பணி.

கிழக்குப் பகுதியால் இவர்கள் முகாமை நெருங்கும் அதே சமநேரத்தில் - தளத்தினது தெற்குப் பகுதியில் - பூநகரியிலிருந்து வரும் பிரதான வீதியோரக் காவலரண்களை உடைத்துக் கொண்டு உள்நுழையவேண்டிய இன்னொரு தாக்குதற் பிரிவு, சிக்கல்பட்டுவிட்டது.

தென்பகுதியில் எதிரி பலத்த எதிர்பார்ப்பைக் காட்டியதால், அந்த அணி உட்புகுவது கைகூடவில்லை. சண்டை நீள நீள அணி சேதப்பட்டுக் கொண்டேயிருக்க அணி பலவீனமாகிக்கொண்டே போனது. குறிப்பிட்ட நேரத்தில் அந்த அணி லக்ஸ்மணின் தாக்குதற் பிரிவுக்குத் துணையாக வந்து சேராததினால், முகாமைத் தாக்குவது சாத்தியப்படவுமில்லை.

சமர் நீண்டுகொண்டிருந்தது வீரர்கள் வீழ்ந்துகொண்டிருன்தனர் இரவு விடிந்துகொண்டிருன்தனர் நிலைமை பிசகிக்கொண்டேபோனது. உடனடியாக மாற்றுவழி ஒன்று தேடவேண்டிய கணங்கள், தென்பகுதியில் இறங்கிய தாக்குதலணிக்குப் புதுப்பலம் சேர்த்து ஒரு அகோரத் தாக்குதலை நிகழ்த்தி, அரண்களை உடைத் தெறிய வேண்டும். தளபதி பானு தீர்மானித்தபோது, மனக்கண் முன்னாள் லக்ஸ்மன் நின்றான். இத்தகைய இறுக்கமான சூழ்நிலைகளை இழக்கிவிடுவதற்குரியவன் அவன்தான்.



கிழக்குப் பகுதியிலிருந்த அணி பின்னுக்கு எடுக்கப்பட்டு தென்பகுதிக்கு கொண்டுவரப்பட்டது. குழுக்கள் துரிதமாக மீள ஒழுங்கமைகப்பட்டன. உடனடித் தாக்குதற் பிரிவொன்று உருவாக்கப்பட்டது. லக்ஸ்மன் தான் கொமாண்டர். மூர்க்கத்தனமான ஒரு தாக்குதல், கணிக்கப்பட்ட நேரத்துக்குள் காரியம் முடிய தெற்குப் பாதுகாப்பு அமைப்பையும் உடைத்தெறிந்துகொண்டு, புலிகளின் தாக்குதற் பிரிவுகள் ஞானிமடம் முகாமைச் சுற்றி முற்றுகையிட்டன. பூரணமாகவே புலிகளுக்குச் சார்பான தலைநிலை பிறந்தது. எனினும் - பொழுது விடிந்து விட்டதால் முகாம் தாக்குதல் அடுத்த இரவுக்கு ஒத்திப்போடப்பட்டது.

மூன்றாம் நாள் மாலை - ஞானிமடம் கடற்படை முகாமை அழித்து, பூநகரி கூட்டுத்தளத் சமரை வென்று, புலிகளின் படையணிகள் வெற்றி வாகையொடு மீண்டுவர.

லக்ஸ்மனை மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத்தின் துணைத் தளபதியாகத் தலைவர் அவர்கள் நியமித்தார்.

தென்பிராந்தியப் படையணி புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுமெருகூட்டப்பட்டு - புதிய நிர்வாகக் கட்டமைப்புகளுடன் மட்டக்களப்புக்கு புறப்பட்டபோது எவ்வளவு குதூகலத்தை அவனில் கண்டோம்!

தளபதி ராம் இதற்குத் துணைச் சேனாதிபதியாக அவன்...

எத்தனை கனவுகள்... எத்தனை கற்பனைகள்... தென்தமிழீழ மெங்கும் விடுதலைப் புலிக்கொடி நாட்டும் ஆசைகள்...

கட்டுமுறிவுக்குளம் தாக்குதலில் பாதிப்பொறுப்பெடுத்துச் சென்றவன், பூமாஞ்சோலைத் தாக்குதலில் முழுவதையும் பொறுப்பெடுத்தான். மட்டு நகரிலிருந்து ஏழே கிலோ மீற்றர் தூரம்தான். சற்றுச் சிக்கலான இலக்கு. சிக்கெடுத்துச் சிக்கெடுத் துப் பழகிப்போனவன் - முடிவெடுத்தான்.

படைபடையாய்ச் சென்றனர், பகையை வென்றனர். மீளத் திரும்பிட அவர்கள் தயாரான வேளை... அதிர்ந்து ஒரு வெடி யோசையோடு அந்தத் துயரம் நிகழ்ந்தது!

**எட்டாண்டு காலமாக, ஓயாத புயலாகச் சுழன்றடித்த அந்த வீரனைக் கைக் குண்டின் சிதறல்கள் சுயநினைவற்று வீழ்த்தின பொம்மரண்ணா, பொம்மரண்ணா. என்று அமைதியாய்க் கதறிய தோழர்களின் மடியில், சாவோடு போராடிய அந்த வீரன் மரணத்தை வென்றான், மனங்களில் நிறைந்தான் எம் முன் நிலையான நினைவானான்...!**

போரெடுத்துப் போரெடுத்துப் பகைவனை அழித்துக்கொண்டேயிருந்த எங்களின் பொம்மரை, மறைந்து கிடந்த ஒரு பகையாளன் கைக்குண்டால் வீழ்த்திவிட்டான்.

**எட்டாண்டு காலமாக ஓயாத புயலாகச் சுழன்றடித்த அந்த வீரனை கைக்குண்டின் சிதறல்கள் சுயநினைவற்று வீழ்த்தின. "பொம்மரண்ணா...! பொம்மரண்ணா...!!" என்று அமைதியாய்க் கதறிய தோழர்களின் மடியில், சாவோடு போராடிய அந்த வீரன் –மரணத்தை வென்றான், மனங்களில் நிறைந்தான், எம்முள் நிலையான நினைவானான்!**

அவனது பெயர் சொல்ல - அவனது கைகளில் வளர்ந்த நூற்றுக் கணக்கான போராளிகள், தானை வீரர்களாகவும், தளபதிகளாகவும் இன்று அணிவகுத்துள்ளார்கள்.

மகிழடித்தீவிலிருந்து புங்குடுதீவு வரை தமிழன் வென்றெடுக்கும் நாளினுக்காக அவர்கள் போரெடுப்பார்கள்! போரெடுப்பார்கள்!! லக்ஸ்மனின் புதைகுழி மீதினில் விடுதலைப் புலிக் கொடி நாட்டுவார்கள்.

களத்தில் - 19.5.1995




# வட தமிழீழத்தில் இருந்து தென் தமிழீழம் நோக்கி...!

ஏப்ரல் 16, 2023

அன்னை பூபதியின் 35வது நினைவுதினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஊர்திப்






பவனி ஆரம்பமானது.

அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் நினைவிட முன்றலில் இருந்து இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஆரம்பமாகியது.

நல்லூரில் அடையாள உண்ணாநோன்பில் ஈடுபட்டவர்களும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்த ஊர்தியானது தமிழர் தாயகத்தை வலம்வந்து மட்டக்களப்பிலிருக்கும் அன்னை பூபதி நினைவிடத்தை சென்றடையும்.





# ஈகைத்தாய் அன்னை பூபதி அவர்களின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி!

ஏப்ரல் 16, 2023

அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்திற்கு வந்திறங்கிய இந்தியப்படைகள் பல்லாயிரம் தமிழர்களை கொன்று அட்டூழியம் செய்துகொண்டிருந்த நேரத்தில்..

இந்திய ஆதிக்கத்திற்கு எதிராக நீர்மட்டுமே அருந்தியவாறு ஒரு மாதகாலமாக இந்தியப்படைகளுக்கு எதிராக அகிம்சைப்போர் புரிந்து, தமிழர்களின் விடுதலைக்காக தன்னியிர் ஈந்த

"ஈகைத்தாய் அன்னை பூபதி" அவர்களின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் நினைவிடத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி ஆரம்பமாகி சென்று



கொண்டிருக்கிறது.

வழித்தடத்தில் மல்லாவி நகரை அடைந்த ஊர்தி மல்லாவி நகரில் மக்கள் அஞ்சலிக்காக தரித்து நின்றது. பின்னர் ஆலங்குளம் துயிலும் இல்லத்தின் முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் அங்கிருந்து அனிஞ்சியன் குளம் பகுதியில்




அமைந்திருக்கும் ஆழ ஊடுருவும் படையின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சிவனேசன் அவர்களின் நினைவிடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன் பின்னர் வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்ட பின் நாளைய பயணத்துக்காக இருப்பிடம் நோக்கி சென்றது பூபதியம்மா

# யாழ். நல்லூரில் உண்ணாநோன்பு போராட்டம் ஆரம்பம்!

ஏப்ரல் 16, 2023

“தமிழர் எம் மரபுரிமைகள் பாதுகாப்போம்” எனும் தொனிப் பொருளில் அடையாள உண்ணாநோன்பு போராட்டமும் தமிழர் தாயகம் தழுவிய கையெழுத்துப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் அழைப்பு விடுக் கப்பட்ட குறித்த போராட்டம் யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றலில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமானது. அடையாள உண்ணாவிரத போராட்டமானது மாலை 5 மணிவரை இடம்பெற வுள்ளது.

தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வ அமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் போராட்டத்தின் பிரதான கோரிக்கைகள்

1.அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர் மாணம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2. குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப் படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3.இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற் றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4.மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும் பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத் தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5.போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக் கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற் பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.



ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.





# யாழ். பல்கலைகழகத்தில் அன்னை பூபதிக்கு மலர் வணக்கம்!

ஏப்ரல் 17, 2023

இந்தியப் படைகளால் தமிழர் தாயகத்தில் வலிந்து திணிக்கப்பட்ட போரையும் அடாவடிகளையும் நிறுத்த



வலியுறுத்தி மட்டக்களப்பு மண்ணில் உண்ணாவிரத அறப்போர் புரிந்து காந்தி தேசத்திற்கே அகிம்சையைப் போதித்து தன்னுயிர் நீத்த அன்னை பூபதியின், உண்ணாவிரத அறப்போராட்டத்தின்இறுதி வார நினைவேந்தல் இன்று (17.04.2023) ஞாயிற்றுக் கிழமை , பல்கலைகழக மாணவர்களால் உணர்வுபூர்வ மாக நினைவேந்தப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவேந்தல் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகம் உள்ளிட்ட தமிழர் வாழும் தேசம் எங்கும் இவ்வருடம் நினைவேந்தப்பட்டுக் கொண் டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.







# எல்லை மீள் நிர்ணய வரைவு அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளது!

ஏப்ரல் 17, 2023

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணய வரைவு அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதையும், அதுதொடர்பில் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்க முடிவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இந்த விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும் இவ் எல்லை மீள் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிர்வாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற் கொள்ளப்படாமை மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரத்தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில், அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புக்கள் தங்களின் எழுத்துமூல பரிந்துரைகளை, எல்லை மீள் நிர்ணயக் குழுவின் மாவட்டத் தலைவரான அரசாங்க அதிபருக்கு முகவரியிட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தவிசாளருக்கு பிரதியிட்டு எதிர்வரும். 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைப்பதன் மூலம், உரிய




மாற்றங்களை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் என்றார்.

# யாழ். கொக்குவில் கிழக்கில் அன்னை பூபதியின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!

ஏப்ரல் 19, 2023

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் அன்னைபூபதித் தாயின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் அஞ்சலி நிகழ்வு இன்று புதன் கிழமை(19-04-2023) முற்பகல்-11.30 மணியளவில் யாழ். கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொருளாளர் கனகையா கிருஷ்ணகுமார் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து அன்னை பூபதித் தாயின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து எழுத்தாளரும், தமிழ்த்தேசியப் பற்றாளருமான மு.ஈழத்தமிழ் மணி நினைவுரை நிகழ்த்தினார்.

கிழக்கில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.



# மட்டக்களப்பில் உணர்வெழுச்சியோடு இடம்பெற்ற ஈகைச்சுடர் அன்னை பூபதி அவர்களின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஏப்ரல் 19, 2023

அன்னை பூபதியின் 35வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் உணர்வெழுச்சியோடு இடம் பெற்றது.

அன்னை பூபதியின் நினைவுதின ஏற்பாட்டுக்குழுவால் மட்டக்களப்பில் அஞ்சலி நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்து உயிரிழந்த மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக நேற்று காலை முதல் பிற்பகல் வரை அடையாள உண்ணா விரதம் முன்னெடுக்கப்பட்டது.

அன்னை பூபதியின் ஆத்மசாந்தி வேண்டி திதிகொடுக்கும் நிகழ்வும் மாமாங்கேஸ்வரத்தில் இடம்பெற்று அன்ன தானமும் வழங்கப்பட்டது.

அன்னை பூபதியின் திருஉருவப்படம் தாங்கிய வாகன பேரணியானது மாமாங்கேஸ்வரத்தில் இருந்து கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயம் வரை சென்றது.

அங்கிருந்து நடைபவனியாக நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் கல்லறை வரையில் சென்று அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அன்னை பூபதியின் பிள்ளைகள், அன்னை பூபதியின் நினைவுதின ஏற்பாட்டுக்குழுவின் உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள்



பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் முதல்வர் உட்பட பலரும் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

நினைவிடத்தில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதுடன், மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவுதினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டதுடன் வாகரை பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# யாழ். நல்லூரில் அன்னை பூபதிக்கு வணக்க நிகழ்வு!

ஏப்ரல் 19, 2023

தமிழர்களுக்காக அகிம்சை வழியில் போராடி தன்னுயிரினை ஈகம் செய்த தியாகத்தாய் அன்னை பூபதி அம்மாவின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் புதன்கிழமை  நல்லூரடியில் உள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் நடைபெற்றது.

அன்னை ஈகைச் சாவினைத் தழுவிக்கொண்ட நேரமான 8.45 மணி முதல் தியாகத்தாயின் உருவப்படத்திற்கு பொதுமக்கள் மலரஞ்சலி  செலுத்தி வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து இறுதி நினைவேந்தல் நிகழ்வு மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் நினைவேந்தலில் ஈகைச்சுடரினை தியாகத்தாய் அன்னை பூபதியின் பேத்தி ஏற்றிவைப்பார்.



# வடக்கு கிழக்கு தமிழர் தாயகமெங்கும் போராட்டம்!

ஏப்ரல் 20, 2023

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் தமிழர் தாயகமெங்கும் இன்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் பிரதிநிதிகளுடன் மன்னார் ,யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்ட பெண்கள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு மாற்றீடாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தியே பெண்கள் அமைப்பினரால் கவனயீர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனிடையே ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீருக்கு காரணமான பயங்கரவாத தடைச்சட்டமானது இன்னொரு முகமூடியில் மேலும் பலம் கொண்டு வருவதை மக்களால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என வடகிழக்கு மாகாண பெண் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இன்று கிழக்கில் மட்டக்களப்பிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண பெண்கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்பாக போராட்டம்




முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் பத்தினியார் மகிழங்குளம் முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் இடம்பெற்றிருந்தது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என்று கோரி அம்பாறையில் போராட்டம்!

ஏப்ரல் 20, 2023

இலங்கையில் புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என்று கோரி வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு என்ற அமைப்பு வியாழக்கிழமை (20) மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியது.







அம்பாறை மாவட்டம்  மத்திய முகாமில் உள்ள நான்காம் கிராமம் பாமடி என்ற பிரதேசத்தில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

அதன் போது அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த இந்த கூட்டு முன்னணியின் சுமார் 300 பெண்கள் மும்மொழிகளிலுமான சுலோகங்கள் பொறித்த பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

இறுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என்ற தலைப்பிலான மகஜரை பகிரங்கமாக வாசித்து கோஷம் எழுப்பி போராட்டத்தை நிறைவு செய்தனர்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் அறிவிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வேண்டாம் எனவும், கருத்து சுதந்திரம் பறிபோகும் என்றும், இது முற்று முழுதாக வேண்டாம் என்பதையும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

ஏப்ரல் 20, 2023

டக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிரான கவனயீர்பு போராட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்றைய தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கபப்ட்டது.

இதன் போது "மக்களை நிம்மதியாக வாழ விடுங்கள்" , "பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டும்" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஆர்ப்பாட்டகார்களால் நடாத்தப்பட்டது.

இதன்போது பொதுமக்கள் பதாதைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.
















# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிராக மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்!

ஏப்ரல் 20, 2023

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்பட்ட உள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சுற்று வட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் பிரதிநிதிகளுடன் மன்னார் மாவட்ட பெண்கள் இணைந்து குறித்த கவனயீர்ப்பு நிகழ்வை முன்னெடுத்தனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி குறித்த பெண்கள் அமைப்பினரால் கவன ஈர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு நிகழ்வு குறித்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டது. மன்னாரில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில் சுமார் 200 பேர் வரை கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உடனடியாக நிறுத்த கோரி குறித்த பெண்கள் அமைப்பினரால் அறிக்கை ஒன்றும் மக்கள் பார்வைக்கு வெளியிடப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.










# முல்லைத்தீவில் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற அன்னை பூபதியின் 35ம் ஆண்டு நினைவேந்தல்!

ஏப்ரல் 20, 2023

முல்லைத்தீவில் உணர்வுபூர்வமாக அன்னை பூபதியின் 35 ம் ஆண்டு நினைவேந்தல் இடம்பெற்றது.

நாட்டுப்பற்றாளர் தியாகச் சுடர் அன்னை பூபதியின் 35ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு பகுதியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் மேஜர் கதிரவன் அவர்களின் தந்தையார் ஏகாம்பரம் ஜயா ஏற்றினர்.

ஈகைச்சுடரினை சமூக செயற்பாட்டாளர் முல்லை ஈசன் ஏற்றி வைத்ததை தொடர்ந்து மலர்வணக்கம் இடம் பெற்றது.

நிகழ்வில் உடையார்கட்டு பிரதேச வர்த்தக சங்க செயலாளர் மற்றும் பொருளாளர் வர்த்தகர்கள், உடையார் கட்டு பிரதேச முச்சக்கர வண்டி சங்க தலைவர் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள்,பிரதேச பொதுமக்கள் சமூக செயற்பாட்டாளர்கள் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி நிகழ்வை உணர்வுபூர்வமாக சிறப்பித்தனர்.










# பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை எதிர்த்து வவுனியாவில் போராட்டம்!

ஏப்ரல் 20, 2023

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை எதிர்த்து வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று (20) காலை முன்னெடுக்கப்பட்டது.
வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டால் வவுனியா பத்தினியார் மகிழங்குளம், முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது ‘சிறுபான்மையினரை அடக்குவதற்காக புதிய சட்டத்தை உருவாக்காதீர், இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி விடுங்கள், இலங்கை அரசே பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்கதே’ போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், அரசாங்கத்திற்கு வழாங்குவதற்கான மகஜரும் வாசிக்கப் பட்டது.




# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அன்னை பூபதியின் நினைவேந்தல்!

ஏப்ரல் 19, 2023

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களால் இன்று (19.4.2023) அன்னை பூபதியின் 35வது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டுவரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக உள்ள பந்தலில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னை பூபதியின் திருவுருவ படத்திற்கு ஒளிதீபம் ஏற்றி மலர் அஞ்சலி நிகழ்த்தபட்டது.



# கிளி பாதர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு வவுனிக்குளத்தில் இடம்பெற்றது!

ஏப்ரல் 20, 2023

தமிழ் மக்களின் மனங்களில் என்றும் வாழும் படுகொலை செய்யப்பட்ட கிளிபாதர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

20.04.2008 நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வன்னிவிளாங்குளம் அம்பாள்புரம் 6 ம் கட்டை பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சேவியர் கருணாரட்ணம் (கிளி பாதர்) அவர்களின் 15ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது விசேட வழிபாடுகள் நடைபெறது.

இதேவேளை இறுதி யுத்தத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட ஜோசப் பிரான்சிஸ் அடிகளாருக்காகவும் மன்றாடப்பட்டது.

அதனை தொடர்ந்து கிளிபாதர் அவர்களின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

நிகழ்வில் கொழும்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மட்டக்களப்பு திருகோணமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

படுகொலை செய்யப்பட்ட வணபிதா கனகரட்ணம் (கிளி பாதர்) வடகிழக்கு மனித உரிமைகள் பணிப்பாளராகவும் யுத்த காலங்களில் மக்களுக்கு மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.







20-04-2008 அன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாவி வன்னிவிளான்குளம் அம்பாள்புரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் ஆராதனையில் கலந்து விட்டு தனது வாகனத்தில் திரும்பிக்கொன்ன்டு இருந்த பொழுது கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிபிடத்தக்கது.

# நெடுந்தீவில் ஐந்து முதியவர்கள் படுகொலை!

ஏப்ரல் 22,2023

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வெட்டு காயங்களுடன் 3 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் என ஐவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளார்.

100 வயதான கனகம் பூரணம் எனும் மூதாட்டி பலத்த வெட்டு காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.






லண்டன் பிரஜாவுரிமை பெற்ற வேலாயுதம்பிள்ளை நாகேந்திர ரத்தினம் (வயது 78) யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களான நாகநதி பாலசிங்கம் (வயது 82) , பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை (வயது 76) , கார்த்திகேசு நாகேஸ்வரி (வயது 83) , மகாதேவன் (வயது 75) என்பவர்களே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நெடுந்தீவு மாவளி இறங்கு துறைக்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் மூதாட்டியொருவர் நெடுந்தீவுக்கு செல்வோருக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல், உணவு வழங்குதல் போன்றவற்றை தொழிலாக செய்து வந்துள்ளார்.

இவரது கணவர் 1986ஆம் ஆண்டு குமுதினி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்ட பின்னர் குறித்த மூதாட்டி தனது வாழ்வாதாரத்தை தானே கொண்டு நடாத்தி வந்துள்ளார்.

நெடுந்தீவில் உள்ள ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் புலம்பெயர் நாடொன்றில் இருந்து வந்திருந்த ஐவர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நெடுந்தீவு சென்று இறங்குதுறைக்கு அருகில் உள்ள குறித்த மூதாட்டியின் வீட்டில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வீட்டில் இருந்து இன்றைய தினம் சனிக்கிழமை காலை எவரும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த அயலவர்கள் வீட்டிற்கு சென்று பார்த்த போது வெட்டு காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டுள்ளனர்.

ஒருவர் வீட்டின் வெளியேயும் ஏனையவர்கள் வீட்டின் உள்ளே படுக்கை மற்றும் ஏனைய பாகங்களிலும் கொடூரமான வெட்டு காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டனர்.



# யாழிலும் கடையடைப்பு!

ஏப்ரல் 25, 2023

வடக்கு கிழக்கில் பூரண ஹார்த்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில். யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டுள்ளது.

மேலும் சில உணவகங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட அத்தியாவசிய சேவைகள் யாவும் வழமை போல் செயற்படுகின்றது.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக செயற்பாடுகளும் ஸ்தம்பித்து உள்ளதை அவதானிக்க முடிந்தது.









ஏழு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து, அரசினால் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், வடகிழக்கில் அரசினால் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கல் மற்றும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு கிழக்கில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முழுமையான கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தது.

யாழ்ப்பாணத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவைகள் வழமை போல் இடம்பெறுகின்றன. தனியார் பேருந்து சேவைகள் இயங்கவில்லை.

முச்சக்கர வண்டி சேவையும் யாழ் நகரில் இடம்பெறுகின்றது. பொதுமக்கள் அங்காங்கே வீதிகளில் நடமாடுவதை அவதானிக்க முடிந்தது.





# மன்னார் மாவட்டம் முழுவதும் முற்றாக முடங்கியது!

ஏப்ரல் 25, 2023

வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் இன்று செவ்வாய்க்கிழமை (25) பொது நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ள நிலையில் மன்னார் மாவட்ட வர்த்தக சங்கங்கள், மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், பொதுமக்கள் உட்பட அனைவரும் பூரண ஆதரவு வழங்கியுள்ளதுடன் மன்னார் மாவட்டம் முழுவதும் முற்றாக முடங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் பயங்கரவாத சட்டத்திற்கு மாற்றாக புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத தடுப்பு சட்ட மூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், முப்படையினரின் காணி அபகரிப்பு உட்பட வனவள திணைக்களம், தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகளை கபளீகரம் செய்கின்றமை, கிழக்கில் மேய்ச்சல் தரைகளில் சிங்கள குடியேற்றங்கள் இடம் பெறுவதையும் நிறுத்தக் கோரியும், மதஸ்தலங்கள் தாக்கப்படுகின்றமை தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் திட்டமிட்டு இடம்பெறும் சிங்கள குடியேற்றங்களை தடுக்க கோரியும் இன்றைய தினம் (25) செவ்வாய் கிழமை வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.




இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன் தனியார் போக்குவரத்து சேவையும் முடங்கியுள்ளது. மீனவர்கள் தொழிலுக்கு செல்லவில்லை.

அதே நேரம் பாடசாலைக்கு மாணவர்களின் வருகையும் குறைவாக காணப்பட்டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்நிலையில், அரச திணைக்களங்கள் மற்றும் அரச போக்குவரத்து சேவைகளும் வழமைபோல் இடம் பெற்ற போதும் மக்களின் நடமாட்டம் வெகுவாக குறைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# திருகோணமலை மண்ணும் ஹர்த்தாலால் முடக்கம்!

ஏப்ரல் 25, 2023





பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம், சிங்களமயமாக்கலை எதிர்த்து வடக்கு, கிழக்கில் இன்று செவ்வாய்க்கிழமை (25) பூரண ஹர்த்தால் இடம் பெறுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் அந்தப் பகுதிகளில் அனைத்து துறைகளும் இன்று முடங்கியுள்ளன.

திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட்டப்பட்டு காணப்படுகின்றன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகைதரவில்லை. இதனால் பாடசாலைகள் இயங்கவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்து காணப்படுகின்றது.

# மட்டக்களப்பில் ஹர்த்தாலால் முழு நாள் கதவடைப்பால் முடக்கம்!

ஏப்ரல் 25, 2023




பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிராகவும் பௌத்த மயமாக்கலை எதிர்த்தும் இன்றைய தினம் வடக்கு, கிழக்கில் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த கடை அடைப்பு போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளதுடன் மட்டக்களப்பில் இந்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹர்த்தால் காரணமாக கடைகள் யாவும் மூடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் பூரண கதவடைப்பு!

ஏப்ரல் 25, 2023



கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள், சந்தைகள், பேருந்து சேவைகள் யாவும் முடக்கப்பட்டு கடையடைப்பிற்கு மக்கள் பூரண ஆதரவினை வழங்கியுள்ளனர்.

தமிழ் கட்சிகள் யாவும் அரசினால் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் வடகிழக்கில் அரசினால் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கல் மற்றும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக வடக்கு கிழக்கில் இன்றைய தினம் முழுமையான கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சில உணவகங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட அத்தியாவசிய சேவைகள் யாவும் வழமை போல் செயற் படுகின்றது.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் சந்தைகள் யாவும் மூடப்பட்டு வர்த்தகர்கள் தமிழ் கட்சிகளினால் அழைப்பு விடப்பட்ட கடையடைப்பிற்கு பூரண ஆதரவினை வழங்கியுள்ளனர்.

# முடங்கியது வவுனியா!

ஏப்ரல் 25, 2023

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிட வேண்டும், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னிறுத்திய ஹர்த்தால் போராட்டத்திற்கு வவுனியாவில் முழுமையான ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் நடமாட்டம் மிககுறைவாக காணப்படுவதாக கூறப்படுகிறது.

இதேவேளை அரச பேருந்துச்சேவைகள் வழமைபோல முன்னெடுக்கப்படும் நிலையில், தனியார் பேருந்துச் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

வெளிமாகாணங்களில் இருந்து வடக்கிற்குள் நுழையும் பேருந்துகள் வவுனியாவுடன் தமது சேவைகளை மட்டுப் படுத்தியுள்ளன.

இதேவேளை பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் வருகை இல்லாமையினால் கல்விச் செயற்பாடுகளும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.






வங்கிகள், நிதி நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் இன்மையால் இயல்பான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

முற்சக்கரவண்டிகள் குறைந்தளவில் சேவையில் ஈடுபட்டுள்ளன. விவசாயிகள் தமது உற்பத்திகளை வீதியில் வைத்து விற்பனை செய்கின்றனர்.

மாவட்டத்தின் புறநகர்ப்பகுதிகளான நெடுங்கேணி, செட்டிகுளம், கனகராயன்குளம் உட்பட ஏனைய உபநகரங்களின் வழமையான செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில், வடக்கு, கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் பொது முடக்கம் ஊடான எதிர்ப்புப் போராட்டத்திற்கு வவுனியாவில் தமிழ் மக்களும், சிவில் சமூக அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தமது முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றனர்.

# நெடுந்தீவு ஐவர் படுகொலைக்கும் இராணுவம் மற்றும் கடற்படைக்கும் தொடர்புள்ளதா?

சி. சிறிதரன்

ஏப்ரல் 26, 2023

நெடுந்தீவில் ஐந்து வயோதிபர்கள் கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து நபர் ஒருவரால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் கடற்படை, இராணுவத்துக்கும் தொடர்பு உள்ளதா என்பது ஆராயப்பட வேண்டும். என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) இடம்பெற்ற சர்வ தேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நெடுந்தீவு பகுதியில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற ஒரு பாரிய மனித படுகொலை தொடர்பில் இதன்போது பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மிக முக்கியமாக ஐந்து வயோதிபர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். திருமதி நாக சுந்தரி கார்த்திகேசு (83 வயது). இவரது கணவர் குமுதினிப் படகில் வைத்து கடற்படையினரால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டவர்.

நாகநாதி பாலசிங்கம் (82 வயது), கண்மணிப்பிள்ளை பாலசிங்கம்(76 வயது), இவர்கள் இருவரும் கணவன், மனைவி. நாகரத்தினம் வேலாயுதபிள்ளை (78 வயது) மற்றும் சுப்பிரமணியம் மகாதேவா (74 வயது) ஆகியோர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த ஐந்து பேரும் ஒரு நபரால் கடற்படையினரின் முகாமுக்கு அருகில் உள்ள வீட்டில் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அதேநேரம் 100 வயதுடைய மூதாட்டி பூரணம் கனகர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இங்கே கடற்படை முகாம் உள்ளது. அதன் அருகில் நெடுந்தீவு மண்ணில் யாரும் பார்க்க முடியாத ஒரு பிரதேசத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு பிரதேசத்தில் மிக கொடூரமாக இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இது இந்த ஆண்டில் நடந்த மிகப்பெரிய படுகொலை. இது நியாயமாக, நீதியாக விசாரிக்கப்பட வேண்டும். இந்த படுகொலைக்கும் கடற்படை, இராணுவத்துக்கும் தொடர்பு உள்ளதா என்பது ஆராயப்பட வேண்டும். இந்த நாட்டில் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதைத் தான் இந்த சம்பவமும் உறுதிப்படுத்துகின்றது.

அத்துடன் கிளிநொச்சி கௌதாரி முனையில் இருக்கின்ற மண்ணை அகழ்வதற்காக அஜித் தென்னக்கோன் என்பவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா



விசேடமான உத்தரவின் பேரில், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த மண்ணை அகழக்கூடாது என்ற கட்டளை இருக்கும் நிலையில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படாத நிலையில் பூநகரி பிரதேச செயலாளரை வைத்து அவருக்கூடாக அந்த மண்ணை அகழ்ந்து விற்பனை செய்வதற்கான முயற்சியில் வடக்கு ஆளுநர் ஈடுபட்டுள்ளார்.

இந்த விடயத்தையும் இந்த சபையில் பதிவு செய்கின்றேன். மிக முக்கியமாக ஜீவன் தியாகராஜாவின் நிதி நடவடிக்கைகள் அவர் செய்கின்ற ஊழல் நடவடிக்கைகள் மற்றும் அரச நடவடிக்கை துஸ்பிரயோகங்கள் தொடர்பாகவும் இந்த சபை கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# தந்தை செல்வாவின் 46ஆவது ஆண்டு நினைவுநாள் யாழில் நடைபெற்றது!

ஏப்ரல் 26, 2023

ஈழத்துக் காந்தி என அழைக்கப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 46 ஆவது ஆண்டு நினைவுநாள் அஞ்சலியும், நினைவுப் பேருரையும் நிகழ்வு இன்று புதன் கிழமை (26.04.2023) காலை-09.45 மணி முதல் யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினை விடத்தில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுத் தலைவரும், ஓய்வுநிலை ஆயருமான கலாநிதி. சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற நினைவு நாள் நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கிழக்குப் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி. அ.அ. நவரத்தினம் அடிகளார், முன்னாள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் உள்ளிட்டோர்



தந்தை செல் வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அவரது உருவச் சிலைக்கும், தந்தை செல்வாவின் சமாதிக்கும் மலர் தூவி அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

தொடர்ந்து தந்தை செல்வா நினைவிட வளாகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் 'தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்தை செல்வா சாதித்தவைகள்' எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக முது நிலை விரிவுரை யாளர் அருட்பணி அ.அ. நவரத்தினம் அடிகளார் நீண்ட நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

# மக்கள் அகிம்சை வழியில் கோபத்தை வெளிக்காட்டியுள்ளனர்!

அருட்தந்தை மா. சத்திவேல்

ஏப்ரல் 26, 2023

அகிம்சை வழியில் மக்கள் கோபத்தை வெளிக்காட்டி உள்ளனர். இதனை கட்சிகளுக்கு கிடைத்த வெற்றியாக கருதக்கூடாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.



அவரால் இன்று (26) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கில் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஹர்தாலுக்கு அனைத்து தரப்புக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி அகிம்ச வழியில் தமது கோபத்தை வெளிக்காட்டி உள்ளனர்.

இக் கோப வெளி காட்டலை தங்கள் தலைமைத்துவ கூட்டுக்கு அல்லது கட்சிகளுக்கு கிடைத்த வெற்றியாக எவரும் கருதக்கூடாது.

அதே போன்று ஆட்சியாளர்கள் தங்களுக்கும் கொழும்பு அரசியலுக்கும் எதிராக தமிழ் மக்களின் மனநிலையை புரிந்து கொண்டால் மட்டுமே நாட்டில் அரசியல் நிலைதன்மை ஏற்படும் என்பதையும் உணர்தல் வேண்டும்.

இதனை இனவாத, மதவாத கண்ணோட்டத்தில் புலிகளின் எழுச்சி என முத்திரை குத்த வேண்டாம் எனவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஹர்தாலுக்கு முதல் நாள் அது தொடர்பில் தமது அதிருப்தினையும், எதிர்ப்பினையும் ஊடகங்களில் வெளிப்படுத்தியிருந்தனர்.

ரணில் விக்ரமசிங்க “பௌத்த ஆக்கிரமிப்பு நடக்கவில்லை” என முழு பூசணிக்காய் ஒருபிடி சோற்றுக்குள் மறைக்க முற்படுவது போன்று கூறியுள்ளார். இது தமிழர்களை அழிப்பதற்கு இவர்கள் தொடர்ந்தும் செயற்படுவார்கள் என்பதையே வெளிக்காட்டுகின்றது.

அத்தோடு 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தினம் நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொட்டியா (புலி) என அடையாளப்படுத்தி உள்ளனர்.

இது நீண்ட காலமாகவே தொடரும் ஒரு விடயமாகும். அரசியல் கைதிகளை மண்டியிட செய்தி நெற்றியில் துப்பாக்கி வைத்து கொட்டி (புலி) யென கொலை அச்சுறுத்தியவர்கள், ஒட்டுமொத்த தமிழர்களையும் பயங்கரவாதியாக்கி சிறைக்குள் தள்ளியவர்கள் திறந்தவெளி சிறைக்குள் வைத்தவர்கள் அதே நிலையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையே மீண்டும் நாடாளுமன்ற நிகழ்வு காட்டுகின்றது.

அவர்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படும் வரை நாட்டிற்கு அரசியல் எதிர்காலம் இல்லை. அதே போன்று தமிழர்களுக்கும் எதிர்காலம் இல்லை என்று கூறலாம்.

இந்நிலையில் மக்களின் எதிர்ப்பினை தேசிய அரசியலுக்கான சக்தியாக விழிப்புணர்வு செய்து அதனை பெரும் சக்தியாக பரிணமிக்க வழி செய்ய வேண்டும். இதனை செய்யக்கூடிய தகுதி ஒற்றை ஆட்சியையும் 13 ஆவது திருத்தத்தையும் ஏற்றுக் கொள்கின்றவர்களால் செய்ய முடியாது.

இவ்விரண்டையும் 35 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் ஏற்று கொள்ளவில்லை. இதனை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழர்களை அச்சுறுத்துவதற்கோ, அடிபணிய வைப்பதற்கோ, உலகில் ஜனநாயக நாடகக் கூறப்படும் இந்தியாவிற்கு உரிமையும் இல்லை என்பதையும் பகிரங்கமாக இவ்வேளையில் வெளிப்படுத்த வேண்டும்.

அதேபோன்று தமிழர்களை அழிப்பதற்கு துணை நின்றவர்களாலும், ஒற்றை ஆட்சியையும் 13 திருத்தத்தையும் பாதுகாக்கவும் அதற்கு கொடி பிடிக்கவும் துணை நிற்பவர்களால் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கவும் முடியாது.

நடந்த எதிர்ப்பு ஹர்தாலை முழு வெற்றியாக்க தமிழ் அரசியல் தலைமைகளும், சிவில் சமூகமும் ஒன்று இணைந்து கூட்டு செயல்பாட்டிலே ஈடுபடல் வேண்டும்.

இவ்வாறான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் நாம் தவறவிட்டுள்ளோம் என்பதே உண்மை. இதனைக் கருத்தில் கொண்டு திறந்த மனதோடு அரசியல் கட்சிகள் மக்கள் முன் நிற்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு. அதுவே தமிழர்களின் அடையாளத்தையும், தேசியத்தையும் பாதுகாக்கும் செயற்பாடாக அமையும்.

# காங்கேசன்துறை தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்த விகாரை!

ஏப்ரல் 27, 2023

38வருடங்கள் கடந்தும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளை பௌத்த மயமாக்குவதில் சிங்கள அரசு மும்முரம் காண்பித்து வருகின்றது.

இந்நிலையில் உயர்பாதுகாப்பு வலயத்தில் மற்றுமொரு புத்தர் விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு இன்று (27) காலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை, தையிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு தையிட்டில் அமைக்கப்பட்டுள்ள விகாரை யாழிலேயே அமைக்கப்பட்டுள்ள மிக உயரமான விகாரை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் அண்மையில் ஒரு விகாரை அமைக்கப்பட்டு அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.





# பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் விடுதலை !

ஏப்ரல் 27, 2023

பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்ட கிண்ணையடி வாழைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் முருகுபிள்ளை கோகிலதாசன் குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று நகர்தல் பத்திரத்தின் மூலம் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிக்கையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கிற்கு சிரேஸ்ட சட்டத்தரணி இரட்ணவேல் மற்றும் சட்டத்தரணி ரணித்தா ஆகியோரின் ஆலோசனையின் பேரில் சட்டத்தரணி பி.ஜெசிங்கம் முன்னிலையாகியிருந்தார்.

இவர் முகநூலில் தமிழீழ தேசிய மாவீரர் நிகழ்வு தொடர்பான பதிவினை பதிவிட்டமை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 28.11.2020 அன்று வாழைச்சேனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து ஒரு வருடமும் 5 மாதங்கள் மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் 07.03.2022 ஆம் திகதியன்று நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் இவரது வழக்கு இன்றைய திகதி வரை நடைபெற்றுள்ளது.

இவரது விடுதலை தொடர்பாக சர்வதேச உள்ளூர் சமூக அமைப்புக்கள் மற்றும் ஊடக அமைப்புக்கள் குரல் கொடுத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# வெடுக்குநாறி மலையில் மீண்டும் விக்கிரகங்கள்!

ஏப்ரல் 26, 2023

வவுனியா வெடுக்குநாறி மலையிலிருந்து அகற்றப்பட்ட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் இன்று மீள் இருப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி மலையிலிருந்து அகற்றப்பட்ட விக்கிரகங்களை மீண்டும் அங்கு பிரதிஷ்டை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

வவுனியா நீதவான் தேவராசா சுபாஜினி முன்னிலையில் இந்த வழக்கு நேற்று(27) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மதகுருமார்கள், அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்களின் பங்கேற்புடன் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் மற்றும் ரஜீவர்மன் நினைவேந்தல்!

ஏப்ரல் 28, 2023

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவு தினம் யாழ்.ஊடக அமையத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராமனின் 18ஆம் ஆண்டு நினைவு தினமும் , ரஜீவர்மனின் 16ஆம் ஆண்டு நினைவு தினமும் யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றன.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28ம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



# வலிந்து காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்ப்பாடுகளுக்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம் !

ஏப்ரல் 29, 2023

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று (29) காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தம் நிறைவடைந்த நாள்முதல் தமது உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 2017 மார்ச் எட்டாம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் எமக்கு எந்த நீதியும் கிடைக்காது எனவும் இலங்கை அரசின் காணாமல் போனோர் அலுவலகம் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பல ஆணைக் குழுக்கள் எவையும் எமக்கு பலனற்றவைகள் எனவும் சர்வதேச நீதிப்பொறிமுறையோ தமக்கு தேவை என வடக்கு கிழக்கு எங்கும் ஆறு ஆண்டுகள் கடந்து ஏழாவது ஆண்டாக 150 க்கு மேற்பட்ட உறவுகளையும் இழந்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கமும் காணாமல் போனோர் அலுவலகம் ஊடக இவர்களது சர்வதேச நீதி விசாரணை கோரிக்கையை முடக்கும் முகமாக பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தமது உறவுகளை அச்சுறுத்தி விபரங்களை பதிய முற்ப்படுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில் இன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோர் அலுவலக விசாரணைகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் மக்கள் மாபெரும் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட தயாராகிறார்.




இந்நிலையில் இன்று விசாரணைகள் இடம்பெறாது என காணாமல் போனோர் அலுவலகம் அறிவித்திருந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக திரண்டு காணாமல் போனோர் அலுவலக செயற்ப்பாடுகள் தமக்கு தேவையில்லை என வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

வழமைபோன்று உறவுகளின் போராட்டம் இடம்பெற்றபோது சிவில் உடையில் வந்த பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் உறவுகளை வீடியோ புகைப்படம் எடுத்து அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.













# கனடாவில் ரஸ்சிய விமானம் சுவீகரிக்கப்பட்டு உக்ரைனின் நலனுக்காக பயன்படுத்தப்படும்! – கனடா பிரதமர்

ஏப்ரல் 18, 2023

கனடாவின் றொரன்டோவின் பியர்சன் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரஸ்ய விமானத்தை சுவீகரிக்கப் போவதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

ரஸ்சியாவிற்கு சொந்தமான பாரிய சரக்கு விமானமொன்று பியர்சன் விமானத்தில் கடந்த ஓராண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷியாமல் அண்மையில் கனடாவிற்கு விஜயம் செய்து, பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவை சந்தித்திருந்தார்.

இந்த விமானத்தை சுவீகரித்து உக்ரைனின் நலனுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படும் என பிரதமர் முகநூல் பதிவொன்றை இட்டுள்ளார்.

யுபே-124 என்ற ரஸ்ய சரக்கு கப்பலை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

றொறன்டோவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குறித்த விமான வொல்கா நிப்பர் என்னும் நிறுவனத்திற்கு சொந்தமானது எனவும் அந்த நிறுவனம் கனடாவில் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



இதேவேளை ஓராண்டு காலமாக கனடாவில் தரித்து நிற்பதனால் இந்த விமான நிறுவனம் பெருந்தொகை கட்டணத்தை கனடாவிற்கு செலுத்த நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# றொறன்ரோ விமான நிலையத்தில் பல மில்லின் டொலர் தங்கம் கொள்ளை!

ஏப்ரல் 20 2023

கனடாவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 20 மில்லியன் டொலர் மதிப்பிலான தங்கம் கொள்ளை போன விவகாரத்தில் பொலிசார் துப்புத்துலங்காமல் மூன்று நாட்களாக திணறி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

வியாழக்கிழமை மதியத்திற்கு மேல் பீல் பிராந்திய பொலிசார் இந்த கொள்ளை தொடர்பில் விளக்கமளித்திருந்தாலும், திங்கட்கிழமை நடந்த கொள்ளை தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை பொதுமக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்றே கூறப்படுகிறது.

20 மில்லியன் டொலர் மதிப்பிலான தங்கம் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் அடங்கிய பெட்டகம் சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டது என்றே அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் அந்த விமானம் தரையிறங்கிய பின்னர் தங்கம் மாயமாகியுள்ளது. மேலும், மூன்றாம் தரப்பு ஒன்றிற்கு குத்தகைக்கு விடப்பட்ட பகுதி ஊடாகவே கொள்ளையர்கள் அந்த கிடங்குக்குள் நுழைந்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், கொள்ளை போன பொருட்கள் தொடர்பில் விரிவான விளக்கமளிக்க அதிகாரிகள் இதுவரை முன்வரவில்லை. திங்கட்கிழமை மதியத்திற்கு மேல் நடந்த இந்த துணிகர கொள்ளை தொடர்பில் வியாழக்கிழமை இரவு வரையில் கைது நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

மட்டுமின்றி, சந்தேக நபர்களின் தகவல்களும் பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், இந்த தங்கம் மற்றும் அதனுடன் விலை உயர்ந்த பொருட்களும் எங்கே கொண்டு செல்லப்படுகிறது என்ற தகவலும் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது ஒரு தனியான சம்பவம் என்றும் பொது பாதுகாப்பு




விடயமாக கருதவில்லை எனவும் பொலிஸ் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

# கனடாவில் பொதுத்துறை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம்!

ஏப்ரல் 24, 2023

கனடாவில் ஆறாம் நாளாக வேலை நிறுத்தப் போராட்டம் இன்றும் முன்னெடுக்கப்படுவதாக பொதுத்துறை ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

கனடாவில் இடம்பெறும் மிகப் பெரிய தொழிற்சங்கப் போராட்டங்களில் ஒன்றாக இந்தப் போராட்டம் கருதப்படுகின்றது.

ஒன்றரை லட்சம் பணியாளர்கள் இந்த போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சம்பள உயர்வு மற்றும் தொழில் உடன்படிக்கை உள்ளிட்ட சில முக்கிய காரணிகளின் அடிப்படையில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த ஐந்து நாட்கள் இடம்பெற்று வரும் போராட்டம் தொடர்பில் அரசாங்கம் சாதக பதில் எத னையும் வழங்கவில்லை என குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

இந்த நிலையில், இன்றைய தினம் நாட்டின் முக்கியமான இடங்களில் கவனயீர்ப்பு போராட்டங்களை முன் னெடுக்க தொழிற்சங்கம் தீர் மானித்துள்ளது.

பணவீக்கத்திற்கு நிகராக சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



வேலை நிறுத்தம் காரணமாக பல்வேறு துறைகளில் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடிய கடவுச்சீட்டு பெற காத்திருப்போருக்கு ஒரு முக்கிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது!

ஏப்ரல் 24, 2023

னடாவின் குடும்பங்கள் சிறுவர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் காரினா கோல்ட் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

புதிய கடவுச்சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது பழைய கடைவீச்சீட்டை புதுப்பித்து கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு பொருத்தமான நேரம் இதுவல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பொதுத்துறை ஊழியர்கள் பாரிய அளவில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் அமைச்சர் பொதுமக்களிடம் கடவுச்சீட்டுக்களுக்கு தற்போதைக்கு விண்ணப்பம் செய்ய வேண்டாம் என கோரியுள்ளார்.

குறிப்பாக விண்ணப்பங்களுக்காக சில மூல ஆவணங்களை குடிவரவு திணைக்களத்தில் ஒப்படைப்பதன் மூலம் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிடலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக சில மூல ஆவணங்கள் கடவுச்சீட்டு தேவைக்காக சமர்ப்பிக்கப்படும் போது தற்போதைய சூழ்நிலையில் இந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்வதற்கு காலம் தாழ்த்தப்படுவதனால் மூல ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கும் காலம் தாழ்த்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அனாவசியமான காத்திருப்புகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாவதனை தவிர்க்க வேண்டுமாயின் வேலை நிறுத்த போராட்டம் நடைபெறும் இந்த தருணத்தில்




விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அமைச்சர் மக்களிடம் கோரியுள்ளார்.

# இறுதி நகர்வை நோக்கி பிராம்டன் தமிழின அழிப்பு நினைவாலயம்!

ஏப்ரல் 25, 2023



ஈழத்தில் தமிழர் பூர்வீக தாயகத்தில் தொடர்ச்சியாக நடந்தேறிய, நடத்தேறும் தமிழின அழிப்பை அப்பெரும் துயரத்தை நினைவில் கொள்ளும் வகையிலும், இனப்படுகொலைக்கான முழுமையான அங்கீகாரத்தை உலகளாவி நிலைநாட்டும் பெரும் முயற்சியிலும், 2021 சனவரியில் யாழ் பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த தமிழின அழிப்பு நினைவாலயம் இடித்தழிக்கப்பட்ட போது, பிராம்டன் நகரசபைப்பிதா பற்றிக் பிரவுன் தலைமையிலான சபையின் முழுமையான அனுசரணையுடன், பிராம்டன் நகரின் பிரதான பூங்காவில் தமிழின அழிப்பு நினைவாலயம் ஒன்றினை அமைப்பதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

இதற்காக, பிராம்டன் தமிழ் ஒன்றியம் மற்றும் பிராம்டன் தமிழ் மூத்தோர் கழகம் ஆகியவை இணைந்து, 2021 இல் உருவாக்கிய தமிழின அழிப்பு நினைவாலய அமைப்பு (TGMO), உலகளாவிய பல்துறைசார் தமிழ் வல்லுநர்களை, அதுவும் 2009 இற்கு முன்னர் தமிழர் தாயகத்தில் குறிப்பாக வன்னியில் தமது பணிகளை சிறப்புறச் செய்தவர்களை இணைத்து, தனது பணிகளை முடுக்கிவிட்டிருந்தது நீங்கள் அறிந்ததே.

2021-2022 இல், பீ பிரீடேஸ் சர்வதேச வரைகலை அமைப்பால் நடாத்தப்பெற்ற உலகளாவிய நினைவாலயத்திற்கான வடிவமைப்புப் போட்டியும், அதனூடு தயாரான இறுதி தமிழின அழிப்பு நினைவாலய வடிவமும், அதற்கான இறுதி அனுமதிக்கான பிராம்டன் நகரசபை துறைசார் வல்லுநர்களுடனான TGMO வல்லுநர்களின் தொடர் தொடர்பாடல்களின் பின்னர், அதற்கான இறுதி அங்கீகாரம் கடந்த ஆண்டு 2022 இல் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 2022ஆம் ஆண்டு யூன் மாதம், பிராம்டன் நகரசபையில் வைத்து அதன் முப்பரிமாண வடிவமைப்பை பிராம்டன் நகரசபைப்பிதா பற்றிக்பிரவுன் அவர்கள் அனைவரின் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், தமிழின அழிப்பு நினைவாலய அமைப்பின் (TGMO) துணைத்தலைவரும், ஒட்டாவா கால்ரன் பல்கலைக் கழகத்தின் பொறியியல்துறை பேராசிரியருமான, சிவா சிவதயாளன் அவர்கள் தமிழ் இனப்படுகொலையின் வலிகளையும், அமையவிருக்கும் நினைவாலயத்தின் அவசியத்தையும் வலியுறுத்தி, இனத்தின் சார்பில் உரையாற்றினார். இதைத் தொடர்ந்து, இவ்வருடம் பெப்ரவரி மாத ஆரம்பத்தில், இறுதி முன்னெடுப்புக்கள் குறித்த விரிவான விளக்கம் நகரசபைப்பிதா பற்றிக் பிரவுனுக்கும் நேரடியாகவும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இறுதி நிர்மாணத்திற்கும், அதற்கான நிதிசேரிப்பிற்குமான செயற்பாடுகள் தீவிரம் பெற்றன. அதேவேளை நகரசபைக்கும் பணிகளை ஒருங்கமைக்கும் தமிழின அழிப்பு நினைவாலய அமைப்பு (TGMO) இற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டாக வேண்டும். அது குறித்த முன்வரைபு கடந்த வாரமே கிடைக்கப் பெற்றுள்ளது.

அதில், The Brampton Tamil Association and the Brampton Tamil Seniors Association in order to facilitate the Memorial created the non-profit corporation TGMO; எனக் குறிப்பிட்டு 18 பக்கங்களில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டு அப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அனுப்பப்பட்டுள்ளது. அது தற்போது, TGMO அமைப்பின் பொறியியல் மற்றும் சட்டத்துறை வல்லுநர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவர்களின் இறுதி ஆய்வின் பின்னர், இறுதிக்கபட்ட நகர்வுகள், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் உட்பட, அனைத்தும் விரைவுபடுத்தப்படும்.

# முதலீடு செய்வதாக எண்ணி 7.5 மில்லியன் டொலரை இழந்த கனேடிய பெண்மணி!

ஏப்ரல் 13, 2023



பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீன நிறுவனம் ஒன்றினை நம்பி 7.5 மில்லியன் கனேடிய டொலர்களை இழந்துள்ளார் பெண்மணி ஒருவர்.

இந்த விவகாரம் தொடர்பில், இதுவரை விசாரித்ததில் மிகப் பெரிய மோசடிகளில் இதுவும் ஒன்று என்று பொலிசார் கூறுகின்றனர். விசாரணை அதிகாரிகளின் கூற்றுப்படி, கிரிப்டோகரன்சி மோசடியில் குறித்த பெண்மணியை சிக்க வைத்து, அந்த தொகையை மீட்டுத்தருவதாக கூறி மேலும் மோசடி செய்துள்ளனர்.

கடந்த 2022 ஏப்ரல், மே மாதங்களில் குறித்த பெண்மணியை நாடிய ஒருவர், அவரது தனிப்பட்ட தொழில் வரலாறு குறித்து தகவல் தெரிந்துகொள்ள வந்ததாகவே அறிமுகமாகியுள்ளார்.

அதன் பின்னர் சில மாதங்களில் தொடர்புகொண்டு அவரது நம்பிக்கையை பெற்றுள்ளனர். மட்டுமின்றி தொழில் தொடர்பான கலந்துரையாடல் மட்டுமே முன்னெடுத்துள்ளனர்.

சீன மொழியில் பேசி, குறுந்தகவல், மின்னஞ்சல் என நட்பை வளர்த்துள்ளனர். இந்த நிலையில், அவர்களின் ஆலோசனையை நம்பிய கனேடிய பெண்மணி மில்லியன் டொலர்களை கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்துள்ளார்.

மேலும், தாம் முதலீடு செய்துள்ள தொகையை, அதனால் கிடைத்துள்ள அதிகமான வருவாய் என மொத்த கணக்கையும், அவர்கள் அளித்துள்ள செயலி ஊடாக இவர் சரிபார்த்தும் வந்துள்ளார்.

ஆனால் ஒருகட்டத்தில் அந்த செயலியில் இருந்து பணத்தை வங்கிக்கு மாற்ற முயன்ற அவருக்கு முசியாமல் போனது. இந்த நிலையில், முதலீடு செய்ய தூண்டியவர்களின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இணையமூடாக தொடர்புகொண்ட ஒருவர், இழந்த மில்லியன் கணக்கான டொலர் தொகையை மீட்டுத் தருவதாக கூறியுள்ளார். அவரது பேச்சை நம்பிய அந்த பெண்மணி, மீண்டும் முதலீடு செய்யத் தொடங்கினார்.

ஆனால் அதுவும் மோசடி என்பது பின்னர் தான் அவர் புரிந்துகொண்டுள்ளார். தற்போது 7.5 மில்லியன் கனேடிய டொலர்களை அவர் இழந்துள்ளதாக விசாரணை அதிகாரிகள்

# பிணையெடுக்கும் முறைமைக்கான மறுசீர்திருத்தம்!

ஏப்ரல் 27, 2023

குற்றவாளிக் கைதிகள் மற்றும் மீண்டும் குற்றம் புரியக்கூடிய வன்முறைக் கைதிகளாகக் கருதப் படுபவர்களுக்கான பிணை விதிகளை அவர்கள் கடைப்பிடிப்பதை இறுக்கமாக்குவதற்கு ஏதுவாக கைதிகள் பிணையெடுப்பு முறையை உடனடியாக வலுப்படுத்துவதற்கென 112 மில்லியன் டொலர்களை ஒன் ராறியோ மாநில அரசு ஒதுக்குகிறது.

ஒருவர் பிணையில் வெயில் வந்தால், அவர் பிணை நிபந் தனைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். சமுகத் துக்கு அதிக ஆபத்தான மீண்டும் மீண்டும் குற்றம் புரிந்த கைதிகள் சிறையில் வைக்கப்பட வேண்டும்.




ஒன்ராறியோ மாநில காவற்றுறையின் பிணை நிபந்தனை அமலாக்கப் பிரிவுடன் இணைந்து குழுக்களை உருவாக்கி விசாரணை, பிணை நடவடிக்கைகளின் போது நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் பங்களிப்பு இருப்பதை உறுதிப் படுத்த 26 மில்லியன் டொலர்களை ஒன்ராறியோ அரசு ஒதுக்குகிறது.

இதுதவிர, பிணை நிபந்தனைகள் தொடர்பான மாநிலம் தழுவிய ஒரு புதிய கண்காணிப்பு முறைமையை நடைமுறைப் படுத்தி, அதனூடாக காவற்றுறையினர் சரியான தரவுகளின் மூலம் ஆபத்துள்ள குற்றவாளிகளை கண்காணிப்பதற்கு வழியமைத்துக் கொடுக்கவுள்ளோம்.

# தமிழக செய்திகள்



# இந்திய அரசின் பணிகளுக்கான தேர்வினைத் தமிழில் எழுதலாம் என்பது மாற்றப்பட்டுவிட்டதா?

ஏப்ரல் 18, 2023

இந்திய அரசின் ஆயுதக் காவல்படையின் பணிக்கான தேர்வுகள் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டதற்குத் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததின் விளைவாக, ஒன்றிய அரசு தனது நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு, தமிழ் உள்பட அனைத்து மாநில மொழிகளிலும் இத்தேர்வுகள் நடத்தப்படும் என அறிவித்துள்ளது. இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட தமிழக முதல்வருக்கு பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதையொட்டி முதல்வர் விடுத்துள்ள அறிக்கையில், “ஒன்றிய அரசின் அனைத்துத் தேர்வுகளையும் தமிழல் நடத்த வேண்டும்” என்ற கோரிக்கையை விடுத்துள்ளார். ஆனால், ஏற்கெனவே தமிழ் உள்பட 14 தேசிய மொழிகளிலும் ஒன்றிய அரசின் பணிகளுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக வரலாற்றுப்பூர்வமான உண்மை ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

1965ஆம் ஆண்டு சூன் மாதத்தில் காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தினை மொழிப் பிரச்சனைக்காக அகில இந்திய காங்கிரசுத் தலைவராக இருந்த காமராசர் கூட்டினார். இருநாட்கள் நடைபெற்ற இச்செயற்குழுக் கூட்டத்தில் “ஆங்கிலம் அகற்றப்படும் இடங்களிலெல்லாம் மாநில மொழிகள் விரைவில் அமர்த்தப்படவேண்டும். மாநிலங்களில் அந்தந்த மொழிகளே ஆட்சி மொழிகள் ஆவதை விரைவுப்படுத்தவேண்டும். இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டு அது வளமாக்கப்படவேண்டும். அதற்குப் பிறகே இணைப்பு மொழியாக அதை பயன்படுத்துவது குறித்து ஆராயவேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய மொழிகளும் வளம் பெறச் செய்யும் திட்டம் ஒன்றினை இந்திய அரசு வகுத்துச் செயல்படுத்தவேண்டும். ஒன்றிய அரசின் தேர்வுகளை அவரவர்கள் தாய்மொழிகளில் எழுதுவதற்கு ஏற்ப அனைத்துத் தேசிய மொழிகளையும் தேர்வு மொழிகளாக ஆக்கவேண்டும்” என்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை காமராசர் கொண்டுவந்த போது அனைவரும் அதை ஒருமனதாக ஏற்றார்கள். இந்தி மொழியின் தீவிர ஆதரவாளர்களும் அதற்கு சம்மதித்தனர்.

தலைமையமைச்சராக இருந்த லால்பகதூர் அவர்கள் இத்தீர்மானத்திற்கு சட்டரீதியான வடிவைக் கொடுத்து சட்டமாக்கினார். அதைத் தொடர்ந்து தமிழ் உள்பட அனைத்துத் தேசிய மொழிகளிலும் ஒன்றிய அரசின் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் ஏராளமான மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளை தமிழில் எழுதி பட்டம் பெற்று ஒன்றிய மற்றும் தமிழக அரசுப் பணிகளில் அமர்ந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, ஒரிசா மாநிலத்தின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றி, தற்போது அம்மாநிலத்தின் முதலமைச்சருக்கு ஆலோசகராக விளங்கும் ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் விளங்குகிறார். சிந்து நாகரிகம் குறித்த அவரது நூலை அண்மையில் முதலமைச்சர் அவர்களே வெளியிட்டுப் பாராட்டியுள்ளார்.



தலைமையமைச்சராக லால்பகதூர் இருந்த காலத்தில் அனைத்துத் தேசிய மொழிகளிலும் ஒன்றிய அரசின் தேர்வுகளை எழுத அனுமதிக்கப்பட்டதை இப்போதைய பா.ச.க. அரசு மாற்றியுள்ளதா? அப்படி செய்திருந்தால், அது மிகப்பெரிய அரசியல் சட்ட மீறலாகும். இதை தெளிவுபடுத்தவேண்டியது உள்துறை அமைச்சர் அமித்சா அவர்களின் பொறுப்பாகும். அவ்வாறு செய்ய அவர் முன்வரவேண்டும் என வலியுறுத்துகிறேன்.என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கேள்வி?

# உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து பட்டினபாக்கம் மீனவர்கள் போராட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது!

ஏப்ரல் 19. 2023

சென்னை - உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து, மீனவர்கள் நடத்திய போராட்டம் தற்பொழுது வாபஸ் பெறப்பட்டுள்ளது.

சென்னை மெரினா கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரையிலான லூப் சாலையில் வசிக்கும் மீனவர்கள் , சாலையின் ஓரத்தில் மீன்கள் விற்பது வழக்கம்.

இங்கு எப்போதுமே மலிவான விலையில் மீன்கள் புத்தம் புதிதாக கிடைப்பதால், ஏராளமான பொதுமக்கள் மீன்களை வாங்கி சொல்வார்கள். அந்த வகையில் சென்னையில் புகழ் பெற்றது, இந்த லைட் ஹவுஸ் மீன் சந்தை.

தினந்தோறும் ஏராளமான பொதுமக்கள் இங்கு வந்து செல்வதால், லூப் சாலையில் போக்குவரத்து நெரிசலாக காணப்படும்.





இந்த நிலையில் மீனவர்கள் சாலையை ஆக்கிரமித்து மீன்களை விற்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி, சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், லூப் சாலையின் மேற்குபகுதி ஆக்கிரமிப்புகளை அகற்றி அறிக்கை தாக்கல் செய்யவும், அங்குள்ள உணவகங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என அறிக்கை தாக்கல் செய்யவும் மாநகராட்சிக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் தான் சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவின் படி, சென்னை நொச்சிக்குப்பம் முதல் பட்டினப்பாக்கம் வரையிலான லூப் சாலையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த மீன் கடைகளை சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அகற்றினர்.

மீன் கடைகள் அகற்றப்பட்டதை எதிர்த்து கடந்த ஐந்து நாட்களாக மீனவர்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தி வந்தனர். இதற்கு தீர்வு காணும் வகையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீனவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இந்த நிலையில் இன்று இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் மீன்கடைகளை ஒழுங்குபடுத்த ஆணையிட்டது. ஆக்கிரமிப்பை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த நீதிமன்றம், இந்த விவகாரத்தை அரசியலாக்க கூடாது என்றும் அறிவுறுத்தியது.

அதன்படி மீனவர்களுக்கு கடைகள் ஒழுங்கு படுத்தி கொடுக்கப்படும் என்று மாநகராட்சியும் உறுதியளித்தது. இதன் தொடர்ச்சியாக தற்போது போராட்டத்தை தற்காலிகமாக மீனவர்கள் வாபஸ் பெற்றனர்.

தங்கள் வாழ்வாதாரத்திற்காக, உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து, 5 நாட்களாக மீனவர்கள் நடத்திய போராட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

www.sangathamil.ca

# 200 ஆண்டுகள் பழமையான 55 கற்சிலைகள் கண்டுபிடிப்பு!

மார்ச் 22. 2023

சென்னை - 200 ஆண்டுகள் பழமையான 55 கற்சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை ஆர்.ஏ புரத்தில் உள்ள ஒருவரது வீட்டில் பழமை யான சிலைகள் பதுக்கி வைத்திருந்ததாக, சிலை தடுப்பு காவல் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர், அந்த வீட்டில் 200 ஆண்டுகள் பழமையான 55 கற்சிலைகளை நேற்று பறிமுதல் செய்துள்ளனர்.

இதில் பாதி சிலைகள், சிலை கடத்தல் மன்னன் தீனதயாள னிடமிருந்து பெறப்பட்டதாக சிலை தடுப்பு காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் பறிமுதல் செய்யப்பட்ட கற்சிலைகள் சென்னை அசோக் நகரில் உள்ள சிலை கடத்தல் தடுப்பு பிரிவு அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், டிஜிபி சைலேந்திரபாபு நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த சிலைகள் ஆனது அவுஸ்திரேலிய உள்ளிட்ட ஐரோப்பா நாடுகளுக்கு கடத்த திட்டமிட்டுள்ளதாக, காவல்துறை விசா ரணையில் தெரிய வந்துள்ளது.



# சிறுவாணி ஆற்றில் தடுப்பணை தமிழக வாழ்வுரிமை கட்சித்தலைவர் கண்டனம்!

ஏப்ரல் 23, 2023

சிறுவாணி ஆற்றின் 3 தடுப்பணைகளை கட்டி வரும் கேரள அரசின் நடவடிக்கைக்கு தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கோவை மாவட்டத்திற்கு குடிநீர் ஆதாரமாக விளங்குகிற சிறுவாணி ஆற்றின் குறுக்கே, சர்வதேசியம் பேசும் கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசு, அட்டப்பாடி கூலிகடவு-சித்தூர் சாலையில் நெல்லிபதி என்ற இடத்தில், ஐந்து அடி உயரத்தில் தடுப்பணை கட்டி 90 விழுக்காடு பணிகள் முடிந்திருக்கின்றது. மேலும், இரண்டு தடுப்பணைகளை கட்ட அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை வாரியத்தின் அனுமதியின்றி, கேரளா அரசு சிறுவாணியில் தடுப்பணைகளை கட்டி வரு கிறது. இந்த தடுப்பணைகளை தடுக்காவிட்டால் கோவை மாவட்டத்திற்கு முழுமையாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். ஏற்கெனவே பவானி ஆற்றிலும் இதுபோல தடுப்பணைகளை கட்டியுள்ளது.

கேரள அரசின் நடவடிக்கையால், சிறுவாணி ஆற்றுநீர் உரிமை முற்று முழுதாகக் கானல் நீராகி, மனிதர்கள் குடி யிருக்க தகுதியில்லாத நிலையை அடையும். கோவையில் மிகப்பெரிய குடிநீர் பஞ்சம் ஏற்படக்கூடிய பேராபத்து ஏற் படும்.

சிறுவாணி ஆறானது காவிரி மேலாண்மை ஆணையத் தின் கீழ் வரும் நிலையில் கேரள அரசு, தமிழ்நாடு அரசின் ஒப்புதலின்றி முறைகேடாகத் தடுப்பணைகளைக் கட்டி வருவது நதிநீர் சட்டத்திற்கு எதிரானது.

கேரள அரசு சிறுவாணி ஆற்றின் கொள்ளளவை 50 கன அடியிலிருந்து 45 கன அடியாக ஏற்கனவே குறைத்துள் ளதோடு, கோடைக்காலத்தில் நீர் எடுக்கும் சிறுவாணி ஆற்றின் சுரங்கப்பாதையையும் சிறிதும் மனிதத் தன்மை யின்றி மூடியுள்ளது.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணைகட்டும் கர்நாடக அரசு, பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டும் ஆந்திர அரசு, சிறுவாணி ஆற்றின் குறுக்கே தடுப் பணைகளைக் கட்டும் கேரள அரசு. இம்மூன்று மாநிலத் தில் வேறு வேறு கட்சிகள் ஆண்டாலும், அவர்களுக்குள் இருக்கும் ஒரே நிலைப்பாடு, தமிழின விரோதப்போக்கு என்பது அப்பட்டமாக வெளிப்படுகின்றது.

இப்போது, இந்த பிரச்சனைக்கு குரல் கொடுக்காமல் விட்டு



விட்டால, நாளை நமது சந்ததிகள் வாழ்வதற்கான பூமி யாக தமிழ்நாடு இருக்காது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இப்போதுவிட்டால், ஒரு காலத்திலும் மீண்டு வர முடியாத மிகப் பெரிய அழிவை தமிழ்நாடு சந்திக்க நேரிடும்.

எனவே, சிறுவாணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை களைக் கட்டி கோவையைப் பாலைவனமாக்கும் கேரள அரசின் எதேச்சதிகாரப்போக்கை தடுத்து நிறுத்த தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அருகில் தெரிவித்துள்ளார் வேல்முருகன்.

# 12 மணிநேர வேலை மசோதா நிறுத்திவைப்பு!

ஏப்ரல் 25, 2023

12 மணி நேர வேலை சட்டமசோதா மீதான செயலாக்கத்தை நிறுத்திவைப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தனியார் நிறுவனங்களில் பணியாளர்களின் வேலைநேரத்தை 8 மணி நேரத்தில் இருந்து 12 மணி நேரமாக உயர்த்த வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா, சட்டப்பேரவையில் திமுக கூட்டணி கட்சிகளின் எதிர்ப்புகளும் மீறி நிறைவேறியது.

இந்த சட்ட திருத்த மசோதாவிற்கு, தொழிற்சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். தமிழ்நாடு அரசு இந்த சட்ட திருத் தத்தை வாபஸ் பெற விட்டால் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடைபெறும் என தொழிற்சங்கங்கள் அறிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் சிஐடியு, ஏஐடியுசி, ஹெச்எம்எஸ் உள்ளிட்ட பல்வேறு தொழிற் சங்க நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் 12 மணி நேர வேலை சட்டத்தை அரசு திரும்ப பெற வலியுறுத்தி மே 12ம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என தீர்மானிக்கப்பட்டது.




இதனைத் தொடர்ந்து இந்த சட்ட மசோதா தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் முக்கிய தொழிற்சங்க நிர்வாகிகள் உடன் அரசு சார்பில் ஆலோசனை நடைபெற்றது.

இந்நிலையில், 12 மணி நேர வேலை சட்டமசோதா மீதான செயலாக்கத்தை நிறுத்திவைப்பதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், 'சட்டமன்றத் தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது பல்வேறு தொழிற் சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக் களின் அடிப்படையில், "2023-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு எண்.8/2023 என்ற 12 மணி நேர வேலை சட்டமுன்வடிவின் மீதான மேல்நடவடிக் கை நிறுத்தி வைக்கப் படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.**

**தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.**

**எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

## தமிழீழத் தேசியக் கொடி பொறிக்கப்பட்ட மேலங்கியினை அணிந்திருந்தாரென நீதிமன்றத்தில் விசாரணை!

ஏப்ரல் 21, 2023

கடந்த 19.04.2023 புதன்கிழமை அன்று, தமிழீழ தேசியக் கொடி பொறிக்கப்பட்ட மேலங்கியினை அணிந்திருந்தாரென மேற்கொள்ளப்பட்ட வழக்கு, பேர்லின் (Berlin) மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேளை நீதிமன்றத்தின் கேட்போர் கூடத்திற்குள் அமர்ந்திருந்தவர்களுள் சிறீலங்கா அரச தூதுவராலயத்தின் முகவராக செயற்படும் யேர்மனிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த மனிதநேயச் செயற்பாட்டாளர் குமணன் அவர்கள் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தார். அத்தோடு குறிப்பிட்ட முகவர் ஏற்கனவே நடைபெற்ற ஈழத் தமிழர்களின் கவனயீர்ப்புப் போராட்டங்களில் தகவல்களை சேகரித்து சிறீலங்கா உளவுத்துறையினர்க்கு அல்லது சிறீலங்கா அரசிற்கு வழங்கி இருந்தார் என்பதனையும் குறிப்பிட்டார். வழக்கின் ஆரம்பத்தில் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கப்படும் பெயர் விபரங்கள், முகவரினால் சிறீலங்கா அரசிற்கு தெரிவிக்கப்படும் பட்சத்தில் தாயகத்தில் இருக்கும் உறவுகளுக்கும் ஆபத்து நேரிடும் என்பதனை, முன் அனுபவங்களினூடாக நீதிபதிக்கு தெரிவித்தார். இதன் அடிப்படையில் குறிப்பிட்ட முகவர் குறிப்பு எடுப்பதனை நிறுத்துமாறு நீதிபதியினால் எச்சரிக்கப்பட்டார். சூழ்நிலையின் உண்மைத் தன்மைகளை உணர்ந்துகொண்ட நீதிபதி கேட்போர் கூடத்திற்குள் அமர்ந்திருந்த அனைவரையும் நீதிமன்றத்திற்கு வெளியில் காத்திருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அனைவரும் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறிய பின்பு மனிதநேய செயற்பாட்டாளர் குமணன் அவர்களிடம் நீதிபதியினால் தனிமையில் கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அதன்பின்பு வழக்கினை வேறொரு திகதிக்கு தள்ளிப்போட்ட நீதிபதி அவர்கள் தமிழீழத் தேசிய கொடி சார்ந்து அரசதரப்பு நிபுணர்கள் வழங்கிய தகவல்கள் மட்டுமன்றி வழமைக்கு மாறாக எமது தரப்பிலிருந்தும் ஒரு நிபுணரை வழங்குவதற்கு நீதிபதியினால் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு தமிழீழ தேசியக் கொடிக்கான தடையினை சட்டரீதியாக உச்சநீதிமன்றம் ஆராய வேண்டுமெனவும் எமது தரப்பு சட்டத்தரணியினால் கேட்டுக் கொள்ளப்பட்டது.



19.04.2023 அன்று இடம்பெற்ற வழக்கின் ஆரம்பகட்டமானது எமக்கு சாதகமாகவே அமைந்துள்ளது. ஏனெனில் வழக்குச்சார்ந்து உண்மைத்தன்மைகள் முறையாக ஆராயப்பட்டு, தமிழ்த் தேசிய இன அடையாளம் அங்கீகரிக்கப்படுவதோடு, ஒரு யேர்மன் நீதி மன்றத்தினூடாக ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயங்களையும் முன்வைப்பதற்கான மிகப்பெரும் வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தந்துள்ளது.

அன்பார்ந்த தமிழீழ மக்களே, எமது மாவீரர்களது அற்புதமான தியாகங்களினால் நிலைநிறுத்தப்பட்ட தமிழ்த் தேசிய அடையாளச் சின்னங்களை பாதுகாத்து, அவர்களின் இலட்சிய கனவினை நிறைவேற்ற உலகத் தமிழர்களாகிய நாம் இணைந்து செயற்படுவோமென உறுதியெடுத்துக்கொள்வோம்.

“எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அவற்றின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை நாம் அந்தந்த நாட்டின் சட்டதிட்டங்களிற்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றோம் ”

தமிழீழ தேசிய தலைவர் மேதகு.வே.பிரபாகரன்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

ஈழத்தமிழர் மக்களவை – யேர்மனி

## சூடானில் வலுக்கும் உள் நாட்டுப்போர் 270 பேர் பலி 2600 பேர் படுகாயம்!

ஏப்ரல் 19, 2023

சூடானில், ஆட்சியை கைப்பற்றுவதில் இராணுவத்துக்கும், துணை இராணுவ படைகளுக்குமிடையே நடந்து வரும் போரில் 270 பேர் உயிரிழந்துள்ளனர். 2,600க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். மருத்துவமனைகள் சேதம் அடைந்துள்ளன. மருந்துகள், உணவு பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.



வட ஆப்பிரிக்க நாடான சூடானில், 2021 முதல் இராணுவ ஆட்சி நடக்கிறது. இராணுவ தளபதி அப்தெல் பத்தா அல் - புர்ஹான் மற்றும் துணை தளபதி முகமது ஹம்தான் டாக்லோ ஆகியோர் கூட்டாக இணைந்து இராணுவ புரட்சி வாயிலாக ஆட்சியை பிடித்தனர். இதில் துணை தளபதியான முகமது ஹம்தான் டாக்லோ, ஆர்.எஸ்.எப்., எனப்படும் துணை இராணுவப் படையான, விரைவு ஆதரவுப் படையை தன் கட்டுப்பாட்டில் வைத்து உள்ளார்.

இவர் ஆட்சியை கைப்பற்ற விரும்பி, இராணுவ தளபதி அப்தெல் பத்தா அல் - புர்ஹான் உடன் மோதலில் ஈடுபட்டு வருகிறார். இருதரப்புக்கும் இடையே கடந்த சில நாட்களுக்கு முன் பயங்கர மோதல் வெடித்தது. இது மிகப் பெரிய உள்நாட்டு போராக உருவாகி உள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் துப்பாக்கி சண்டை, பீரங்கி மற்றும் விமானப் படை தாக்குதல்கள் நடந்து வருகின்றன. பொருளாதார ரீதியாக ஏற்கனவே பின்தங்கிய சூடானில் இந்த சண்டை பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த மோதலில் இதுவரை, 270 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 2,600க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். உணவு, பெட்ரோல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகின்றனர். நாட்டில் பல இடங்களில் மின்சார வினியோகம் தடைபட்டு உள்ளது.

# ஏமனில் கூட்ட நெரிசலில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்த 85 பேர்!

ஏப்ரல் 20. 2023

ஏமன் நாட்டில் கூட்ட நெரிசலில் சிக்கி 80 க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இஸ்லாமிய நாடக காணப்படும் ஏமனில் நோன்பு காலம் என்பதால் தனியார் சார்பில் உதவிகள் வழங்கும் நிகழ்விற்கு பாடசாலை ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கு உதவிப் பொருட்களைப் பெற ஒரே நேரத்தில் ஏராளமானோர் போட்டி போட்டு கூடியதால் சனா நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதனால் சன நெரிசலில் சிக்கி 85 பேர் பலியாகியுள்ளதுடன், 322 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தோரில் பெண்களும், குழந்தைகளுமே அதிகமென அந்நாட்டு சுகாதார அதிகாரிகளும் உறுதி செய்துள்ளத்துடன் காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் ஏமன் நாட்டின் போராட்டக் குழுவான ஹவுத்தி போராளிகள் குழு அரசாங்கத்தின் அலட்சியத்தினாலே அப்பாவி உயிர்கள் பறிபோனதாக குற்றம் சாட்டியுள்ளது.



# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து தென்னாபிரிக்காவின் விலகல்!

ஏப்ரல் 26, 2023

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எதிராக கடந்த மாதம் கைது பிடியாணை பிறப்பித்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து தென்னாபிரிக்கா விலக வேண்டும் என ஆளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) கட்சி தீர்மானித்துள்ளதாக அதிபர் சிரில் ராமபோசா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா) உச்சி மாநாட்டை தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவில் நடத்தவுள்ளது.

புடினுக்கு எதிரான பிடியாணையால் அவரைக் கைது செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது தென்னாபிரிக்கா. இந்நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆம், ஆளும் கட்சி ... தென்னாபிரிக்கா ஐசிசியில் இருந்து வெளியேறுவது விவேகமான முடிவு என்று முடிவு எடுத்துள்ளது என்று ரமபோசா பின்லாந்தின் வருகை தரும் ஜனாதிபதி சவுலி நினிஸ்டோவுடன் இணைந்து நடத்திய செய்தி மாநாட்டின் போது கூறினார்.

தென்னாபிரிக்கா தேசிய காங்கிரஸ் வார இறுதிக் கூட்டத்தைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட முடிவு, சில நாடுகளை நீதிமன்றம் நியாயமற்ற முறையில் நடத்துவதாகக் கருதப்பட்டதன் காரணமாக பெரிய அளவில் எட்டப்பட்டதாக ராமபோசா கூறினார்.

நியாயமற்ற முறையில் நடத்தப்படும் இந்த விவகாரம் சரியாக விவாதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

கிரெம்ளின் சட்டவிரோதமாக உக்ரேனிய குழந்தைகளை நாடு கடத்தியதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து புடினுக்கு எதிராக கைது பிடியாணையை பிறப்பிக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்கா புட்டினை கைது செய்யுமா என்பது குறித்து அந்த விடயம் பரிசீலனையில் உள்ளது என்று அப்போது ரமபோசா கூறினார்.

ஒரு கண்டத்தின் அதிகார மையமான தென்னாபிரிக்கா, சர்வதேச அரங்கில் மாஸ்கோவை பெருமளவில் தனிமைப்படுத்திய உக்ரைன் படையெடுப்பைக் கண்டிக்க மறுத்துவிட்டது. அது நடுநிலையாக இருக்க விரும்புவதாகவும், போரை முடிவுக்குக் கொண்டுவர ஒரு உரையாடலை விரும்புவதாகவும் கூறியது.



தென்னாபிரிக்கா ஐசிசியில் இருந்து விலக முயற்சிப்பது இது முதல் முறையல்ல.

ஒரு வருடத்திற்கு முன்னர் சூடானின் அப்போதைய ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாட்டிற்காக நாட்டிற்கு விஜயம் செய்தபோது ஒரு சர்ச்சையைத் தொடர்ந்து 2016 இல் அவ்வாறு செய்ய முயற்சித்தது. அல்-பஷீர் போர்க்குற்றம் செய்ததாகக் கூறப்படும் ஐசிசி கைது வாரண்டை எதிர்கொண்ட போதிலும் அவரைக் கைது செய்ய அது மறுத்துவிட்டது.

# சிறீலங்கா முன்னாள் கடற்படை தளபதியை கறுப்பு பட்டியலில் சேர்த்த அமெரிக்கா!

ஏப்ரல் 27, 2023

சிறீலங்காவின் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவை அமெரிக்காவின் கறுப்பு பட்டியலில் இணைத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், கரன்னாகொடவுக்கு விசா வழங்க மறுப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

இறுதிப்போர் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உள்ளிட்டோருக்கு எதிராக கொலை குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், அவர் குறித்த வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவினால் வடமேல் மாகாண ஆளுநராகவும் வசந்த கரன்னாகொ நியமிக்கப்பட்டார்.



இந்நிலையில் கரன்னாகொடவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் ‘தீவிரமான மற்றும் நம்பகத்தன்மையுடன்’ இருப்பதாகவும், ஆளுநரோ அல்லது அவரது மனைவியோ அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கன் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், இலங்கையில் குற்றவாளிகளுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கும் அமெரிக்கா தமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளின்கன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



LIFE INSURANCE
Mortgage Insurance Line of Credit Insurance
LiLAND

- Life Insurance (Whole / Term) ஆயுள் காப்புறுதி
- Non-Medical Up to Age 85 வயது வரை மருத்துவ பரிசோதனை அற்ற
- Critical Illness Insurance with 100% Cash back கொடிய நோய்களுக்கான காப்புறுதி கட்டிய பணம் முழுவதும் மீள பெற முடியும்

**20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி**

இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். இருபது வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை Cash Back Value பெறமுடியும்.

**Living Benefits / Income Replacement**

- If you get sick, accident or soft tissue injury
- For Self-Employed
- For Business People if you don't have benefits
- 2 years, 5 years up to Age 70 (Long Term Disability) Claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

**Super Visa, RRSP Loan, RESP (Education)**

கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness) for 25 Sickness
நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீளப்பெற முடியும்.

(24 Yrs Experience)
**INCOME TAX**
E-FILING Tax
REFUND within 10 Days

- ★ Accounting
- ★ Bookkeeping
- ★ Payroll - HST
- ★ New Business Registration

வருமான வரித்திணைக்களகத்திற்கு நேரடியாக வருமான வரிப்படிவங்களை அனுப்புதல்.



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Philip Chandran
Liland Insurance
416-450-9043
philipsam0715@hotmail.com

உங்கள் வருமானவரி மீளளிப்புப் பணத்தை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல்.

INSURANCE IS LIKE YOUR MUM AND DAD


## வன்னிச் சங்கம் - ஒன்ராரியோ, கனடா.
## VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Ave, Toronto (ONT), M1V4C7.
Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.


President:
Mr. Sivakumaran Ratnasingam

Vice President:
Mr. Ganeshalingam Veluppillai.

Secretary:
Mr. Sivasuthan Ponnaiah.

Vice Secretary:
Mr. Niththiyanantham Balasingam

Treasurer:
Mr. Vijayakumar Kumarasingam.

Board Members:
Mr. Kalanathan Sellaiah
Mr. Ratnakaran Sivapatham
Mr. Santhirasegaram Sivasithampar
Mr. Nirojan Navaratnam.
Mr. Tamilcelvan Kanapathipillai.
Mr. Sivaruban Mahalingam.
Mr. Ashokkumar Velautham.
Mr. Karunainathan Murugesu.
Mr. Gunabalasingam Balasingam.
Mr. Punniasingam Subramaniyam.
Mr. Rajeswaran Sabaratnam.
Mr. Uthayakumar Kumarasingam.
Mr. Piratheepan Tharmarajah.
Mr. Kanagaradanam Rasaiah.
Mr. Nevethanan Ganesanathan.
Mr. Mahenthirarajah Suppaiah.

Internal Auditors:
Mrs. P. Punithawathy
Mr. K. Ampalavanar.


26-4-2023.

அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்,
V United Care For Kids Inc Ontario (வன்னிச் சங்கம்).

அன்புடையீர்!

### பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2023.

V United Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் வைகாசி மாதம் 27ந் திகதி 2023ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகந் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 635 Middlefield Rd, Scarborough (ONT). காலம்: வைகாசி 27, 2023. பிற்பகல் 1.00 மணி.(சனிக்கிழமை).

The Annual General Meeting of V United Care For Kids Inc Ontario is scheduled to be held on the 27th of May in the year 2023. All authorized members of the General Assembly are therefore requested to attend this meeting.

Location: 635 Middlefield Rd, Scarborough (ONT). Date: May 27, 2023, 1.00 PM (Saturday).

Thank you.

### நிகழ்ச்சிநிரல். Agenda.

1. மௌன வணக்கம். Silent salutation.
2. தலைவர் உரை. Chairman's Speech.
3. செயலாளர் அறிக்கையும், செயற்திட்ட அறிக்கையும். Secretary's Report and Project Report.
4. பொருளாளர் அறிக்கை. Treasurer's Report.
5. சமர்ப்பிக்கப்பட்டஉபவிதித் திருத்தங்கள். Amemdments to the bill submitted.
6. இயக்குனர்சபை உறுப்பினருக்கான தேர்வு. Selection for a member of the Board of Directors.
7. பிறவிடயங்கள். Other matters.
8. கூட்ட நிறைவு. Closure of meeting.

Mr. R. Sivakumaran
President
VUnited Care For Kids Inc On.

Mr. P. Sivasuthan
Secretary
VUnited Care For Kids Inc On.

# வாழ்வு முழுமைபெற பொது அறிவு அவசியம்!

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.
19.04.1993

கல்வி என்பது அறிவு சார்ந்தது. ஒருவன் தன்னைப்பற்றியும், தனது சமூக வாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவனது ஆளுமையை சிறப்பிக்கிறது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது, அவனை முழுமனிதன் ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து, உள்ர்ந்து வருகிறது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத் தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகிறது.

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட, துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப் போவதில்லை. எனவே, துறைசார்ந்த பள்ளி, கல்லூரிப்படிப்புகளோடு பொது அறிவுத்திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவையும் கூட.

நாம் கற்கின்ற அல்லது செயற்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக் கூடாது. அதுவும் ஏட்டுக்கல்வியோடு நின்று விட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும்வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மைச் சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது.

இன்று, எத்தனையோ நெருக்கடிகள், இடர்பாடுகள் மத்தியில் எமது மாணவ சமூகம் கல்வியைப் பயின்று வருகின்றது. இம்மாணவர்களுக்கு பொது அறிவில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படுகின்ற அன்னைபூபதி பொது அறிவுத்தேர்வானது மிகவும் ஆக்க பூர்வமான முயற்சி என நான் கருதுகின்றேன்.

எமது மாணவர்கள் தமது பொது அறிவை பெற்றுக்கொள்வதற்கான பாடத்திட்டங்கள், கற்பித்தல்கள் இல்லாத நிலையிலும் பொது அறிவைத் தாமாகவே பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள் அருகி விட்ட இன்றைய சூழ்நிலையிலும், 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இம்முறை இந்தப் பொதுத்தேர்வில் தோற்றியிருப்பதும், பல மாணவர்கள் மிகச்சிறந்த வகையில் தமது ஆற்றல்களை வெறிப்படுத்தியிருப்பதும் பாராட்டத்தக்க விடயமாகும்.

அந்நியனால் எமது தேசம் ஆக்கிரமிக்கப்பட்ட மிக நெருக்கடியான காலகட்டத்தில், எமது விடுதலைப் போராட்டத்தை வீறுபெறச்செய்த தற்கொடையாளி அன்னைபூபதியின் நினைவாக பொது அறிவுத்தேர்வை ஆண்டுதோறும் நடாத்திவரும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு, அந்தத் தாயின் நினைவு நாளில், அந்த அன்னையின் பேரில் அமைந்த கலையரங்கத்தில், சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களை கௌரவிப்பது சாலப் பொருத்தமானதாகும்.

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு மேற்கொண்டுவரும் இந்த நன்முயற்சி தொடர வேண்டும். இப்பொதுத்தேர்விலே பங்கு கொண்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டுவதோடு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வியக்கத்தக்க முறையில் தனது திறனாற்றலை வெளிக்காட்டிய 4ஆம் ஆண்டு மாணவன் செல்வன் வி. கோகுலனின் ஆற்றலை மெச்சுகிறேன். கோகுலனுக்கு எனது சார்பில் சிறப்புப் பரிசை வழங்குவதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

“புலிகளின் தாகம் தமிழிழத் தாயகம்”

வே. பிரபாகரன்.
தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்பு: 19.04.1993 அன்று, அன்னை பூபதியின் நினைவாக நடைபெற்ற பொதுஅறிவுத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களைப் பாராட்டித் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் விடுத்த அறிக்கையை இங்கு பிரசுரிக்கிறோம்.


உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# உழைப்போர் தினத்தில் உறுதி எடு

பொன்னும் மணியும் மின்னலிட
செந்நெல் வயல் மணி சொத்தாடிட
எம்மனை நெல்மணி
கொண்டுமே நிறைத்துமே
எத்துன்பமும் இன்றியே வாழ்ந்தவர் நாம்.
கட்டி ஆண்டவர்
கங்கை கொண்டவர்
அட்டதிக்கும் படி அளந்தவர்
எட்டி வந்த பகை போடும்
பொருள் தடையால் முடங்கவா?
படை கொண்டு மோதிவென்ற
பண்டைத் தமிழ் ஈழநாட்டில்
விடை கொண்டு பகை ஓடாமல்
வேரூன்றி சிங்களம் தங்கிடுமா.
கல்லார்க்கும் கல்வி தந்த நாட்டில்
கல் நெஞ்சினர் கண்டதிற்கும் தடை

எம் தேசத்தில் ஏர் பிடித்து
நிலம் பிளந்து விதைபரப்பி
தானியம் நாம் பெற்ற வயல்
வந்த கயவர் கால் தடம் பதிந்து
வலுவிழந்து செம்மணிபோலாச்சு
உழைப்பால் உயர்ந்த தமிழா!
உலகத்தில் இன்று
உழைப்போர் தினமாம்
உனக்கும் தானே உறுதிகொள்
உன்னத தலைவன் தலைமையில்
தடைகள் தாண்டி முன்னேறி
தமிழர் பொருளாதாரம் முன்னேற்றி
தன்னிறைவான தாயம் அமைப்போம்
தயக்கம் அகற்றி தலை நிமிர்த்தி
உழைக்கும் கரமுயர்த்தி உறுதி எடு
உன்னால் முடியும் உழைக்கும் நண்பா.



"சுயநிறைவான, தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவவேண்டும். உழைப்பவனே பொருளுலகினைப் படைக்கிறான் மனிதவாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றான். உழைக்கும் கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்."

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்



நன்றி
அ. அன்ரனி
மே எரிமலை 2000


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
FREE EFILE SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR GROUP
Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643




# சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி புலிகளின் முதல் மரபுப் படையணி!

2ஆம் கட்ட ஈழப்போரின் ஆரம்ப கட்டங்களிற் கெரில்லாப் போர் அணியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் பின்னர் மரபுவழி இராணுவ அம்சங்களை பிரதிபலிப்பவர்களாகப் போரரங்கில் நுழைந்தனர். அது விடுதலைப் புலிகளின் போரியல் வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்து விட்டுள்ளது.

ஒரு மரபுவழி இராணுவத்தின் தேவையை அன்றை சூழல் எமக்குத் தந்தது. எதிரி தனது முகாம்களைப் பலப்படுத்தியதுடன் ஒரு கெரில்லா அமைப்பாற் சாதாரணமாகத் தாக்கியழிக்கப்பட முடியாதவாறு தன் முகாம்களை அமைத்திருந்தான். ஏற்கனவே மரபுவழிப் படைக்குரிய அம்சங்களைக் கொண்டிருந்த தன் படைகளைப் பலப்படுத்தி, நவீன ஆயுதங்களையும் புதிய போர் நுணுக்கங்களையும் பெருமளவிலான ஆளணிகளையும் ஒன்று சேர்த்து, ஒரு பலம் வாய்ந்த மரபுப்போர் இராணுவமாகத் தன் படைகளை எதிரி ஒழுங்கமைத்திருந்தான்.

இப்புதிய ஒழுங்கமைப்பின்மூலம், தான் ஏற்கனவே எம் தாயகப் பிரதேசத்தில் அமைந்திருந்த முகாம்களை எமது தாக்குதல்களிலிருந்து காப்பாற்றியதுடன், எமது பாரம்பரிய பிரதேசங்களின் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டும் புலிகளின் தளப் பிரதேசத்தைக் கைப்பற்றியும் மக்களின் வாழ்வை அவலப்படுத்தியும் ஆக்கிரமித்தும் எம் மக்களை ஏதிலிகளாக்கும் ஒரு நீண்ட திட்டத்தை எதிரி தயாரித்திருந்தான்.

எதிரியின் இப்புதிய போர் மூலோபாயமானது எம் போராட்ட வளர்ச்சிக் கட்டத்திற் பேராபத்தை விளைவிக்கக்கூடிய தடைகல்லாக இருந்தது. இந்நிலையில் எதிரியின் மரபுவழி இராணுவத்தை எதிர்கொண்டு அந்த இராணுவத்தைத் தாக்கி அழிக்கத் தக்கவாறான பயிற்சி, தந்திரம், நவீன ஆயுதங்களைக் கையாளக்கூடிய திறமை, அணிகளைப் போரில் வழிநடத்தும் புலமை என்பன நிரம்பப்பெற்ற படையணிகளாக எம்மை மாற்றிக்கொண்டு விடுலைப்போரின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு எமது விடுதலைப் படையைத் தயார்படுத்தத் தலைவர் முயன்றார்.

அன்றைய காலப்பகுதியில் எமது அமைப்பினால் வெற்றிகொள்ளப்பட்டிருந்த யாழ் கோட்டை மற்றும் தாக்கியழிக்கப்பட்ட கொண்டச்சி, கொக்காவில், மாங்குளம், தென்தமிழீழத்தின் பல முகாம்கள் என எல்லாமே பிராந்திய மட்டத்திற்கு உட்பட்ட எமது தாக்குதல் அணிகளாலேயே பெரும்பாலும் வெற்றிகொள்ளப்பட்டிருந்தன. ஆனாலும், சில முகாம்களின் தாக்குதல் வெற்றிகள் பல பிராந்தியப் படைகளின் ஒன்றிணைந்த தாக்குதலகளின் மூலம் கிடைத்தன. அவ்வாறான வெற்றிகள் எதிர்காலத்தில் ஒரு மரபுவழிப் படையின் தோற்றத்தையும் அது தரப்போகும் வெற்றிகளையும் கட்டியங் கூறி நின்றன.






2ஆம் கட்ட ஈழப்போர் தொடங்கிய சொற்ப காலத்தில் ஒரு மரபுவழிப் படையணியின் தேவைக்கான சூழல் தலைவரால் உணரப்பட்டு, அவரின் எண்ணப்படி அது உருவாக்கம் பெற்றது. விடுதலைப் புலிகளின் இராணுவ அமைப்பானது தன்னை ஒரு மரபுவழிப் போரிற்குத் தயாரான படைப்பிரிவாக உருமாற்றியவாறு, மரபு இராணுவத்துக்குரிய தன் வளர்ச்சிப் படியில் விரைவாகவும் நிதானமாகவும் முன்னேறத் தொடங்கியது.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி மாவட்டரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகள் ஒன்றிணைக்கப்பட்டு 1500 பேர்கொண்ட ஓர் அணியாகச் “சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி” எமது இயக்கத்தின் முதலாவது மரபுவழிப் படையணியாக உத்தியோகபூர்வமாக எமது தலைவர் அவர்களாற் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதுவரை காலமும் நடைமுறையிலிருந்த இராணுவக் கட்டமைப்புக்களும் போர்ப் பயிற்சித் திட்டங்களும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் உருவாக்கத்துடன் புதிய வடிவம் பெறத்தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம், தென்மராட்சியின் எழுதுமட்டுவாட் பகுதியில் ஒன்றிணைக்கப்பட்ட இப்புதிய படையணியானது 1200 பேர்கொண்ட தாக்குதல் அணியாகவும் 300 பேர் கொண்ட கனரக ஆயுத அணியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டது.

“சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி” என்னும் பெயர் தலைவர் அவர்களாலேயே சூட்டப்பெற்றது. லெப். சாள்ஸ் அன்ரனி (சீலன்) தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர். தமிழீழ விடுதலைப் போரிற் சிங்கள இராணுவத்தின் மீதான புலிகளின் முதலாவது தாக்குதலைத் தலைமையேற்று நடாத்திய, முதலாவது தாக்குதற் பிரிவுத் தளபதி விடுதலைப்போரில் எமக்கெல்லாம் சிறந்த உன்னத வழிகாட்டியின், புலிகளின் தாக்குதற் படைப்பிரிவின் முதலாவது தளபதியின் ஞாபகமாகவே விடுதலைப் புலிகளின் முதலாவது மரபுப்போர்ப் படையணிக்கு “சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி” எனப் பெயர் சூட்டப்பெற்றது.

“சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி”யின் தொடக்க நாள் அன்று படையணிப் போராளிகள் மத்தியில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உரையாற்றும்போது “நீண்டதும் கடினமானதுமான எமது விடுதலைப் போரில் இறுதிவரை உறுதி



யுடன் போராட உடல், உளப்பயிற்சிகள் அவசியம். எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து அதனை வெற்றிகொள்ளத் தேவையான தந்திரங்களையும் வகுத்துக்கொள்ள வேண்டும். இவை இருந்தால் மட்டும் ஒரு படையணி வெற்றியடைய முடியாது. இவற்றைச் செயற்படுத்தும் துணிவும் வேண்டும். பயிற்சி, தந்திரம்,துணிவு இவையே ஒரு படையணியின் வெற்றியைத் தீர்மானிக்கும்” எனத் தெரிவித்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி இதையே தனது தாரக மந்திரமாகக் கொண்டுள்ளது. மேலும், அவர் கூறுகையில்













“விடுதலைப் போரிற் பெரிய இலக்குகளைத் தாக்கியழிப்பதுடன், தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயற்படும் அணியாகவும் நீங்கள் விளங்க வேண்டும்” எனத் தெரிவித்தபோது முதன்முதலில் ஒரு சிறப்புப் படையணியாகக் கூடி நின்ற போராளிகளின் மனதில் அது புதிய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தது.

இப்படைபிரிவின் உருவாக்கத்திற்காகப் பல்வேறுபட்ட பிராந்தியப் படைகளில் இருந்து வந்திருந்த போராளிகளின் மனதில் மகிழ்வும் ஆர்வமும் ஒத்துழைப்பும் வேகமும் மேலோங்கியிருந்தன. அன்றைய சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த போராளிகள் ஒவ்வொருவரதும் அயராத முயற்சியாலும் அர்ப்பணிப்பாலுமே விடுதலைப் புலிகளின் மரபுப் போர் அணிகளின் முதற்படியான “சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி” புலிகளின் புதிய போரியலுக்கான ஒரு திறவுகோலாகத் தன்னை அமைத்துக்கொண்டது.

ஆரம்பத்தில் இப்படைப் பிரிவின் சிறப்புத் தளபதியாகத் தளபதி பிரிகேடியர் பால்ராஜ் (மாவீரர்) அவர்களும் தளபதியாக லெப். கேணல் ராஜன் (மாவீரர்) அவர்களும் துணைத் தளபதியாக லெப். கேணல் ஜஸ்ரின் (மாவீரர்) அவர்களும் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டனர்.

2ஆம் கட்ட ஈழப்போர் தொடங்கிய ஆரம்ப நாட்களிற் சிங்களப் படைகளின் உடனடி இலக்காக வன்னிப் பகுதியே இருந்தது. மணலாறு உட்பட வன்னியின் பகுதிகளைக் கைப்பற்றி, வடக்கு - கிழக்கைப் பிரித்தெடுக்கவேண்டிய அவசர இராணுவத் தேவை எதிரிக்கு இருந்தது. இந்திய இராணுவத்துடனான எமது போரை நடாத்திய தலைவர் தங்கியிருந்த மணலாற்றுப் பகுதியின் இராணுவ முக்கியத்துவம் எதிரிக்கு நன்கு தெரிந்தது. இதனால் வன்னியையே முதலிற் கைப்பற்ற எதிரி எண்ணினான். எனவே, எதிரியின் மரபுவழி இராணுவ நடவடிக்கையை எதிர்நோக்கி விடுதலைப் புலிகளின் “சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி” வன்னியிலேயே தன் ஆரம்பச் செயற்பாடுகளைத் தொடங்கியது. “வன்னியைப் பதுகாப்பதே எமது உடனடித் தேவையாக அப்போதிருந்தது. அதற்குரிய நடவடிக்கையிலேயே நாம் உடனடியாக ஈடுபட்டோம்” என அன்றைய சூழலை நினைவுகூர்ந்தார் தளபதி பால்ராஜ்.

2ஆம் கட்ட ஈழப்போர் தொடங்கிய ஆரம்பகாலப்பகுதி. சிங்களப் பேரினவாத அரச இராணுவம் விடுதலைப் புலிகளை எளிதாகத் தோற்கடித்துவிடலாமென நம்பியிருந்த காலமது. எனவேதான், விடுதலைப் புலிகளைத் தொடர்ச்சியான முற்றுகைக்குள்ளாக்கி எம் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்க எதிரி முயன்றான். எமது கட்டுப்பாட்டுப் தளப்பிரதேசத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் எம்மைத் தோற்கடிக்க எதிரி திட்டமிட்டான். அதற்காகவே அன்றைய பெரும்பாலான படையெடுப்புக்கள் எதிரியால் மேற்கொள்ளப்பட்டன. எதிரியின் இந்த முற்றுகைச் சமரை உடைப்பதில், அவனது இராணுவ நடவடிக்கைகளைக் கேள்விக்குறியாக்குவதில் அன்று சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பங்கு பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. அன்று தொடக்கம் இன்று வரை எதிரியின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான முறியடிப்புச் சமர்களானாலும் எம்மால் திட்டமிடப்பட்ட வலிந்த தாக்குதல்களானாலும் அவற்றிலெல்லாம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளைத் தலைவர் அவர்கள் ஒப்படைத்து வருகின்றார்.

இவ்வாறு எமது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் உருவாக்கமானது எம் போராட்ட வடிவத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தந்துவிட்டது. கெரில்லாப் போராட்ட வடிவத்திலிருந்து நாம் மரபுவழி இராணுவ அம்சங்களைக்கொண்ட படையணிகளாக மாறிய போரியல் வளர்ச்சியின் ஆணிவேராக நின்று, எதிரியின் எத்தனையோ இறுக்கமான சவால்களையும் நெருக்கடிகளையும் தனக்கே உரித்தான நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டு, வீரத்தாலும் தியாகத்தாலும் எமது விடுதலைப் போர் வரலாற்றை நிறைத்தபடி, எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலிற் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி உறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றது.

உலகம் அதிசயிக்கும் இன்றைய விடுதலைப் புலிகளின் போர் நுட்பங்களும் படைநகர்த்தும் திறனும் புலிப்போராளிகளினது வீரத்தாலும் தியாகத்தாலும் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கோபுரமாயின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் செயற்பாடுகள் அதன் அத்திவாரக் கற்களில் ஒன்றாகும்.

லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் “வென்று வந்த வரலாற்றின் ஒரு சகாப்த வரிகள்” எனும் கள வரலாற்று தொகுப்பிலிருந்து...



பிரிகேடியர் பால்ராஜ்



லெப். கேணல் ராஜன்



லெப். கேணல் ஜஸ்ரின்








TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive. Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W. Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


New RANGANAS JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள் மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery for Lowest Price
1% முதல் தங்க நகை அடைகு சேவை
Markham & Steeles (Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள கனடாவில் நம்பிக்கை நாணயம் கைராசி ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ், 1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ் பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
Canada Trust | Scotiabank | FIRST NATIONAL | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1


146, 679
Killed by Sri Lanka Government
Not Just War Crime, It's Genocide


Mr. Prime Minister, Don't Turn your Back!
RECOGNIZE
TAMILEELAM GENOCIDE






# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# வல்வைப் படுகொலை 13 மே 1997

யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் வல்வைக்கிராமம் உள்ளது. 10.05.1985 அன்று சிறீலங்கா இராணுவம் வல்வைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தது 24 இளம் ஆண்களை கைது செய்தது. அங்குள்ள ஒரு பொதுமண்டபத்தில் இவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டனர். பின்னர் இம்மண டபத்தின் மேல் குண்டு வீசப்பட்டு அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 24 ஆண்களும் கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் அவ்வூர் கோவில் கேணியருகே மேலும் 12 பொது மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதைவிட மேலும் 34 பொதுமக்கள் அன்று கொல்லப்பட்டனர். அவ்வூரில் அன் றைய தினம் 70 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறை பற்றுக் பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து பரந்தன் வீதியில் சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமே முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசமாகும். இக்கிராமத்தின் பொருளாதாரம் மீன்பிடி, விவ சாயம் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் கிரா மத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மீன வக் குடும்பங்கள் இங்குள்ள கடற்கரை யோரங்களில் செறிவாகக் குடியேறி கடற் றொழிலில் ஈடுபட்டுவந்தார்கள்.

13.05.1997ஆம் ஆண்டு முற்பகல் விமானப் படையின் “கிபிஉ” விமானங்கள் இப்பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண் டிருந்த ஒன்பது மீனவர்கள் உயிரிழந்ததுடன், வீதி புனரமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவர் உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சிவாஸ்மகேந்திரம் - கடற்றொழில் 38
02. நாகராசா தவரத்தினராசா - விவசாயம் 24
03. சின்னையா ஆறுமுகம் - கடற்றொழில் 68
04. பொன்னம்பலம் பாக்கியராசா - கடற்றொழில் 60
05. சுப்பிரமணியம் அஜந்தன் - கடற்றொழில் 15
06. சிவகுரு மகேந்திரன் - கடற்றொழில் 39
07. சிவகரன் துதிகரன் - கடற்றொழில் 18
08. மல்லி - 42
09. இராமசிங்கம் இராசையா - கடற்றொழில் 73

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ரவீந்திரன் 28
02. செ.கோணேஸ்வரன் 33
03. ஆ.சுதன் 20
04. கதிர்காமு சிங்கம் 25
05. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 48
06. செல்வநாதன் சிறீபத்மநாதன் 31
07. க.கணேசலிங்கம் -
08. ஜெ.ரவிக்குமார் 15

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# உதயன் பணிமனை படுகொலை – 02 மே 2006






ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படு கின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப் பாகவும் நடு நிலைமைத் தன்மை யாகவும் செயற்படமுடியும். இலங்கையின் ஊடகங் களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப் பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப் பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.

02-05-2006 அன்று மாலை உதயன் பணி மனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயார்ப் படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த சிறீலங்கா இராணு வத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்து கொண் டிருந்த பணியாளர்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந் தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறு மதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவ துடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஊடக வியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப் புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்), 30
02. இராசரத்தினம் ரஞ்சித்குமார், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





# உதயன் பணிமனை படுகொலை 02 மே 2006











# நெல்லியடிப் படுகொலை – 04 மே 2006

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணுவத்தினாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞஉகள் உயிரிழந்தனர்.

இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவின்டிலில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது. இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச்சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படு கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சுமன், 22
02. வேலுப்பிள்ளை நிமலன், 21
03. நாகரத்தினம் நகுலேஸ்வரன், 18
04. பாலச்சந்திரன் கிரிசாந்தன், 18
05. தாமோதரம்பிள்ளை சர்மிலன், 17
06. நவரட்ணராஜா நாசண்ணா, 19
07. சுப்பிரமணியம் சுபாஸ், 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மந்துவில் படுகொலை – 06 மே 2006

யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும்பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளைஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7.00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11.00 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு 1.00 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத˙தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக் குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம்பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும˙ மண்ணால் மறைக்கப்படட் இரத்தத் தடயங்கள் காணப்பட்டன.

பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில் சடலங்கள் எதுவும் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடஉபாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி பரிமேலழகன், 22
02. இரத்தினம் தயாரூபன், 21
03. பொன்னம்பலம் பர்த்தீபன், 22
04. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
05. இராமச்சந்திரன் இராசகுமார், 24
06. செல்வரட்ணம் சிவானந்தன், 24
07. மார்க்கண்டு புஸ்பகாந்தன், 26
08. இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# அல்லைப்பிட்டி படுகொலை – 13 மே 2006








இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ் மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் சிறீ லங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டு வந் தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற் பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன் முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படு கொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006 அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் தேவாலயத் திற்கு அண்மையிலுள்ள செல்லத் துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலி லுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரண மாக இரவில் தங்குவது வழக்கமாக இருந்தது. அன்றும் அப்படியே அங்கு கூடியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர். பின்னர் அமலதாஸ் என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருநத் 04 மாதச்சிறுவனும் 04 வயதுச் சிறுவனும் பரிதாபகரமாக உயி ரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனு மதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதே வேளை சில கடற்படையினர் புளியங் கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத் தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச் சாலை உரிமையாளரான செந்தூரன் என் பவரது வீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என் பவரைச் சுட்டுக்கொன்றனர். இவ்வாறாக அன்றிரவு 13 பொதுமக்கள் உயிரிழந்தனர். பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத் துக்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பாலசாமி கேதீஸ்வரன், 25
02. கேதீஸ்வரன் அனெக்ஸஸ்தர், 25
03. கேதீஸ்வரன் தனுஷ்காந், 04
04. கேதீஸ்வரன் யதுசன், 04 மாதம்
05. ஆபிரகாம் றொபின்சன், 28
06. செல்லத்துரை அமலதாஸ், 28
07. கணேஸ் நவரட்ணம், 50
08. யோசப் அந்தோனிமுத்து, 64
09. சின்னத்துரை சிவநேசன், 46
10. எம்.சண்முகலிங்கம், 60

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப்படுகொலை 10 மே 2009

முல்லைத்தீவில் 10.05.2009 ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். சனிக்கிழமை 10 மே 2009 இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை “பாதுகாப்பு வலயத்தில்” சிறீலங்கா இரா ணுவம் கண்மூடித்தனமாக எறிகணை வீச்சு நடத்தியது, எராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்ததாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக மருத்துவமனையில் இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. சர்வதேச அளவில் தடைசெய்யப் பட்ட இராசயன (கிளஸ்டர்) குண்டுகள் மற்றும் மல்ரி ராக்கெட் மற்றும் பீரங்கிகளிலிருந்து சுடப்பட்ட குண்டுகள் போன்ற ஒவ்வொரு வகையான ஆபத்தான ஆயுதங்களாலும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்பட்ட பகுதி ஒரு கொலைக் களமாக மாற்றப்பட்டு இருந்தது. இறந்த உடல்கள் பதுங்கு குழி களிலும், தார்ச்சாலைக் கூடாரங்களுக் குள்ளும் காணப்பட்டன.





# முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப்படுகொலை 10 மே 2009















30.04.2009


12.05.2009


12.05.2009


02.05.2009


12.05.2009


12.05.2009


02.05.2009


12.05.2009


12.05.2009


08.05.2009


13.05.2009


13.05.2009


08.05.2009


08.05.2009






உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

**RASAN**
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com



**Preparation of Income Taxes T1 and T2 with E/File**

Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6

Tel: 905.554.5606
Fax: 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993




**The ESTATE**
BANQUET AND EVENT CENTRE



The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4

Tel:416 400 5993

info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF




Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

**PTR DOORS & WINDOWS**
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# முள்ளிவாய்க்கால்

## வலி சுமந்த பதிவுகள்...






# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி“ என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




# வரலாற்றுக்கு முற்பட்ட வன்னிப் பண்பாடு

### கால ஒழுங்கு (Chronology)

இந்திய-இலங்கை மண்ணில் மனித இனங்கள்: கி.மு. 1800,000

வன்னியில் பழைய கற்கால மக்கள் : கி.மு. 125,000

நவீன மனிதனின் (homo sapiens) வருகை: கி.மு. 60,000

இடைக் கற்கால ஆரம்பம் : கி.மு. 33,000

இலங்கை தனித்தீவாகப் பிரிதல் : கி.மு. 7,000

இரும்புக்கால ஆரம்பம் : கி.மு. 3,380

வரலாற்றுக்கால ஆரம்பம் : கி.மு. 2,300

### நிலவியல் (Geology)

இற்றைக்கு 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் பெயர்களும், இந் நாடுகளிலுள்ள நிலப்பகுதிகளின் வழக்கிலுள்ள பெயர்களும் வரலாற்றுக் காலத்திலேயோ அல்லது வரலாற்றுதய காலத்திலேயோ மக்கள் இந் நிலங்களுக்குக் கொடுத்த பெயர்களேயாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் இந் நிலங்கள் வேறு பெயர்களால் அக்கால மக்களால் அழைக்கப்பட்டிருக்கலாம். அவை பற்றிய விவரங்கள் நமக்குத் தெரியாதாகையால் தற்காலப் பெயர்களைக் கொண்டே பூர்வீகமான இந்நிலப் பகுதிகளை நாம் குறிப்பிட வேண்டியுள்ளது.

கி. மு. 115,000 ஆண்டு முதல் கி.மு. 12,000 ஆண்டு வரை நீடித்த கடைசிப் பனியுகக் காலத்தில் - கடல் மட்டம் இன்றிருப்பதை விட 120 முதல் 135 மீட்டர் குறைவாக இருந்த காலப் பகுதியில் - இலங்கை இந்தியாவோடு இணைக்கப்பட்ட நிலப் பகுதியாக இருந்தது.1 இந் நிலத்தின் நீள - அகல பரிமாணங்களும் இன்றிருப்பதை விடப் பெரியதாகவே இருந்தன. இந் நிலம் ‘இந்திய - இலங்கை” ஆகிய ஒரே நிலமாகும்.

கி. மு. 12,000 ஆண்டு முதலாக - கடைசிப் பனியுகம் முடிவிற்கு வந்த காலத்திலிருந்து உலகைச் சூழ்ந்திருந்த பனிப்படலங்கள் உருகி, கடல் மட்டம் சிறிது சிறிதாக மேலெழுந்த போது இந்திய - இலங்கையின் கரையோர நிலப்பகுதிகள் சிறிது சிறிதாக கடலினுள் அமிழ்ந்து போயின.

கி.மு. 7,000 காலப்பகுதியில் இலங்கை இந்தியாவிலிருந்து தனித் தீவாகப் பிரிந்து போயிற்று.2 அடுத்த ஆயிரம் ஆண்டு காலப்பகுதியில் - பனிப்படலங்கள் உருகி ஆறுகள் வழியாகப் பெருகி வரும் நீரினாலும், மழையினாலும் ஏற்படும் கடல் பெருக்கமும், கடல் நீர் ஆவியாகப் போவதால் ஏற்படும் கடல் மட்டக் குறுக்கமும் சமநிலை அடைந்த நேரத்தில் - கடல் மட்டம் சீர்நிலை அடைந்தது3.




வன்னியில் இடைக்கற்காலத் தொல்லியல் மையங்கள்



இற்றைக்கு 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி. இன்றையகால நிலவரை அதனுள் காட்டப்பட்டிருக்கிறது. இலங்கை-இந்திய இறுதி நிலத்தொடர்பு தென்னிந்தியாவின் தென்கிழக்குக் கரையோரமாகவே இருந்தது.

நன்றி: டர்ஹாம் பல்கலைக்கழக புவியியல் துறை

இலங்கை தென்னிந்தியாவிலிருந்து பிரிந்து வந்ததற்கான புவியியல் ஆதாரங்கள் பலவுண்டு. தென்னிந்தியாவும் இலங் கையும் உலகின் மிகப் பழமையான கருங்கற்களைக் (granite) கொண்டிருக்கின்றன. இவை தவிர சுண்ணாம்புக் கல், பேஸோல்ற், குவாட்ஸ். அகேற், சல்ஸிடோனி ஆகிய கற்கள் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் பொதுவானவை. இலங்கையின் மத்தியிலுள்ள பேதுருதாலகால மலையடுக்கு தென் னிந்தியாவின் மேற்குக் கரையோரமாக அமைந்திருக்கும் பொதிகை மலைத் தொடரின் (Western Ghats) தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது. தென்னிந்தியாவின் கிழக்குக் கரை ஓரமாக திருநெல்வேலி வரை தொடர்ந்திருக்கும் தேரி மணல் மேடுகளின் தொடர்ச்சியே இலங்கையின் வட-வடமேற்குப் பகுதியில் கடற்கரை ஓரமாக முல்லைத்தீவிலிருந்து குதிரை மலை வரை படர்ந்திருக்கும் இரணைமடு தேரித்தொடராகும்.

வட இலங்கையில் கிளிநொச்சியின் பெரும் பகுதி, மன்னார், முல்லைத்தீவு, வுவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய 7,650 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நிலப் பரப்பே வன்னி நாடு. பலதரப்பட்ட நீர்ப்பாசன குளங்களையும், வருடம் முழுவதும் வற்றாத ஆறுகளையும் கொண்ட வளபூமி இது. அக்கராயன் ஆறு, அருவி ஆறு, கனகராயன் ஆறு, கோடாலிக் கல்லு ஆறு, மண்டேகல் ஆறு, நாயாறு, பாலி ஆறு, பல்லவ ராயன்கட்டு ஆறு, பறங்கி ஆறு, பேராறு, தேராவில் ஆறு என் பன இந்நிலத்தை வளமாக்கும் நீராறுகள். வன்னி நிலத்தை யாழ்ப்பாணக் கடல் நீரேரி, நந்திக்கடல், சுண்டிக்குளம் நீரேரி, கொக்கிளாய் நீரேரி, நாயாறு நீரேரி, சாலை நீரேரி ஆகிய கடல் நீரேரிகள் சூழ்ந்திருக்கின்றன. வன்னி நிலத்தின் 4,200 சதுர கிலோமீட்டர் பரப்புக் கொண்ட பெரும் பகுதி அடர்ந்த காடு களைக் கொண்டிருக்கிறது.

### வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

பண்டைக்கால மக்கள் விட்டுச்சென்ற சான்றுகளின் அடிப்படையில் அக்கால மக்களது வாழ்க்கை முறைபற்றியும், அம்மக்களது பண்பாட்டைப் பற்றியும் எடுத்தியம்பும் இயல் தொல்லியலாகும். இச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே அம் மக்களது நாகரிக வளர்ச்சியைக் காட்டும் காலங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் வரலாற்றுதய காலம் (Proto-historic Period), வரலாற்றுக் காலம் (Historical Period) எனத் தொல்லியலாளர்களால் பிரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்தாதாரங்கள் பயன்படுத்தப்படாத காலகட்டத்தைக் குறிப்பதாகும். இதனால், இக்காலகட்ட வரலாறு பெருமளவிற்கு தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டியுள்ளது. இதற்கு அக்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள், மட்பாண்டங்கள், மண்படைகள், சிற்பங்கள், ஓவியங்கள், அன்றாடம் பயன் படுத்திய பாவனைப் பொருட்கள் என்பன பெரிதும் உதவுகின்றன. உலக நாடுகள் பலவற்றினதும் வரலாற்றுக்கு முற்பட்ட நாகரிக வரலாறு இவற்றின் துணை கொண்டே




**இரணைமடு தேரிமணல் மேடுகளில் கண்டெடுக்கப்பட்ட சில கல்லாயுதங்கள், கல் உபகரணங்கள்**

நன்றி: S.U.தெரனியகல.

கட்டியெழுப்பப்பட்டுள்ளது4.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை தொல்லியலாளர்கள் பண்டைய மக்கள் உபயோகித்த கல்லாயுதங்களின் தோற்ற காலத்தைக்கொண்டு கீழ்க்காணும் காலப்பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவை உருவாக்கப்பட்ட காலத்திற்கேற்ப அவற்றின் பருமன், தோற்றம், செயற்திறன், அவற்றை ஆக்குவதில் கடைப்பிடிக்கப்பட்ட தொழில் நுட்பத் திறமை, அவற்றின் பயன்பாடு என்பன வேறுபட்டிருக்கும். மக்களின் பண்பாட்டு வளர்ச்சியோடு இக்கற்கருவிகளின் தொழில் நுட்பத்திறமை மேம்பட்டு வந்திருப்பது கண்கூடு.

பழைய கற்காலம் (Paleolithic or Old Stone Age): இலங்கையில் இக் காலப்பகுதி இ.மு. 125,000 முதல் 33,000 ஆண்டுகாலம் வரை நீடித்திருக்கிறது.

இடைக்கற்காலம் (Mesolithic or Middle Stone Age): பிற நாடுகளில் இடைக் கற்கற்கால ஆரம்பம் கி. மு. 12,000 ஆக இருப்பினும் இலங்கையில் உள்ள இடைக்கற்காலக் கருவிகளின் ஆரம்பகாலம் கி.மு. 33,000 ஆக வெப்ப-ஒளியேற்றுவியல் (thermo-luminescence கணிப்பின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

புதியகற்காலம் (Neolithic): இக்காலத்தில் வேட்டையாடி நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் ஓரிடத்தில் தங்கி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

இரணைமடு தேரிமணற் தொடர் கற்காலத்தைத் தொடர்ந்து கி.மு. 3,380ம் ஆண்டளவில் இலங்கையில் இரும்புக்காலம் ஆரம்பமாகியது5.

### ஆதிகாலக் குடியிருப்புகள்:
### பழைய கற்காலம்

இந்தியாவில் கி.மு. 1800,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனித இனங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன6. நெடுங்காலமாக இலங்கையும் இந்தியாவும் நிலத்தொடர்பு கொண்டிருந்தமையால் இலங்கையிலும் இக் காலகட்டத்திற்குரிய மனித எச்சங்கள் வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம். இன்றைய தொல்லியல் ஆய்வுகளின்படி இ.மு. 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இலங்கையில் மக்கள் வாழ்ந்திருந்தமைக்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுகின்றன7. இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பழைய கற்காலத்தைச் சேர்ந்த மக்களாவார்.

வட இலங்கையில் முல்லைத்தீவின் வடபகுதியிலிருந்து வடக்கு-வடமேற்காக பரந்தன், பூநகரி, மாந்தை, புத்தளம், குதிரைமலை வரை கடற்கரையோரமாகப் பரந்திருக்கும் தேரி-மேடு, இரணைமடு அமைப்பு (Iranamadu Formation) என அழைக்கப்படுகிறது. இந்த மேடுகள், பரந்து கிடக்கும் சரளைக் கற்களுக்கு (Gravel) மேலுள்ள களிமண் கலந்த மணல் மேடுகள் பல்லாயிரம் ஆண்டுகால சீதோஷ்ண வெப்ப-தட்பத்தில் சிவப்புநிறமாக மாற்றம் பெற்றிருக்கின்றன. இந்த இரணைமடு மணல் மேடுகளில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் முதல் இடைக்கற்காலம்வரை பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன8.

இக்கால மக்கள் தமது ஆகாரத்திற்காக நாடோடிகளாக இடம் விட்டு இடஞ்சென்று வேட்டையாடியும், கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் மீன்பிடித்தும் வாழ்ந்தமையால் இவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் ஆற்றங்கரைகளிலும் கடற்கரைகளிலும் காணப்படுகின்றன. இவர்கள் உபயோகித்த மற்றைய பாவனைப் பொருட்களும் உடுத்திய உடுப்புகளும், ஏன்- அவர்களின் எலும்புக்கூடுகளும் அழிவுற்றுப் போனபின் எஞ்சியிருப்பவை அவர்கள் விட்டுச்சென்ற கற்பொருட்களே.

### இரணைமடு தேரிமணல் மேடுகளில் கண்டெடுக்கப்பட்ட சில கல்லாயுதங்கள், கல் உபகரணங்கள்

ஆதியில் வன்னிப்பகுதியில் வாழ்ந்த மக்கள் விட்டுச்சென்ற கல்லாயுதங்களும், கல்லுபகரணங்களும் கடற்கரையோரமாக உள்ள இரணைமடு தேரிமணற் குன்றுகளிடையே காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் இயற்கையாகக் கிடைத்த கற்களை உபயோகித்த மனிதன் பின்னர் இந்நிலையிலிருந்து ஒருபடி முன்னேறித் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பலவாறு அவற்றைச் செப்பனிடத் தொடங்கினான். இவ்வாறு செய்யும்போது முழுக்கல்லையும் செப்பனிடுவதற்குப் பதிலாக தனது தேவைக்காகப் பயன்படுத்தும் முனையை மட்டுமே செப்பனிட்டான்.

இயற்கையாக ஆற்றோரங்களிலும் மற்றிடங்களிலும் பாறையாகக் காணப்பட்ட “குவாட்ஸ்” (Quartz) கற்களைக் கொண்டே இக்கருவிகள் பெரும்பாலும் உருவாக்கப்பட்டன. இப்பாறைகளை நெருப்பைக் கொண்டு சூடாக்கி பின்னர் அவற்றின் மேல் நீரை ஊற்றியோ அல்லது மற்றொரு பெருங்கல்லால் அடித்தோ பிளக்க வைத்து, பின்னர் அவற்றை உடைத்து வேண்டிய ஆயுதங்களை இவர்கள் செய்திருக்கிறார்கள்9. இவ்வாறு பாறையை உடைக்கும்போது வெடித்துச் சிதறும் செதில்கள் (Flake Tools) மிகவும் கூர்மையாக இருப்பதனால் சவரம் செய்வதற்கும் நுணுக்கமாக வெட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டன. முழுக்கற்களையும் சிறப்பாகச் செப்பனிட்டு கைக்கோடரிகள் (Hand Axe) தயாரிக்கப்பட்டன. தட்டைக் கற்களைக் கொண்டு பிளப்பிகள் உருவாக்கப்பட்டன. கைக்கோடரிகளும் பிளத்தற் கருவிகளும் மரங்களை வெட்டுவதற்கும், மிருகங்களைக் கொன்று இறைச்சியை வெட்டி எடுப்பதற்கும், நிலத்தில் விளையும் கிழங்கு வகைகளை அகழ்ந்து எடுப்பதற்கும் உபயோகிக்கப்பட்டன.

பழையகற்கால மக்கள் 20 முதல் 40 பேரைக் கொண்ட குழுக் குடும்பமாக 50சதுர மீட்டர் அளவான ஓரிடத்தில் தங்கி வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்ந்தார்கள் எனக் கணிக்கப்படுகிறது. இவர்களது பிரதான தொழிலாக வேட்டையாடுதல் அமைந்திருந்தாலும் தமது உணவிற்காக மிருகங்கனின் இறைச்சியோடு மீன், கிழங்கு வகைகள், பழவகைகள் ஆகியவற்றையும் உட்கொண்டார்கள். ஓரிடத்தில் உணவு குறைந்ததும் கூட்டமாக வேறிடம் சென்று இவர்கள் தங்கினார்கள். வட இலங்கையின் உலர்ந்த வலயத்தில் (வன்னிப் பகுதி) ஒரு சதுர கிலோமீட்டருக்கு 0.8 மனிதர்கள் வரை வாழ்ந்தார்கள் எனக் கணக்கிடப்படுகிறது10. கடலிலிருந்து கிடைக்கும் கடலுணவுகளின் தாராளத்தால் இலங்கையின் வடக்கு - கிழக்கு கடற்கரையோரங்களில் சதுர கிலோமீட்டருக்கு 1.5 பேர் வரை வாழ்ந்தார்கள்.

### இடைக்கற்காலம்

இடைக்கற்கால மக்களின் பிரதான தொழில்களாக வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உணவு சேகரித்தல் போன்ற தொழில்களே அமைந்தன. பழைய கற்கால மனிதனைவிட இவனது வாழ்க்கை சற்று முன்னேற்றமடைந்து காணப்படுகிறது. ஆதியில் நாடோடியாகத் திரிந்த இம் மனிதன் ஓரளவு தொடர்ந்து ஓரிடத்தில் இருந்தது பற்றியும், தான் வாழ்ந்த சூழலை முன்னரைவிடக் கூர்மையாக அவதானித்து அதை மாற்ற முற்பட்டதையும் அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.11

இக்கால மனிதனால் காடுகள் அழிக்கப்பட்டதை, தாவரங்கள் விட்டுச் சென்ற மகரந்தப்பொடியின் (Pollen) படிவங்கள், எச்சங்கள் ஆகியவை எடுத்துக் காட்டியுள்ளன. இக்காலத்தில் காட்டு மரங்கள் விட்டுச் சென்ற மகரந்தப் பொடியின் எச்சங்கள் எண்ணிக்கையிற் குறைய, சிறு பற்றைகள், புல், பூண்டு ஆகியவை விட்டுச் சென்ற மகரந்தப் பொடியின் எச்சங்கள் மேலோங்கிக் காணப்படுவதை ஆதாரமாகக் கொண்டு இக்கால மனிதன் காட்டை அழித்துச் சூழலை வளம்படுத்த முற்பட்டான் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்திருக்கிறார்கள்.12

பழைய கற்காலத்தில் வாழ்ந்த பெரிய மிருகங்களின் இனங்கள்

பெருமளவுக்கு அழிந்துபோக, காடுகளில் காணப்பட்ட மான், மரை, முயல் ஆகிய சிறிய மிருகங்களை வேட்டையாட இக்கால மனிதன் கற்றுக் கொண்டான். கூர்மையாக்கப்பட்ட சிறிய (குறுணி) கற்களை அம்புகளிலும் ஈட்டிகளிலும் முனையாகப் பொருத்தி அவற்றைக் கொண்டு வேட்டையாடியதை அறிய முடிகிறது. இப்பண்பாட்டு மக்கள் காட்டுப் புற்களாகத் தோன்றிய பயிர்களிலிருந்து தானியங்களை அறுக்கவும், உணவுப் பண்டங்களை சிறு துண்டுகளாக வெட்டவும் தட்டையான பிளேட் போன்ற கல் அலகுகளைப் பயன்படுத்தினார்கள்.

**இரணைமடு – தேரியில் – கண்டெடுக்கப்பட்ட –இடைக் கற்கால – குறுணிக்கல் – ஆயுதங்கள்**

இச்சிறிய கற்கள் குறுணிக்கற்கள் (Microliths) என தொல்லியலாளர்களால் அழைக்கப்படுகிறது. வட இலங்கையில் பல இடங்களில் காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொல்லியற் சான்றுகள் குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரியனவாகும். இதன் காரணமாக இலங்கையின் இடைக்கற்காலத்தை குறுணிக்கற் பண்பாட்டுக் காலம் எனவும் அழைப்பார்கள். இக் குறுணிக் கற்கள் வன்னியில் இரணைமடு தேரிமணற் குவியல்களிலிருந்தும், மாந்தை (மாதோட்டம்), குருத்தன் குளம், பனங்காமம், உருத்திரபுரம், பூநகரி அகிய இடங்களிலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன.

இடைக்கற்கால மனிதன் நாயை தனது நண்பனாகப் பழக்கக் கற்றுக் கொண்டான். தவிர, மந்தை வளர்ப்பிலும் இக்கால மனிதன் ஈடுபட்டிருந்ததை இக்காலக் குடியிருப்புகளிற் காணப்படும் எலும்புக்கூடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இம்மிருகங்களில் ஆடு, எருது, பசு, செம்மறி ஆடு என்பன குறிப்பிடத் தக்கவை. இவ்வாறு மந்தை மேய்ப்பில் இக்கால மனிதன் அக்கறை காட்டியது அவனது நாகரிக வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பூநகரிப் பிராந்தியத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள் குறுணிக்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதற்கான சில ஆதாரங்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் போது கிடைத்துள்ளன. இவ்விடங்களில் இப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய சிறிய குவாட்ஸ் (Quartz) கல்லாயுதங்களும், குவாட்ஸ் கற்களைக் கொண்டு கல்லாயுதங்கள் ஆக்கும் போது ஏற்படும் செதில்கள் (Flakes) பலவும் கிடைத்துள்ளன. வெட்டுக்காட்டில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மற்றொரு வகையான சேட் (Chert) கற்கள் சில கிடைத்திருக்கின்றன. இவ்விடத்திலிருந்து குவாட்ஸ் கல்லாயுதங்களோடு உலோகத்தாலான மீன் பிடிப்பதற்குரிய ஊசியும் (Metal fish-hook) (பிற்காலத்திற்குரியது), பிளேட் போன்ற தட்டையான ஆயுதமும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன13.

மற்றைய நாடுகளில் இடைக்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் புதிய கற்காலம் எனப்படும். நாடோடிகளாக இடத்திற்கு இடம் பெயர்ந்து வேட்டையாடி, உணவு சேகரித்து வந்த மனிதன் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி விவசாயத்திலும், பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்ட காலம் இது. மனிதர்கள் கூட்டாக ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்க, அங்கே முதல்-கிராமங்கள் உருவாயின. இக்காலத்தில் செம்பு, ஈயம், வெண்கலம் (Bronze) போன்ற உலோகங்கள் அறிமுகமாயின. இதைத் தொடர்ந்து இரும்பு அறிமுகமான காலம் இரும்புக்காலம் எனப்பட்டது.

இலங்கையில்புதிய கற்காலம் தெளிவாக நிறுவப்படவில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இங்கே இரும்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாக அறியத்தருகின்றன.

**ஆதி இரும்புக்காலம்:**
**பெருங்கற்காலப் பண்பாடு**

வன்னியில் இடைக்கற்காலத் தொல்லியல் மையங்கள்.

இக்கால, விஞ்ஞான ரீதியான, காலக் கணிப்புகளின்படி இலங்கையில் இரும்பின் உபயோகம் இ.மு. 3380 ஆம் ஆண்டு காலத்தில் ஆரம்பமாகியிருக்கிறது. இக்காலம் முதல் கல்லாயுதங்களுக்குப் பதிலாக இரும்பினாலான ஆயுதங்களையும், கருவிகளையும் மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெருமளவு பயன்படுத்தினார்களாகையால் இக்காலம் இரும்புக்காலம் எனப் பெயர் பெற்றது. இக்காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகையால், இதை வரலாற்று உதயகாலம் என்றும் அழைப்பார்கள்.15

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஆதி இரும்புக்காலம் பெருங்கற்காலப் பண்பாட்டுக்காலம் எனவும் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இப்பண்பாட்டு மக்கள் இறந்தோரை அடக்கம் செய்ய ஈமச் சின்னங்களுக்குப் பெரிய கற்களைப் பயன்படுத்தியமை ஆகும். பெருங்கற்களினாலான இச் சமாதிகளுடன் மற்றும் பல வாழ்வியல் அம்சங்கள் பின்னிப் பிணைந்து இருப்பதனால் இது பெருங்கற் கலாசாரம் எனப் பெயர் பெறுகிறது.

புதிய கற்காலத்தில், கிழக்கு மத்தியதரை நாடுகளில் (Eastern Mediterranean) இறந்தோரின் சடலங்களை பெரிய கற்களினால் செய்யப்பட்ட குழிகளிலும், சமாதிகளிலும் புதைக்கும் வழக்கம் ஆரம்பமாகியது. இ.மு. 4.500 - 5.000 ஆண்டுகளில் மத்தியதரை நாடுகளில் வழக்கிலிருந்த இப் பண்பாடு இ.மு. 3,550ம் ஆண்டுகாலப் பகுதியில் தென்னிந்தியாவில் திராவிட மக்கள் மத்தியில் பரவியது. அங்கிருந்து இ.மு. 3.400 ஆண்டு காலப்பகுதியில் இப் பண்பாடு இலங்கையை வந்தடைந்தது.

தென்னகத்திலும் இலங்கையிலும் இறந்தோரைப் புதைக்கும் பண்பாட்டோடு வேறு சில அம்சங்களும் அவசியமான கூட்டாக




**இரணைமடு தேரியில் கண்டெடுக்கப்பட்ட இடைக்கற்கால குறுணிக்கல் ஆயுதங்கள்**

**நன்றி: S.U.தெரனியகல.**

இணைந்து ஒரு பெருங்கற்காலக் கலாசாரமாக உருவாகின. இக் கலாசாரத்தின் சிறப்பியல்புகளாக பின்வரும் ஆறு அம்சங்களும் அமைகின்றன:

நீர்ப்பாசனக் குளம்
நெல் வயல்கள்
குடியிருப்புகள்
இறந்தோரை அடக்கம் செய்த பெருங்கற் கல்லறைகள்
இரும்பு உபயோகம்
கறுப்பு-சிவப்பு மட்பாண்ட உபயோகம்.

இப் பெருங்கற் கலாசாரக் கல்லறைகளோடு தொடர்புடைய அடக்க முறையே தாழிப்புதையல் ஆகும். "மூன்றடி ஒன்பது அங்குல உயரமும், மூன்றடி ஆறு அங்குல விட்டமும் கொண்ட பெரிய தாழிகளில் (பானை) உட்கார்ந்த நிலையில் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன" என்கிறார் ஆதிச்சநல்லூரில் தாமிர பரணி ஆற்றங்கரை மேடுகளில் இத் தாழிகளை அகழ்வாய்வு செய்த தொல்லியலாளர் அலெக்ஸாந்தர் ரியா (Alexander Rea)16.

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் தென்னாசியாவிலே பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அது திராவிட மொழிகள் பேசும் தென்னிந்தியாவிலேதான் செறிந்து காணப்படுவதோடு சில தனித்துவமான அம்சங்களையும் கொண்டு விளங்குகிறது. இப்பண்பாட்டக்குரிய ஈமச்சின்னங்களின் வகையான முதுமக்கள் தாழிகள் (Urn burials), கல்லறைகள் (Cist burials), கற்கிடைகள் (Rock-cut burials)) என்பன விளங்குகின்றன. தென்தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் சங்க காலத்தில் புதைகுழியும், தாழி அடக்க முறையுமே பெருமளவு பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது17.

பெருங்கற்காலப் பண்பாட்டு அடக்க முறைகள் பண்டைய தமிழிலக்கியங்களில் பல இடங்களில் கூறப்படுகின்றன. இப் புதையல் முறைகளை–

"சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர்
தாழ் வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்" என்கிறது மணிமேகலை.18

தென்னிந்தியாவில் இரும்பின் அறிமுகம், நீர்ப்பாசனத்துடன் கூடிய பயிர்ச் செய்கை, கறுப்புச்சிவப்பு மட்பாண்ட உபயோகம், கட்டமைப்புடைய சமூகத்தோற்றம், அரச அமைப்பு என்பன இப் பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றன. சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகள் இப்பண்பாட்டின் பின்னணியிலே தோன்றியவையாகும்19. இத்தகைய ஒரு பண்பாடே கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஆயிரத்தாண்டு காலப் பகுதியில் இலங்கையிலும் பரவி நீர்ப்பாசன நாகரிகத்தை மையமாகக் கொண்ட நகரங்களும், அரசுகளும் தோற்றம் பெறக் காரணமாக இருந்தது என்பதை இந்நாட்டின் முக்கிய பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையின் பெருநிலப்பகுதியில் இப்பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் அநுராதபுரம், கதிரவெளி, பொம்பரிப்பு, வவுனியா, திசமஹாரகம, மாந்தை போன்ற இடங்களில் கண்டபிடிக்கப்பட்டுள்ளன. இப் பண்பாட்டோடு கூடிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டம் இலங்கை முழுவதுமே பரந்து காணப்

படுகிறது. தென்னிந்தியாவில் கி.மு. 1500ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்ற இப் பண்பாடு எவ்வாறு தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு எனப் பல்வேறு பண்பாடுகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்ததோ, அதே போல இலங்கையிலும் தமிழ், சிங்களப் பண்பாடுகள் தோன்றுவதற்கு இப் பெருங்கற்கால பண்பாடே காரணமாக இருந்தது என்ற கருத்தை பேராசிரியர் சிற்றம்பலம் முன்வைத்திருக்கிறார்.20

### பொம்பரிப்பு

இலங்கையின் மேற்குக் கடற்கரைக்குச் சமீபமாக மன்னாரிலிருந்து தெற்கே 89 கி.மீ. தொலைவிலும், புத்தளத்திற்கு வடக்கே 32 கி.மீ. தூரத்திலும் அமைந்திருப்பது பொம்பரிப்பு. இக்காலத்தில் வில்பத்து தேசிய சரணாலய வனத்தினுள் அமைந்திருக்கும் இவ்விடத்தில் மனிதர்கள் வசிப்பதில்லை. ஆனால், கிறிஸ்துதசாப்தத்திற்கு முற்பட்ட ஆயிரம் ஆண்டுகளாக தாழிப் புதையல்களை புதைக்கும் பெரியதொரு இடுகாடாக - ஈமவயலாக விளங்கியது பொம்பரிப்பு. 1970ஆம் ஆண்டில் பொம்பரிப்பில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட அமெரிக்காவின் பென்ஸில்வேனிய பல்கலைக்கழக ஆய்வாளர் திருமதி விமலா பேக்லி, நான்கு ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த இடுகாட்டில் 8,000 தாழிகளில் 12,000 பேர்வரை புதைக்கப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்.21 1990ஆம் ஆண்டில் இந்த இடுகாட்டை மேலாய்வுசெய்த சிற்றம்பலம் இந்த இடுகாட்டின் பரப்பளவு நான்கு ஏக்கரைவிட மேலும் மிகப் பெரியது எனக் குறிப்பிட்டிருக்கிறார்.22

0.66 மீட்டர் முதல் 1.22 மீட்டர் உயரமும் 40 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை விட்டமும் கொண்ட தாழிகள் நில மட்டத்திற்கு ஒரு மீட்டர் முதல் அரை மீட்டர் ஆழத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன. சில சமயம் ஒரே தாழியினுள் ஒரு வயதானவரதும், ஒரு சிறு பிள்ளையினதும் எலும்புக் கூடுகள் காணப்படுகின்றன. வயதானவர்கள் உட்கார்ந்த நிலையிலே புதைக்கப்பட்டிருக்கிறார்கள். தாழிகளின் அடியிலே இறந்தோர் வாழ்ந்த காலத்தில் உபயோகித்த பொருட்கள், சமயச் சின்னங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. இத்தாழிகள் அதன் வாய்களுக்குப் பொருந்தக்கூடிய அளவான மூடிகளால் மூடப்பட்டிருக்கின்றன.23

இப் பெரிய தாழிகளைச் சுற்றிவர சிறிய குடங்களில் உணவுப் பொருட்கள், அன்றாடப் பாவனைப் பொருட்கள் என்பன காணப்படுகின்றன. குடங்கள், சட்டிகள், குவளைகள், தட்டுகள் பலதரப்பட்ட உருவங்களிலும், பருமன்களிலும் காணப்படுகின்றன. இம் மட்பாத்திரங்கள் கறுப்பு-சிவப்பு, தனிக் கறுப்பு, தனிச் சிவப்பு ஆகிய நிறங்களில் காணப்படுகின்றன.24 இத்தாழிகளில் காணப்படும் எலும்புகளை ஆராய்ந்த மானிடவியல் விற்பன்னரான கென்னெத் கென்னடி தென்னிந்தியாவின் பெருங்கற் புதைகுழிகளில் காணப்பட்ட எலும்புகளை இவை ஒத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.25 மேலும், இலங்கையில் வாழும் இன்றைய மக்கள் இப் பெருங்கற்கால மக்களின் வம்சாவளிகளே என்பதையும் அறியத்தருகிறார் பேராசிரியர் கென்னடி.26

இப்பெருங்கற் கலாசாரத்தின் ஓர் அங்கமான கறுப்பு-சிவப்பு மட்பாண்டம் பற்றிய ஒரு வார்த்தை: பண்டைய திராவிட மக்களின் தனித்துவமான இம்மட்பாண்டங்கள் புதிய கற்காலத்தின் இறுதிப்பகுதியிலும், இரும்புக்காலத்தின் முற்பகுதியிலும் வழக்கத்திலிருந்தன. தென்னாசியாவில் சிந்துவெளியில் ஹரப்பா அகழ்வுகளின் போது இம் மட்பாண்டங்களை நாம் முதன் முதலாகச் சந்திக்கிறோம். தொடர்ந்து திராவிட மக்கள் வாழ்ந்த தென்னகமெங்கும் பெருங்கற்காலத்தில் இவை புழக்கத்திற்கு வந்தன. களிமண்ணினால் பானைகளை உருவாக்கி வனைந்த பின் அவற்றை தலைகீழாகப் புரட்டி கழுத்து வழியாக சூளையில் சுடவைக்கும் போது, சுடப்படும் பானையின் உட்பகுதி கறுப்பாகவும், வெளிப்பகுதி சிவப்பாகவோ அல்லது கறுப்பும் சிவப்பும் கலந்தோ அமையும் என்கிறார் இவற்றை ஆராய்ந்த அகழ்வாராய்ச்சியாளர் மோட்டிமர் வீலர் (Sir Mortimer Weeler).

### மாந்தை (மாதோட்டம்)

இலங்கையிலுள்ள துறைமுக நகரங்களில் மிகப் பழைமையானது மாந்தை. தேவார காலத்தில் இது மாதோட்டம் என்றும் பெயர் பெற்றிருந்தது. மனித நாகரிகம் வளர்ச்சி பெற்ற காலத்தில் உலகெங்கும் பெரும்பாலும் துறைமுகங்களே ஒரு நாட்டின் முதல் நகரங்களாக உருவாகின. இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்திய உபகண்டத்தின் தென்முனையில், இந்து சமுத்திரத்தின் மேற்கிலும் கிழக்கிலுமிருந்து வரும் கடற்பாதைகள் சங்கமிக்கும் கேந்திர நிலையமாக விளங்கியது மாந்தை. சீனாவிலிருந்து பட்டுத்துணிகளையும், பீங்கான் பாண்டங்களையும் கொண்டு கிழக்கு ஆபிரிக்கா நோக்கிச் செல்லும் கப்பல்களும், ரோமாபுரியிலிருந்து மதுச்சாடிகளை ஏந்தி வந்து பின் வாசனைத் திரவியங்களை ஏற்றிச் செல்லும் மரக்கலங்களும், அரேபியாவிலிருந்து வந்து கீழைத்தேச பண்டங்களையும் சரக்குகளையும் ஏற்றிச்செல்லும் பாய்க்கப்பல்களும் கடல்பாதையின் மத்தியிலிருந்த மாந்தைத்துறைக்கு குடிநீர் பெறவும், உணவுப்பண்டங்களைப் பெற்றுக்கொள்ளவும் வந்தவண்ணம் இருந்தன.

புராதன மாந்தைத்துறையிருந்த நிலப்பகுதி இன்று கடலிலிருந்து 200 மீட்டர் தள்ளி 30 ஹெக்டயர் பரப்பளவிலான மண்மேடாகக் கிடக்கிறது. இந்த மண்மேட்டின் மத்தியில் திருக்கேதீஸ்வரம் ஆலயம் அமைந்திருக்கிறது. 1980, 1982, 1984 ம் ஆண்டுகளில் சிக்காகோ பல்கலைக்கழக ஆய்வாளர் கலாநிதி ஜோன் காஸ்வெல் (John Carswell) தலைமையில் இந்த மண்மேட்டில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மண்மேட்டின் மேற்பகுதி உலகின் பலநாடுகளுக்குரிய வரலாற்றுக்காலக் கருவூலங்களைக் கொண்டிருக்கிறது. இவற்றில் பெரும்பாலானவை சீன, அரேபிய, கிரேக்க. ரோம, பாரசீக




**இலங்கையில் வடக்கு-வடமேற்காக முல்லைத்தீவிலிருந்து குதிரைமலை வரை தெடர்ந்து செல்லும் இரணைமடு தேரிமணற் தொடர். இலங்கையில் ஆதி மனிதர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் இந்த செம்மணல்**

நாடுகளுக்குரியனவாகும். அகழ்வுக் கிடங்குகளின் அடிப்பகுதியில் இவ்விடத்தில் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்பட்டன. குறுணிக்கல் ஆயுதங்கள், மீன்களின் எலும்புகள், கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகள் என்பன கண்டெடுக்கப்பட்டன. அகழ்வுக்கிடங்குகளின் அடியில் நீர் ஊறிக்கொண்டு வந்தமையால் மேற்கொண்டு அகழ்வுகளைத் தொடர முடியவில்லை.27 சமீபகாலத்தில் வெளிவந்த மாந்தையின் அகழ்வாராய்ச்சி பற்றிய விரிவான நூலில் இவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்ட குறுணிக்கற்களின் காலம் இ.மு. 3800 (1800 B.C.) ஆகக் கணிக்கப்பெற்றிருக்கிறது.28

### பூநகரி

தென்னிந்தியாவிலே பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்கள் வாழ்ந்த இடங்களில் வதிவிடம், இடுகாடு, குளம், வயற்பரப்பு, கறுப்பு-சிவப்பு மட்பாண்ட உபயோகம் ஆகியன முக்கியமான அம்சங்களாக விளங்கின. பூநகரியிலும் இத்தகைய பண்பாடும், ஈமச்சின்ன அமைப்பு முறையும் கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய நூற்றாண்டுகளிலிருந்தே பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. பெருமளவு மணற்பாங்கான இப்பிராந்தியத்திலே பெருங்கற்கள் காணப்படாததனால் அவ்விடங்களிலே தாழிகளும், குழிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.29

பூநகரியில் பள்ளிக்குடா, ஈழவூர் ஆகிய இடங்களிலே புதியனவாகக் கிணறுகள் வெட்டியபோது சில சந்தர்ப்பங்களில் மனித எலும்புகளுடன் கூடிய முழுமையான தாழிகளும், நீளப்புதைக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூட்டைச்சுற்றி பல மட்பாண்டங்களும் வெளிவந்திருக்கின்றன. அக் கிணறுகள் பின்னர் இடையிலே கைவிடப்பட்டதாக அறிய முடிகிறது. இவ்வாறு கைவிடப்பட்ட ஒரு கிணற்றின் மேற்பாகங்களிலிருந்து மட்பாண்ட ஓடுகள், மணிகள், கைவளையல்கள், இரும்பாணிகள், முழுமையான மட்பாண்டம் என்பன கிடைத்திருக்கின்றன.

பூநகரியிலே பல வருடங்களுக்கு முன்னர் காடுகளாக இருந்து தற்போது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தியாகம், குதிரை கட்டின தீவு, பல்லவராயன் போன்ற இடங்களிலும் இந்த அம்சங்களை அவதானிக்க முடிகிறது. இங்கு கைவிடப்பட்டுள்ள சிறு சிறு குளங்களை அடுத்துள்ள மேட்டுப்பாங்கான நிலங்களிலும், வயற்காணிப்பரப்புகளிலும் பெருந்தாழிகளின் உடைந்த பாகங்களும், சிறிய மட்பாண்ட ஓடுகளும், சுடுமண் உருவங்களும், மணிகள், கைவளையல்கள் முதலியவையும் மேலாய்வின்போது கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்விடங்களிலே புதிதாகப் பயிர்ச் செய்கைக்கு வயல்கள் திருத்தப்படும்போது பரந்து காணப்படும் தாழிகளின் உடைந்த பாகங்களைப் பொறுக்கி எடுப்பதற்காகவே தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதுண்டு. இவ்வாறு பொறுக்கி எடுக்கப்பட்ட ஓடுகள் வயற்கரைகளிலே குவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றை நோக்கும் போது ஆதிச்சநல்லூர், பொம்பரிப்பு போன்ற இடங்களைப் போல இங்கும் பரந்த அளவில் பெருங்கற்காலத் தாழிக்காடு இருந்திருக்கலாமோ என எண்ணத்

தோன்றுகிறது. இவ்விடங்கள் முழுமையான அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்படுமானால் மேலும்பல புதிய வரலாற்று உண்மைகள் வெளிவர இடமுண்டு.30

பூநகரியில் வெட்டுக்காடு, மண்ணித்தலை என்பன பெருங்கற் காலப் பண்பாட்டின் முக்கியமான தொல்லியல் மையங்கள் எனக் கூறலாம். இவ்விரு இடங்களிலுமிருந்தே இப்பண்பாட் டிற்கே சிறப்பாய் உரிய கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்களை பெற முடிந்தது. இச் சான்றுகள் காணப்பட்ட இடங்களிலிருந்து மேலும், தனிக் கறுப்பு, சிவப்பு, நரைநிற ((Grey Ware மட்பாண்ட ஓடுகள், சிவப்பு நிறமான முழுமையான இரு பானைகள், மண் விளக்குகள், சுடுமண் பாவைகள் (Terracotta Figures)) என்பன கிடைத்துள்ளன. இப்பண்பாட்டு மக்கள் ஓரளவுக்கு விவசாயத் தையும், பெருமளவிற்கு மீன் பிடித்தொழிலையும் மேற்கொண் டிருந்ததை அறிய முடிகிறது. இதை இச்சின்னங்கள் காணப்பட்ட இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட இரும்பினாலான கொழுவும் ((Plough Share), கத்திகளும், பரவலாகக் கிடைத்த மீன்பிடி ஊசிகளும் (Fish Hooks) உறுதிப்படுத்துகின்றன. இவை தவிர பலவடிவங்களிலே செய்யப்பட்ட மணிகள் (Beads), கை வளையல்கள் (Bangles), எலும்பினால் செய்யப்பட்ட கழுத்து மாலைகள் (Necklaces)), உலோகத்தால் செய்யப்பட்ட காற் சலங்கைகள், அலங்காரப் பெருட்கள் ஆகியவையும் இவ்விடங் களில் கிடைத்திருக்கின்றன31.

வடஇலங்கையைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலப் பண்பாடானது ஆதி இரும்புக் காலம் முதலாக, வரலாற்றுதய காலம் ஈறாக, வரலாற்று ஆரம்ப காலம் வரை நீடித்திருக்கிறது. கி.மு. 300 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பெருங்கற் காலத்தை ஆரம்ப பெருங்கற்காலம் என்றும், கி.மு. 300ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட பெருங்கற் காலத்தை பிற்காலப் பெருங்கற்காலம் என்றும் தொல்லியலாளர்கள் அழைப்பது வழக்கம்.32

**முடிவுரை**

இதுவரை கூறப்பட்ட விவரங்கள் வன்னிப் பகுதியில் வரலாற் றுக் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றி தொல்லியல் ரீதி யாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய தகவல்களாகும். இவ்விடங் களில் காணப்படும் பெருங்கற் கலாசாரச் சின்னங்கள் இங்கே திராவிட மக்களின் செறிவான குடியிருப்புகள் இருந்தமைக்கான உறுதியான ஆதாரங்களாகும். இற்றைக்கு 2300 ஆண்டு களுக்கு முன் (கி.மு. 300ல்) வன்னிநாட்டில் வரலாற்றுக்காலம் ஆரம்பமாகியது. வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தை வன்னி யில் கண்டெடுக்கப்பட்ட கி.மு. 300 ஆம் ஆண்டுக் காலத்திற் குரிய தமிழ்ப் பிராமிச் சாசனங்களும், பிராகிருத பிராமிச் சாசனங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

**உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்**

1. MACDOUGAL, DOUG (2004): Frozen Earth: The Once and Future Story of the Ice Ages.

2. University of California Press. THIAGARAJAH, SIVA (2011): Peoples and Cultures of Early Sri Lanka, Tamil Information Centre, London.

3. DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: An Ecological Perspective; Dept. of Archaeology, Colombo, p.167

4. THIAGARAJAH, SIVA (2011): Peoples and Cultures of Early Sri Lanka, Tamil Information Centre, London: 38-39.

5. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்.12

6. DERANIYAGALA, S.U. (2013): General Conclusions in Mantai City by the Sea by John Carswell, Siran Deraniyagala and Alan Graham, Linden Soft Verlag, Aichwald, Germany, p.511

7. MISHRA, S. (1995): Chronology of the Indian Stone Age, Man and Environment 20 (2): 11-16.

8. DERANIYAGALA, S.U. (1996): Pre and Protohistoric Settlements in Sri Lanka, in The Prehistory of Asia and Oceania Vol.5, Section 16, pp 277-285.

9. DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka (as above): pp 686-688. The gravel at Iranamau Formation had given varying dates of 125,000 BCE (M.Abeyaratne 1996), and 80,000 BCE (Oxford Archaeological Laboratory) from different sites. ABEYRATNE, M. (1996): Multi-dating Studies of Archaeological Sites, Unpublished Ph.D. dissertation, Australian National University, Canberra.

10. ALLCHIN, BRIDGET & ALLCHIN, RAYMOND (1968): The Birth of Indian Civilization, Harmondsworth, London: pp 96-99.

11. DERANIYAGALA, S.U. (1996): as above. pp 277-285.

12. சிற்றம்பலம், சி.க. (1999): பண்டைய தமிழகம், குமரன் பப்ளிக்ஷர்ஸ்: பக். 50-51.

13. DERANIYAGALA, S.U. (1996): as above.

14. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்.14

15. DERANIYAGALA, S.U. (2013): General Conclusions in Mantai City by the Sea by John Carswell, Siran Deraniyagala and Alan Graham, Linden Soft Verlag, Aichwald, Germany, p.511

16. GOONATILAKE, SUSANTHA (1981): The Formation of Sri Lankan Culture, Ancient Ceylon, No.4

17. REA, ALEXANDER (1915): Catalogue of Prehistoric Antiquities of Adichanallur and Perumbiar, Govt. Publications, Madras.

18. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்.15

19. மணிமேகலை: அதி. 6, வரி. 66-67.

20. SITRAMPALAM, S.K. (1980): The Megalithic Culture of Sri Lanka, Ph.D. Thesis, University of Poona.

21. SITRAMPALAM, S.K. (1980): ibid p.384.

22. BEGLEY, VIMALA (1981): Excavations of Iron Age Burials at Pomparippu; Part One: Excavations at Pomparippu 1970; Ancient Ceylon, No. 4, Colombo.

23. SITRAMPALAM, S.K. (1990): The Urn Burial site of Pomparippu of Sri Lanka, Ancient Ceylon, No. 7, Vol. 2, pp 237-307.

24. P.E.P. (1958): Report of the Archaeological Survey of Ceylon for 1957, Part IV, Colombo. BEGLEY, VIMALA (1981): as above, pp. 69-75.

25. BEGLEY, VIMALA (1981): ibid.

26. KENNEDY, K.A.R. (1975): The Physical Anthropology of the Megalithic Builders of South India and Sri Lanka, Canberra. KENNEDY, K.A.R. (1975): ibid pp. 75-80.

27. JOHN & PRICKETT, MARTHA (1984): Manthai 1980: Ancient Ceylon No.5.

28. CARSWELL, JOHN; DERANIYAGALA, SIRAN; GRAHAM, ALAN (2013): Mantai City by the Sea, Linden Soft Verlag, Germany, p. 511.

29. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்.18.

30. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்.16-17.

31. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்.18-20.

32. RAGUPATHY, PONNAMPALAM (1987): Early Settlements in Jaffna: An Archaeological Survey, Madras: p.181.

(இ.மு. இற்றைக்கு முற்பட்ட ஆண்டுகள்)

நன்றி: கலாநிதி தியாகராஜா



# கடையடைப்பு தேவையா?

129.04.2023

நேற்று முன்தினம், வெள்ளிக்கிழமை, வெடுக்குநாறி மலையில் பூசைகள் நடக்கத் தொடங்கியுள்ளன. வியாழக்கிழமை கச்சத்தீவிலிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கடையடைப்பு, அதற்கு அழைப்பு விடுத்த கட்சிகளைப் பொறுத்தவரை வெற்றிதான். எனினும், கடந்த வியாழக்கிழமை, யாழ்ப்பாணம், தையிட்டியில், தனியார் காணியில் இராணுவம் கட்டிய பெரிய விகாரையில் பூசை நடந்திருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஒரு நாள் கடையடைப்பு தொடர்பாக மூன்று விதமான விமர்சனங்கள் உண்டு. முதலாவது அதனால் எந்தப் பயனும் இல்லை, அது கொழும்புக்கு நோகாத ஒரு போராட்டம் என்பது. இரண்டாவது அது அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றிலடிப்பது என்பது. மூன்றாவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறும் விமர்சனங்கள். இவை மூன்றையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.




முதலாவதாக இது போன்ற போராட்டங்களால் பயன் இல்லை என்பது. இந்த ஒரு நாள் போராட்டம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது உண்மை. தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய போராட்டத்தை நடாத்திய மக்கள். இதுபோன்ற ஒருநாள் கடையடைப்புக்கள் கொழும்பின் கவனத்தையோ உலகத்தின் கவனத்தையோ தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருக்கப் போதுமானவை அல்ல. எனினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டதுக்கு எதிராகவும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் தமிழ்மக்கள் போராட வேண்டியிருக்கிறது. வடக்கு கிழக்கு இணைந்து ஒப்பீட்டளவில் ஒரு பெரிய திரளாக தமிழ் மக்கள் தமது எதிர்பைக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றையும் செய்யாமலிருந்து வெறுவாய் சப்புவதைவிட இது பரவாயில்லை.



அதேசமயம், கடந்த ஆண்டு தென்னிலங்கையில் தோன்றிய தன்னெழுச்சிப் போராட்டங்களோடு ஒப்பிடுகையில் இதுபோன்ற கடையடைப்புகள் படைப்புத்திறன் குறைந்தவை, யாந்திரீகமானவை. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கையிடமிருந்து எதையுமே கற்றுக்கொள்ளவில்லை. சமூக வலைத்தளங்களில் சிலர் விமர்சிப்பதைப் போன்று இது அரசியல்வாதிகளின் இயலாமையைக் காட்டுகிறது. ஒரு புதிய மக்கள் போராட்ட வடிவத்தைக் குறித்துச் சரியான விளக்கமோ, விசுவாசமான தேடலோ, தீர்க்கதரிசனம் மிக்க வழி வரைபடங்களோ இல்லாத வெற்றிடத்தில்தான் இது போன்ற யாந்திரீகமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே கடையடைப்பு ஒரு விதத்தில் தமிழ் அரசியலின் இயலாமையை காட்டுகிறது என்றும் சொல்லலாம்.

இரண்டாவது இப்போராட்டத்தால் அன்றாடங் காய்ச்சிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பது. அது உண்மை. அரசியல்வாதிகள் அனேகமாக அன்றாடங் காய்ச்சிகள் இல்லை. அன்றன்று உழைப்பவர்கள் இதுபோன்ற போராட்டங்களால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தன் அரசியல் இலக்குகளை அடைவதற்காகச் செய்யக்கூடிய தியாகங்களுக்குள் அந்த ஒரு நாள் உழைப்பும் அடங்கும். தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய தியாகங்களைச் செய்த மக்கள். ஒரு நாள் உழைப்பைக் காட்டி இதுபோன்ற போராட்டங்களை கொச்சைப்படுத்த முடியாது.

மூன்றாவது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வைக்கும் விமர்சனங்கள். அவை வழமையான வாய்ப்பாட்டு விமர்சனங்கள்தான். போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகளுக்கும் அதற்குத் தகுதி இல்லை, அவர்கள் விசுவாசமாகப் போராடவில்லை என்ற பொருள்பட முன்னணி குற்றம் சாட்டியிருக்கிறது.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் உத்தேச பயங்கரவாத ஏதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் தமிழ்மக்கள் போராட வேண்டும். அது அரசுக்கு எதிரான போராட்டம். அப்போராட்டத்தை எதிர்ப்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக யாருக்குச் சேவகஞ் செய்யும்?

அந்த ஏழு கட்சிகளுக்கும் போராடும் தகமை இல்லையென்றால் அல்லது அவை விசுவாசமாகப் போராடவில்லையென்றால், விசுவாசமான ஒரு போராட்டத்தை துணிச்சலான ஒரு போராட்டத்தை ஏன் முன்னணி ஒழுங்கு செய்யக்கூடாது ?

முன்னணி தன்னை ஏனைய கட்சிகளைவிடத் தூய கட்சியாகவும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அதிகம் விசுவாசமான கட்சியாகவும் காட்டிக் கொள்கிறது. அதைவிட முக்கியமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசாகவும் அது தன்னைக் காட்டிக்கொள்கிறது. அந்த அடிப்படையில் அந்த இயக்கத்தின் நினைவு நாட்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அன்னை பூபதியின் நினைவு மண்டபத்திலும் முன்னணிக்கும் கிழக்கைச் சேர்ந்த சிவில் அமைப்புகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

அது ஓர் அருவருப்பான முரண்பாடு. அன்னை பூபதியை நினைவு கூர்வதற்கென்று ஒரு பொதுக் கட்டமைப்பு அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்களும் மதத் தலைவர்களும் அன்னையின் குடும்பத்தவர்களும் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் முன்னணி அப்பொதுக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. இது திலீபனின் நினைவுத் தூபிக்கு முன் ஏற்பட்ட முரண்பாட்டை நினைவுபடுத்துகின்றது. புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கு தனக்குத்தான் அதிகம் உரித்தும் தகுதியும் உண்டு என்று முன்னணி கருதுகின்றது. அதன்மூலம் புலிகள் இயக்கத்தின் விசுவாசமான தொடர்ச்சியாகவும் அக்கட்சி தன்னை காட்டிக்கொள்ள விளைகின்றது. ஆனால் அதை அவர்கள் தமது செயற்பாட்டில் நிரூபிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியலைத் தொடர்வது என்பது,அதுவும் மிதவாத அரசியலில் அதைத் தொடர்வது என்பது சாராம்சத்தில் அந்த இயக்கத்தைப்போல அர்ப்பணிப்புகளுக்கு தயாராக இருப்பதுதான். ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக முன்னணி அப்படிப்பட்ட தியாகங்களைச் செய்திருக்கின்றதா?

பொலிசாரோடும் படைகளோடும் நெத்திக்கு நேரே மோதுவதும், துணிச்சலாகக் கதைப்பதும், தள்ளுமுள்ளுப்படுவதும், சில மணித்தியாலங்கள் சிறையில் இருப்பதும், சாகசச் செயல்களே. அவற்றைத் தியாகம் என்று கூற முடியாது. தமிழ் மக்கள் கடந்துவந்த செயற்கரிய தியாகங்களோடு ஒப்பிடுகையில் இவையெல்லாம் தியாகங்களா? திலீபனையும் பூபதியையும் படங்களாக வாகனங்களில் காவித் திரிவது மட்டும் போதாது. அதைவிட ஆழமாக திலீபனைப்போல பூபதியைப்போல உண்ணாவிரதம் இருப்பதற்கு எத்தனை பேர் தயார்?

கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகள் மட்டுமல்ல, கடையடைப்பைப் பரிகசித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடந்த 13 ஆண்டுகளாக கொழும்பின் கவனத்தையும் உலகத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் போராடத் தவறியிருக்கிறது. அரசியலில் மற்றவர்களை விமர்சிப்பதால் ஒரு கட்சி தூய்மையானது ஆகிவிடாது. மாறாக மற்றவர்கள் செய்யத் தவறியதைத் தான் செய்ய வேண்டும். மற்றவர்களைத் துரோகிகளாக்குவதால் ஒருவர் தியாகிவிட முடியாது மாறாக தான் செய்யும் தியாகங்களால்தான் ஒருவர் தியாகியாக முடியும்.

தமது மக்கள் மத்தியில் மட்டுமல்ல, அனைத்துலக அரங்கிலும் தமிழ் அரசியலின் அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் தமிழ்க் கட்சிகள் உழைத்திருக்கின்றனவா? கடந்த 13ஆண்டுகளில் தமிழ்க்கட்சிகள் அனைத்துலக அளவில் சம்பாதித்த புதிய நட்புகள் எத்தனை? உள்ளூரில் சக தமிழ்க் கட்சிகளோடு தந்திரோபாயக் கூட்டுக்களைக்கூட வைத்துக் கொள்ளமுடியாத கட்சிகள், எப்படி வெளியரங்கில் உலக சமூகத்தோடு கூட்டுக்களை வைத்துக் கொள்வது?

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் அந்தஸ்தை மதிப்பிடுவதற்கு ஆகப்பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். சில மாதங்களுக்கு முன் கனடாவுக்கு வெளிக்கிட்ட 303 தமிழர்கள் சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது காப்பாற்றப்பட்டு வியட்நாமில் இடைத்தங்கல் முகாமில் வைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒரு தொகுதியினர் நாடு திரும்பி விட்டார்கள். அவர்கள் விருப்பத்தோடு நாடு திரும்பவில்லை. இந்த நாட்டில் இருக்கப் பிடிக்காமல்தான் புலம்பெயர முயற்சித்தார்கள். அவ்வாறு திரும்ப விரும்பாதவர்கள் ஐநாவுக்கு மீண்டும் மீண்டும் மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மேன் முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

அவ்வாறு மேன்முறையீடு செய்த சிலர் நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் சிலருடைய பரிந்துரைக் கடிதங்களையும் சமர்ப்பித்ததாக அறிய முடிகிறது. ஆனால் வியட்நாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழ் புலம்பெயரிகளை, ஐநா, ஐ.ஓ.எம் போன்றன சட்ட விரோதக் குடியேறிகளாகத்தான் பார்க்கின்றன. அவர்களை அரசியற் காரணங்களுக்காக குடி பெயரை முற்பட்டவர்கள் என்று பார்க்கவில்லை என்று தெரிகிறது. அதனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய கடிதங்களை மேற்சொன்ன அனைத்துலக நிறுவனங்கள் பொருட்படுத்தவில்லை. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் படிப்படியாக நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

புலம்பெயரிகளின் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளை உலகப்பொது அமைப்புக்கள் பொருட்படுத்தவில்லை என்று தெரிகிறது. அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு உலகப்பொது அமைப்புகள் கொடுக்கும் மரியாதை அவ்வளவுதான். அப்படியென்றால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஐநா போன்ற கட்டமைப்புகளின் மீதும் உலகின் வெளியுறவு கட்டமைப்புகளின் மீதும் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்த முடியும்?

இதுதொடர்பாக தமிழ்க் கட்சிகளிடம் ஏதாவது வழிவரைபடங்கள் உண்டா? அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டு தமிழர்களை அரவணைக்க வேண்டிய தேவை உலகில் எந்த ஒரு அரசுக்காவது உண்டா? அரசுகள் எது பலமோ, எது தேவையோ அதைத்தான் நாடிவரும். எங்கே நீதி இருக்கிறது என்று பார்த்து நாடி வருவதற்கு பூமியொன்றும் தேவ ராஜ்ஜியம் அல்ல. தமிழ் மக்கள் தமது பேர பலத்தை அதிகப்படுத்த வேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியை பெரும்பாலான தூதரகங்களும் ஐநாவும் ஆர்வத்தோடு கவனித்தன. ஏன் தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சி போராட்டங்களையும் வெளிநாட்டு தூதரகங்கள் ஆர்வத்தோடு கவனித்தன. ஆர்வத்தோடு கையாண்டன என்று கூடச் சொல்லலாம். தமிழ் மக்களுக்கான நீதியைப் பெறப்போவதாக கூறிக் கொள்ளும் கட்சிகள் முதலில் தொடர்ச்சியான போராட்டங்களை ஒழுங்கமைக்க வேண்டும்.




கடந்த 13 ஆண்டுகளில் வெற்றி பெற்ற எல்லா மக்கள் போராட்டங்களும் ஒரு கட்சிப் போராட்டங்கள் அல்ல. குடிமக்கள் சமூகங்களோடு இணைந்த பல கட்சிப் போராட்டங்கள்தான். எனவே போராடத் தெரியாத அல்லது போராட முடியாத கட்சிகள் கடையடைப்புக்கு அழைப்புவிடுகின்றன. அதேசமயம் அப்போராட்டம் பிழை என்று கூறும் கட்சியும் கடந்த 13 ஆண்டுகளாக சின்னப் பிள்ளைகளுக்கு கண்ணாடியில் நிலவை காட்டும் அரசியலைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

நன்றி: நிலாந்தன்










விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**

# போர்க்கால செய்திகளின் ஆதர்சக் குரல்! வாழ்நாள் ஊடகர் பொன். மாணிக்கவாசகம்

12.03.2023



ஈழத்தின் போர்க்கால நாட்களில் இரவு 9.15மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்கமாட்டார்கள்.

**இடர்மிகு காலத்தின் குரல் :**

நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்திவந்த, ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகம் இன்று 12.4.2023 இன்னுயிர் ஈந்தார்.

யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை துணிவுடன் பயன் படுத்திய வரும், பத்திரிகைத் தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு சிறந்த ஊடகவியலாளராகச் சேவையாற்றிய திரு. பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.

போர்க்காலத்தில் வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல் என்ன என்பதை காதுகொடுத்துக் கேட்க காத்திருந்த உலகத் தமிழ் மக்கள் அவரை என்றும் மறக்கமாடடார்கள்.

வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல்கள் அக்காலகட்டத்தில் அவரது செய்திகளை மாத்திரமே நம்பக்கூடியதாக இருந்தது. பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகயாளராக ஆற்றியசேவையும், அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாதுஆற்றிய பணிமறக்க முடியாதவை. கல்வி, சுகாதாரம், அரசியல் களங்களில் உண்மை நேர்மை துலங்கும் வகை செய்திகள் தந்த மாண்பு மகத்தானவை.

**வாழ்நாள் சாதனையாளர் விருது :**

கடந்த வருடம் 13.12.2023இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வீரகேசரியிலும், பி.பி.சி.யிலும் நீண்டகாலம் ஆபத்தான ஒரு யுத்தப் பகுதியிலிந்து செய்தி சேகரிப்புப் பணியை துணிச்சலுடன் - திறம்படச் செய்துவந்தவர். அதனைவிட வேறு சில சர்வதேச ஊடகங்களிலும் அவர் பணியாற்றியிருக்கின்றார்.

அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் “கால அதிர்வுகள்”, “வாழத் துடிக்கும் வன்னி”, “மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்” என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

மறைந்த வாழ்நாள் சாதனையாளர் பொன்னையா மாணிக்கவாசகம்

தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத்துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித்திருந்தார்.

இந்த நூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் யாவும் வீரகேசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புகள் என்பது வீரகேசரிக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

**தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர்:**

தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர், அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.

ஒரு முழு நேர ஊடகவியலாளராக - சுயாதீனமாகப் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களின் அடிப்படையில் சில நூல்களையும் எழுதியிருக்கின்றாா. அவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகயாளராக ஆற்றிய சேவை. அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாதுஆற்றிய பணிமறக்க முடியாதவை.

**‘வென்மேரி’ விருது கௌரவம் :**

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 18.8.22 நடைபெற்ற “வென்மேரி விருதுகள்” விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ. மாணிக்கவாசகம் அவர்கள் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

”வென்மேரி அறக்கட்டளை”யின் முதலாவது விருதுவிழாவான நிகழ்வு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விழா என்ற மகுடத்துடன் நடைபெற்ற இந்த விழாவில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தார்கள். மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை முக்கியமானதாகும்.

நன்றி: ஐங்கரன் விக்கினேஸ்வரா



# சமயோசிதம்!

**இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரின வாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக் குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

**இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந் தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப் பட்டுள்ளன.**

**சிங்கள வெறிப்படை ,**

**"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப் பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணி வுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...**

**எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.**
**அவற்றில்... இருந்து.**



மக்கள் மனதில் இருந்த பதற்றம், பீதி தீவிரமடைந்தது.

நவீனரக ஆயுதங்களுடன் இந்திய இராணுவம்...

“கிரனேட்“ டுகளுடன் ஒரு விடுதலைப் புலி...

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப் போகிறது?...

அங்கு நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் இந்தக் கேள்வி.

## சமயோசிதம்!

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் ஒதுக்குப்புறமான கிராமம்.

அன்றும், வழமைபோல்... அதே விடியல்.

இந்திய வல்லாதிக்கக் கரங்களில் இருந்து, அந்த இயந்திரத் துப்பாக்கிகளின் சடசடத்த குமுறல் அக்கிராமத்து மக்களைத் துயிலெழுப்புகின்றது.

ஆனால்... எங்கும் மயான அமைதி.

அந்தக் காலைவேளையிலும்,

சேவல் கூவவில்லை...

காகம் கரையவில்லை...

கீச்சிடும் குருவிகள் இரைதேடிப் பறக்கவில்லை...

மறைவிடம் ஒன்றில் இருந்து, எமது வீரன் ஒருவன் சேதி அறிந்துவர வீதிக்கு வருகின்றான்... வீதி வெறிச்சோடிக் கிடக் கின்றது. ஒரு தெரு நாயைக்கூட வீதியில் காண முடியவில்லை.

எமது தோழன் சுற்றுமுற்றும் அவதானித்துவிட்டு, சந்திக் கடையடிக்கு மெல்ல நடக்கலானான்.

கடையடியில் ஒரளவு ஜனசந்தடி காணப்பட்டது.

ஆனால் ஒவ்வொருவருடைய முகத்திலும் பயம் இழையோடியிருந்தது. அதிகாலையிலும் கேட்ட வெடிச்சத்தங்கள் ஏற்படுத்தியிருந்த பதற்ற நிலை, சற்றும் தணியாமல் இருந்தது.



எமது தோழன் கடைக்குள் சென்று, கடைக்காரரிடம் “அண்ணை! என்னவாம் உங்கால சத்தம்...? ஆரையாம் சுட்ட வங்கள்...?” என்று கேட்கவும், வேகத்துடன் கூடிய இரைச் சலுடன் வந்த ஒரு ஜீப் சந்தியடியில் நிற்கவும் சரியாக இருந்தது.

அந்த ஜீப்பிற்குள்...

இந்திய வல்லாதிக்கத்தின் ஆறேழு கவசத் தொப்பிகளும், இந்திய ஆக்கிரமிப்பாளனுக்கு அடிமைச் சேவகம் செய்யும் சில தேசத்துரோகிகளின் வெள்ளை உடைகளும் தெரிந்தன.

மக்கள் மனதில் இருந்த பதற்றம், பீதி தீவிரமடைந்தது.

நவீனரக ஆயுதங்களுடன் இந்திய இராணுவம்...

“கிரனேட்” டுகளுடன் ஒரு விடுதலைப் புலி...

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப் போகிறது?...

அங்கு நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் இந்தக் கேள்வி.

ஜீப்பில் இருந்து திடுதிப்பெனக் குதித்த இராணுவத்தினா் அவ் விடத்தில் நின்றவர்களைப் பிடித்து வரிசையாக நிறுத்திச் சோதனையிட ஆரம்பித்தனா்.

நிலைமை சோசமடைந்துகொண்டிருப்பதை எமது தோழன் உணர்ந்து கொண்டான் அவனது கைகள் இடுப்பிலிருந்து குண்டுகளையும் கழுத்தில் தொங்கிய குப்பியையும் தொட்டுப் பார்க்கின்றன.

அவன் சிந்திக்கிறான். முடிவில் ஒரு தீர்க்கமான முடிவெடுக்கின் றான். என்னைச் சோதனையிடவும் ஒரு ஆக்கிரமிப்பாளன் வருவான். அப்போது “கிரனேட்” டுக்களை வீசித்தாக்கிவிட்டுத் தப்பி ஓடிவிடலாம்.

அப்போது, இராணுவத்தினர் கடையை நோக்கி வரவும் ஆறுதலாக வந்துகொண்டிருந் ஒரு சைக்கிள் கடைக்கு முன்னால் நிற்கவும் சரியாக இருந்தது.

சைக்கிளில் இருந்த பெரியவர் கடைக்குள் பார்த்தார். அவருக்கு நிலைமை புரிந்துவிட்டது. திடீரென...

"எட தம்பி! உன்னையல்லோ சீனி வாங்க அனுப்பினனான்... இஞ்ச வந்து ஏமிலாந்திக் கொண்டு நிக்கிறாய்...? வா! வந்தேறு சைக்கிள்ள வீட்டை போவம்" என்றார் அந்தப் பெரியவர்.

பெரியவர் சொல்லியதன் "அர்த்தத்தைப்" புரிந்து கொண்ட எமது தோழன், சைக்கிளில் ஏறிக்கொள்கிறான்.

மெதுவாக நகர்ந்த சைக்கிள் அடுத்த வளைவு திரும்பி சில மீற்றர் தூரத்தில் நின்றது.

அப் பெரியவர்...

"தம்பி, நாங்கள் வயதுபோன கிழடுகள்தான். ஆனாலும் நாட்டுக்காகச்சாகிறவங்களுக்கு எங்களால் ஏலக்கூடியதைச் செய்வம். கவனம்! உது வழிய வருவாங்கள். பார்த்துப் போமோனை!"

சொல்லிவிட்டு பெடல் கட்டையை மிதித்தார்.

சைக்கிள் மெதுவாக நகரத் தொடங்கியது.

தமிழீழம் - சித்திரை 1989



# 05.05.1976

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப்புலிகள் பிறப்பு

# ஆர்மேனிய இன அழிப்பை அங்கீகரித்த சர்வதேசம்! ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன்?

21.04.2023

ஆர்மேனிய மக்கள் மீது நடந்தேறிய இனஅழிப்பின் நினைவு நிகழ்வுகள் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 24ஆம் நாளன்று நடாத்தப்பட்டு வருகின்றது.







**ஆர்மேனிய இன அழிப்பு :**

ஆர்மேனிய இன அழிப்புக்கும் ஈழத்தில் இறுதியாக நிகழ்த்தப் பட்ட முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கும் இடையில் பல ஒற் றுமைகள் உள்ளன. இரண்டும் இன அடிப்படையிலான குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது தெட்டத் தெளிவாக தெரி கிறது.

ஆர்மேனிய இனஅழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாளன்று ஒட்டோமன் துருக்கியர்கள், ஆர்மேனிய மக்களை சுற்றி வளைத்துக் மேற் கொள்ளப்பட்ட படுகொலையோடு தொடங்கிய இனஅழிப்பு, ஒட்டு மொத்தமாக 15 இலட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலை யாக நடந்தேறிய ஓர் வரலாற்று கொடூரமாகும்.

ஆர்மேனியாவிலும், ஈழத்தில் தமிழர் மீதான இனப்படு கொலைகள் திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டன என்பதற்கு பல சான் றுகள் உள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட பின்னரும், இற்றை வரை துருக்கி இந்த கொடூர பாதக செயலுக்கு பொறுப்புக் கூற இல்லை. அத்துடன் அதனை ஏற்றுக் கொள்ளவும் இல்லை என்பதே மிகவும் கண்டனத்துக்கு உரியதாகும்.

ஆர்மேனிய இனஅழிப்புக்கும் ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட முள்ளி வாய்க்கால் இன அழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இந்த இரு நிகழ்வுகளிலும் இன அடிப்படையிலான எழுந்த குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

**கூட்டுத் தண்டனையா இனஅழிப்பு ?**

இக் கோரமிகு குற்றங்களை புரிந்தவர்கள், போரினால்தான் இக்கொலைகள் இடம்பெற்றன எனக் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றார்கள். அத்துடன், பயங்கரவாதத்திற்கு எதிரான நட வடிக்கைகளில் இவை தவிர்க்க முடியாதவை எனக் கூறி நியாயப் படுத்தவும் முயல்கின்றார்கள்.

இரு தேசத்திளிலும் இனஅழிப்பானது கூட்டுத் தண்டனையாக பாரிய அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆர்மேனிய மக்களுக்கு துருக்கியர்களால் இழைக்கப்பட்டது இனஅழிப்பு என்பதை இன்று உலகில் 20 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆயினும் ஒட்டோமான் பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த துருக்கிக் குடியரசு இந்நிகழ்வை இனப்படுகொலை எனக் கூறுவதை மறுத்து வருகிறது.

அண்மைக் காலத்தில், இந்த இனப்படுகொலைகளை அங் கீகரிக்கப் பல நாடுகளும் அமைப்புகளும் துருக்கியைக் கோரி வருகின்றன. இது வரையில் 20 நாடுகள் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் இனப்படுகொலைகளே என அதி காரபூர்வமாக அறிவித்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் நடந்த இனப் படுகொலையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 29 அக் டோபர் 2019 அன்று ஏற்றுக்கொண்டது.

துருக்கியின் பேரரசு தன் படைபலத்தால் ஆர்மேனிய மக் களைக் கொன்று இனப்படுகொலையே என்று பல நாடுகள் தீர்மானம் நிறைவேற்றினாலும், துருக்கி அரசு ஆர்மேனிய இனப்படுகொலைக்கு எச்சான்றும் இல்லை என மறுத்துள்ளது.

ஆர்மேனியாவில் நிகழ்ந்தது இனப் படுகொலை என்பதை ஏற்றுக் கொள்ளுமாறு துருக்கி நாட்டைக் கோரும் தீர்மானம் ஒன்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**ஈழத்தமிழர் இனப்படுகொலை :**

2009 போர் முடிவின் பின்னர் இலங்கையில் தமிழினத்தின் மீது நடபெற்றது இனஅழிப்பு அல்ல என்பதனை நிலைநாட்ட சில சர்வதேச சக்திகள் முனைந்து வருகின்றன.

ஆயினும் உலகத் தமிழ் மக்கள் ஈழத்தில் நடந்தது இனஅழிப்பே என்பதில் உறுதியாக உள்ளனர். தமிழ் மக்களுக்கு நீதி கிடைப் பதற்கு உலக நாடுகள் செயலாற்ற வேண்டும்.

**புலம்பெயர் ஆர்மேனிய மக்கள் சக்தி:**

ஆர்மேனியாவிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் புலம்பெயர் மக்களின் மன உறுதியினாலும் இடைவிடா முனைப்புக் களினாலும் இன்று அவர்களிடத்தில் பல நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆலோசனைக் கூடங்கள், ஊடகங்கள் எனப பலவும் இயங்கி வருகின்றன.

கொடூரமான இனவழிப்பின் பின் ஆர்மேனிய மக்களை உலகெங்கும் புலம்பெயர வைத்தது. புலம்பெயர்ந்த ஆர் மேனிய மக்கள், உலகில் பலம் வாய்ந்த புலம்பெயர்ந்த சமூகக் கட்டமைப்புகளில் முக்கியமான தரப்பாகும். அவர்கள் தனித்து உணர்வுரீதியான செயற்பாடுகளுடன் மட்டும் தமது மட்டுப் படுத்தவில்லை.

**சோவியத்தில் ஆர்மேனிய தேச உருவாக்கம் :**

சோவியத் ஒன்றிய காலத்திலேயே ஆர்மேனிய தேச உருவாக் கத்தில் சொந்த நிகழ்ச்சி நிரலில் நேர்த்தியான நிர்வாக முகா மைத்துவத்தோடு தமக்குரிய செயற்திட்டங்களை முன்னெடுத்து வந்தார்கள்.

சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் ஆர்மேனியா தன் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அடைந்துள்ளது. ஆயினும் ஆர்மேனிய மக்கள் துருக்கியால் நிகழ்த்தப்பட்ட இக் கொடிய அநீதி இனி ஒரு போதும் நடைபெறாமல் தடுப்பதற்கும் வழி வகுத்து, தமது உறுதியான நிலைப்பாட்டை எடுத் துள்ளனர்.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் கூறியது போல "ஒரு கொடுமையை மறைப்பது அல்லது மறுப்பது என்பது, காயம் ஒன்றிலிருந்து இரத்தம் ஓடுவதைத் தடுப்பதற்கு கட்டுப்போடாமல் இருப்பதை ஒத்தது" என்ற கூற்று ஆர்மேனிய மக்களுக்கும் ஈழத்தமிழர்க் கும் மிகவும் பொருத்தமாகும்.



இன்றைய உலகில் பல நாடுகள் ஆர்மேனிய இனஅழிப்பை அங்கீகரித்து உள்ளன. ஆயினும் சர்வதேசம் ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன் என்பது தமிழ் மக்களை மாற்றாந் தாய் மனப்பாங்குடன் புறக்கணிப்பது போல தென்படுகிறது.

நன்றி: ஐங்கரன் விக்கினேஸ்வரா


முள்ளிவாய்க்கால் நினைவு நாள்
Mullivaikkal Remembrance Day
ஈழத்தமிழின அழிப்பு நாள்
Eelam Thamil GENOCIDE DAY
தமிழ்த்தேசிய துக்க நாள்
Thamil National MOURNING DAY
2009 மே May 18
2023 14 Years ஆம் ஆண்டு
Only in 2009 Over 146. 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.
1948 தொடக்கம் தமிழீழத்தில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...
Since 1948 Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government
The Genocide of Thamils in Sri Lanka's one of the biggest tragedies of 21st century and the World still remains Silent.
Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Thamils
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of the Thamils is the Homeland of Thamileelam சங்கத்தமிழ்